# செங்குந்த மித்திரன்

8 - OCT 1928

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி,

தொகுதி - ௨ | விபவஹு - புரட்டாசிமீ | பகுதி - கூ

உள்ளடக்கம்.


| | |
|---|---|
| கூட்டுறவு இயக்கமும் கைத்தறி நெசவும் ... | உாகஎ |
| ஆராய்ச்சிப் பகுதி : ஈட்டி எழுபது ... | ரூாஉ |
| குலதிலகர் பகுதி : குகனேரியப்ப நாவலர் ... | ரூாச |
| பொது விஷயங்கள் : கொலை மறுத்தல் ... | ரூாரு |
| சுகாதாரப் பகுதி : முறைஜுரம் அல்லது மலைக்காய்ச்சல் ... | ரூாஎ |
| மாதர் பகுதி : சீர்சால் மகளிர் ... | ரூாய |
| ஒரு சம்பாஷணை ... | ரூாகரு |
| நாவல் பகுதி : முன்னாளும் இந்நாளும் ... | கூாகச |
| செங்குந்தர் கிளர்ச்சி ... | கூாகஅ |
| ஒட்டக்கூத்தர் திருநாள் ... | ரூாஉரு |
| விகடக் களஞ்சியம் ... | கூாஉஎ |
| செங்குந்தர் பஞ்சாங்கம் ... | கூாஉஅ |


தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

நெ. 31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை.

## செங்குந்தமித்திரன் சில முக்கியமான குறிப்புக்கள்.

(1) நமது பத்திரிகை ஒவ்வொரு இங்கிலீஷ் மாதமும் நான்காம் தேதி தபாலில் போடப்படும். இதில் தவறுதலேனும் தவக்கமேனும் நேராது. எந்தச் சஞ்சிகையாவது யாருக்காவது எம்மாதமேனும் கிடைக்காமலிருந்தால் அவர் தபால் அதிகாரிகளுக்கு மனு எழுதி எமக்கும் தெரிவிக்கவேண்டும்.

(2) சந்தாதாரர் எந்த மாதத்திற் சேரினும் தைமாதம் முதற்கொண்டே சேர்ந்ததாகக் கணக்கிடப்பட்டு அது முதலுள்ள சஞ்சிகைகள் அவர்களுக்குச் சேர்த்தனுப்பப்படும்.

(3) சந்தாதாரர்கள் அனுப்பும் கடிதங்களிலும் மணியார்டர்களிலும் அவரவர்களுடைய் சந்தா நெம்பரைக் குறிப்பிட்டு எழுதுதல் வேண்டும். சந்தா நெம்பர்கள் போடாத கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

(4) புதிய சந்தாதாரர்கள் அனுப்பும் கடிதங்களிலும் மணியார்டர்களிலும் 'புதிய சந்தாதார்' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

### விளம்பர விகிதங்கள்.

'செங்குந்த மித்திர'னில் விளம்பரஞ் செய்ய விரும்புவோர் கீழ்க்கண்ட விகிதம் முன் பணமாகக் கட்டணஞ் செலுத்தவேண்டும். மாதம் மாதம் 4,000 பிரதிகள் அச்சாகின்றன. ஜாதிய பத்திரிகைகளுள் இதற்கு மேலான பத்திரிகை யில்லை :—

| | | ஒரு வருஷம். | ஆறு மாதம். | மூன்று மாதம். | ஒரு மாதம். |
|---|---|---|---|---|---|
| ஒரு பக்கம் | ரூ. | 100 | 50 | 26 | 10 |
| ½ பக்கம் | ,, | 60 | 30 | 16 | 6 |
| ¼ பக்கம் | ,, | 40 | 20 | 11 | 4 |

மானேஜர், 'செங்குந்த மித்திரன்' ஆபீஸ், 31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை.

---


முதல்தரமான வேலைப்பாடு! நம்பிக்கையான வேலைக்காரர்கள்!!

## நகைகள்! நகைகள்!

### குறைந்த சார்ஜுகள்.

நாங்கள் சிமைக்கமலங்களிலும், இதர கற்களிலும் குறைந்த கூலியில் கண்களைக் கவரும்படியான விதமாய் வேலைகள் செய்து கொடுக்கிறோம். தவிர நாங்களே உங்கள் மனதிற்குப் பிடித்த நல்ல கற்களையும் வாங்கிக்கொடுக்கிறோம். இதர பொன் வெள்ளி வேலைகளும் மெடல்களும், என்கிரேவிங் வேலையும் செய்து குறித்த காலம் தவறாமல் கொடுக்கின்றோம். எங்களிடம் ஒருதரம் ஆர்டர் செய்து பாருங்கள். ஒருமுறை ஒரு சிறிய ஆர்டர் கொடுத்துப் பரீக்ஷித்துப் பாருங்கள்.

ஆர்டர் வாங்கிக்கொள்ளும் நேரம் காலை 7-மணி முதல் 8-30-மணிவரையில்.

ராஜரத்தினம் பிரதர்ஸ்,
நகைவேலைக்காரர்கள், நே. 8, இரண்டாவது தெரு, புதுப்பேட்டை, மதராஸ்.

## இரகஸ்யம்.

ஒரு யோகீஸ்வரரால் அனுக்கிரகம் செய்யப்பட்டது அநேகம் பிரபுக்கள் பரீட்சை செய்து நற்சாட்சி பத்திரங்களும் அளித்திருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் அதிக பிரயோஜனத்தைத் தரத்தக்கதாதலால் இது உலோகோபகாரமாய் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இது தளர்ந்த தேகத்தைக் கெட்டிப்படுத்தி, நரம்புகளுக்கு வலுவேற்றித் தேகபுஷ்டி கை, கால், இடுப்பு, மார்பு, முதலிய உருப்புகளின் வலிவு, சுறுசுறுப்பு, சந்தான உற்பத்தி, பேரானந்தம், மனோதைரியம் முதலியவைகளை உண்டுபடுத்தி, மெலிந்து தளர்ந்துபோன வயோதிகரும் வாலிபருடைய சகல சுகங்களையும் அனுபவிக்கச் செய்யும் மேகவெட்டை, வாய்வு, மலபந்தம், பசியின்மை முதலிய வியாதிகளை நீக்கி, தேகாரோக்கியத்தை உண்டாக்கிவிடும். ஒரே வேளை மருந்தில் சொர்பனஸ்கலிதம் துரிதஸ்கலிதம் முதலியவைகளை நீக்கித் தாதுவை வஜ்ஜிரத்தைப்போல் கெட்டிப்படுத்தி, நரம்புகளுக்கு முறுக்கேற்றி ரகஸிய இன்பத்தை உண்டாக்கி விடுமென்பது உண்மை. இதற்குப் பத்தியமில்லை. புட்டி 1-க்கு இரண்டு ரூபாய் மூன்று புட்டி வாங்கினால் தபால்செலவு கிடையாது. இவ்வற்புத சஞ்சீவியின் பெயர் கற்பகவிந்தாதி லேகியம். வேண்டுவோர்,

மானேஜர், கற்பக மெடிகல் ஹால்,
சுவாமிமலை போஸ்ட், S. இந்தியா என்னும் விலாசத்திற்கு எழுதவும்.



OCT 1928



# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

[ஆசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.]

தொகுதி - ௨ | விபவஹூ - புரட்டாசிமீ | பகுதி - ௬


முருகன் துணை.

பண்ணேறு மொழியடியர் பரவி வாழ்த்தும் பாதமலர் ரிகீனயிப் பாவி பார்க்கிற்
கண்ணேறு படுமென்றே கனவி லேறுங் காட்டேன்றந் காட்டுகிலாய் கருணை யீதோ
விண்ணேறு மரிமுதலோர்க் கரிய ஞானவிளக்கேயென் கண்ணேமெய் வீட்டின் வித்தே
தண்ணேறு பொழிற்றணிகை மணியே ஜிவசாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே.

## கூட்டுறவு இயக்கமும் கைத்தறி நெசவும்

[இவ்விஷயமாகத் 'திராவிட'னில் வெளிபிடப்பெற்ற கீழ்க்கண்ட வியாசத்தை அப்பத்திரிகாசிரியரின் அனுமதியுடன் நமது அன்பர்களின் ஆழ்ந்த சிந்தனைக்குச் சமர்ப்பிக்கின்றோம்.—ப-ர்.]

இந்நாட்டில் கூட்டுறவு இயக்கம் ஆரம்பித்து அடுத்த ஆண்டுடன் கால்நூற்றாண்டு, அதாவது இருபத்தைந்தாண்டுகள், முடியப்போகிறது. 1926-1927-வது ஆண்டு முடிவில் ஏறக்குறைய 13,500 கூட்டுறவு சங்கங்கள் நிறுவப்பட்டிருந்தன. அவற்றில் சேர்ந்திருந்த அங்கத்தினர்களின் தொகை 8 இலட்சத்திற்கு மேற்பட்டதாகும். ஆனால், அதில் ஏறக்குறைய 5 இலட்சம் அங்கத்தினர்கள் பயிர்த்தொழில் செய்பவர்களாகவும், இரண்டு மூன்று இலட்சம் பேர்களே இதர தொழிற்காரர்களாகவும் இருந்தார்கள். "அதில் தவறொன்றுமில்லையே! 'உழுதுண்டு வாழ்வசற் றொப்பில்லை கண்டீர், பழுதுண்டு வேறோர் பணிக்கு' என்ற தெய்வவாக்கைக் கடைபிடித்தொழுகுவோர் போலப் பயிரிடுதலையே முக்கிய பிழைப்பாக வைத்துக்கொண்டிருக்கும் இத்தகைய ஒரு நாட்டில் பயிரிடுவோரே கூட்டுறவு இயக்கத்தில் மிகுதியாகக் கலந்து கொண்டிருப்பது இயற்கையே யன்றோ?" எனக் கேட்கலாம். அதற்கேற்ப மொத்தம் நிறுவப்பட்டிருந்த 13,500 சங்கங்களில் 11,000 சங்கங்கள் விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களாகவும், 2,500 சங்கங்களே இதர தொழிற்காரர்களின் கூட்டுறவுச் சங்கங்களாகவுமிருந்தன. அதிலும் பின் கூறிய 2,500 சங்கங்களில் 2,100-க்கு அதிகமாக வெறும் ஐக்கிய நாணயச் சங்கங்களாக இருந்தன. ஆகவே சுமார் 400 சங்கங்கள்தான் கூட்டுறவு இயக்கத்தின் மற்றைய பகுதிகளைக் குறித்து உழைத்து வந்தனவாகும்.

பயிர்த்தொழிலுக்கு அடுத்தபடியாக நமது நாட்டின் முக்கிய கைத்தொழிலாக வுள்ளது

நெசவுத்தொழிலேயாகும். நெசவுத் தொழிலோர்க்குக் கூட்டுறவியக்கத்தினால் பெரிய நன்மையுண்டாகக் கூடும்; அவர்களுக்கு அவ்வியக்கம் மிகவும் வேண்டற்படுவதொன்றாகும். அப்படியிருந்தும் கடந்த இருபத்தைந்தாண்டுகளில் நெசவுக்காரர்கள் நன்மையைக் குறித்துக் கூட்டுறவியக்கம் உழைத்தது மிகச் சிறிதேயாகும். இவ்வியக்கம் தொடங்கிய காலத்தில் முதல் ரெஜிஸ்ட்ரார் என்ற அரசாங்க அதிகாரியாகவிருந்து நிலை நிறுத்தின கனவான், நெசவுக்காரர்கள் மட்டும் ஒருநாளும் முன்னேற்ற மடையமுடியாது, அவர்கள் தேய்ந்து அழிவுற வேண்டியதுதான் என்று திருவாய்மலர்ந்தருளியதாகக் கூறப்படுகிறது. இந்த வாக்கைக் கண்டு அவருக்குப் பின் வந்த ரெஜிஸ்ட்ரார்களெல்லாம் பயந்துவிட்டார்களென்றுதான் கருத வேண்டும்; அதனால் தான் இத்துறையில் முயற்சி எடுக்க எவரும் இதுவரையில் முன் வரவில்லைபோலும். இன்றேல் 25 ஆண்டுகள் உழைத்ததன் பயனை 52-நெசவுக்காரர் கூட்டுறவுச் சங்கங்களே தோன்றியிருக்க வேண்டியதின் காரணம் என்னவென்று கூறமுடியாது. இன்னும் 66 சங்கங்களில் நூற்றுக்கு அறுபது வீதத்திற்கு மேலாகவே நெசவுத் தொழிலாளர்கள் அங்கத்தினர்களாகச் சேர்ந்திருப்பது உண்மையேயாயினும் அந்த 66-சங்கங்களும் வட்டிக்குக் கொடுத்து வாங்கும் ஐக்கிய நாணயச் சங்கங்களேயாகும். பயிரிடுவோர்களெல்லாம் பண்டைக் காலக் குடுக்கைகள்; கொண்டது விடார்கள் என்று கூறுவதுண்டு. அப்படியிருந்தும் கூட்டுறவு இயக்கதில் அவர்களுக்காக அமைந்துள்ள சங்கங்கள் 11,000மும் நெசவுத்தொழிலோர்க்காக ஏற்பட்டவை 52-ஆகவுமிருக்கக் காண்கிறோம்.

நெசவுத் தொழில் நாட்டிற்குப் புதிய தொழிலென்றோ, அல்லது அதைச் சீர்திருத்திச் சரியான வழியிலமைக்க முடியாதென்றோ கூறமுடியாது. மாறுதல் செய்ய வேண்டுவது இன்றியமையாதது என்று நெசவுத்தொழிலோரில் ஒரு சிலர் மனதில் மட்டிலும் பட்டுவிட்டாலும் போதும்; ஒரே கட்டாக அந்த மாறுதலை அவ்வகுப்பார் எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள் என்பதை யாவரு மொத்துக்கொள்வார்கள். உதாரணமாக, எறிநாழி அல்லது ஓடுபாவை என்று சொல்லக் கூடிய புதிய நெசவுக் கருவி இந்தத் தலைமுறையில் தான் இந்நாட்டிற்கு வந்தது; அப்படியிருந்தும் அது உபயோகப்படாத கிராமமோ சிற்றூரோ இல்லையென்றே துணிந்து கூறலாம். மேலும், அதற்குமுன்னிருந்த நாழியைக் கவனிப்பாக எடுத்துப் பொருட் காட்சி சாலையில் சேமித்து வைத்தாலொழிய அவ்வாறொன்று இருந்ததென்பது கூட மறந்துவிடப்படுமோ என்னவோ வென்றும் ஐயுறலாம். பெண்மக்களிற் பெரும்பாலோர் கூட முன்கூறிய எறிநாழியை உபயோகிக்கக் கற்றுக்கொண்டிருக்கின்றனர். ஆகவே, இவ்வளவு தூரம் முன்னேற்றத்திற்கு அறிகுறியாகவுள்ள ஒவ்வொரு மாறுதலையும் ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மையோடிருக்கும் ஒரு கூட்டத்தார் கூட்டுறவு இயக்கத்தில் மட்டும் இப்படிக் கவலை கொள்ளாமல் இருப்பதற்குக் காரணம், அவர்களிடத்து இயற்கையாயமைந்துள்ள குறைவு என்று கூறினால் அதை யாரும் ஒத்துக்கொள்ளமாட்டார்கள். ஆயினும் பாபம்! அது தான் காரணம் என்று முதல் ரெஜிஸ்ட்ராரும் அவர் பின் வந்தவர்களும் நம்பிக் கொண்டனர்.

நெசவுத் தொழிலை மட்டுந்தான் இந்தக் கூட்டுற வியக்கம் இவ்வாறு கைவிட்டுவிட்டதென நினைக்க வேண்டாம். வீட்டிற்கு வேண்டிய தட்டு முட்டு சாமான்களும் உணவுப் பொருள்களும் வாங்க வேண்டியது யாவருக்கும் இன்றியமையாத தல்லவா? ஆகவே கடந்த கால் நூற்றாண்டில் கூட்டுறவு பண்டசாலைகள் எவ்வளவு நிறுவப்பட்டிருக்கின்றன என்று பார்க்கலாம். கூட்டுறவிலாகா அறிக்கையும் அரசாங்கத்தாரது கணிக்கையும் மொத்தம் 150 பண்டசாலைகள் கூட இல்லையென்பதையே தெரிவிக்கின்றன. இதற்கும் மக்களிடம் இயற்கையாயேற்பட்டிருக்கும் குறைவுதான் காரணமென்று கூறமுடியுமா? அவ்வாறு கூறமுடியாதாகையால் கூட்டுறவு பண்டசாலை யியக்கம் இவ்வாறு முளைத்தெழாமல் தளர்ந்து நிற்பதற்குக் காரணம் என்ன வென்பதை உடனே ஆராய்ந்தறிய வேண்டாமா?

நிற்க, முதல் ரெஜிஸ்ட்ரார் கைத்தறி நெசவுத் தொழில் கால்விட் டோடவேண்டியதுதான் என்று தீர்ப்பளித்து விட்ட பின்பும் இவ்வாறு அத்தொழிலுக்காகப் பரிந்து பேசுவதில் என்ன பயன்? என்று கேட்கலாம்; மேலும், இயந்திரத்தறிகள் கணக்கு வழக்கின்றி நாட்டில் வந்தபின் கூடப் பண்டைக்கால கைத்தறிக்காகப் பாடுபடுவது வெறும் பாடாகாதா? என்றும் கேட்கலாம். விடிய விடியத் தறியடியில் உட்கார்ந்து வேலை செய்யும்படி ஒருவனைத்



தூண்டுவது கொடுமையாகக் கூடக் கருதப்படலாம். வரவரத் தேய்ந்து இறுதியில் அழிந்து போவதாகவுள்ள ஒரு ஊதியமில்லாக் கைத்தொழிலை விட்டு வேறு பயனளிக்கக் கூடிய எத்துறையிலாவது அவர்களைப் பழக்கிவிடுதல் நலமல்லவா? இவையும் இவை போன்றவையும் நியாயமான கேள்விகளேயாகும்.

ஆயினும், இருக்கிற உண்மை நிலை இதற்கு நேர் விரோதமாக இருக்கிறது. பெரிய நாகரீக முதிர்ந்த நாடுகளில் ஒன்றாகிய இங்கிலாந்தில் கூட இன்றும் கைத்தறிகள் இருந்து வருகின்றன என்பதைக் கேட்கப் பலர் ஆச்சரியமுறலாம். ஆயினும், அவைகள் பட்டு, நார், பஞ்சு முதலியவற்றாலாக்கப்பட்ட துணிகளை நெய்வதற்கு இன்றும் உபயோகிக்கப்படுவதென்னவோ உண்மை தான். 1910-ம் ஆண்டில் மான்செஸ்டரிலுள்ள கைத்தொழிற் கல்லூரியின் நெசவிலாகா தலைவராயிருந்த புரொபஸர் ஜே. டபிள்யூ. பாக்ஸ் என்பவர் கூறியிருப்பதாவது, 'இயந்திரத்தறிகள் வந்து 40 ஆண்டுகள் கடந்த பிறகும் கணக்குப் பார்த்தால் கைத்தறிகள் முன்னிலும் 5,000 அதிகமாகியிருக்கின்றன' என்பதே. இயந்திரத்தறியைக் கண்டுபிடித்த நாடாகிய இங்கிலாந்திலேயேஇவ்வளவு இடையூறுகளுக்கும் மிஞ்சிக் கைத்தறிகள் அதிகப்பட்டிருக்குமானால், நம்முடைய நாட்டில் அதன் வளர்ச்சிக்குரிய நிலைமை அதிகமாயிருக்குமென்று திண்ணமாய்க் கூறுவதற்கு ஐயமுண்டோ?

இக்கேள்விக்கு எவ்வித ஐயமுமில்லை என்று பதில் கூறுவதற்குத் தகுதியான ஆதாரமுமிருக்கிறது. அரசாங்கத்தார் வெளியிட்டிருக்கிற புள்ளி விபரக் கணக்குப்படி 1910—11-ம் ஆண்டுகளில் கைத்தறிகளால் நெய்யப்பட்ட ஆடைகளின் எடை சுமார் 583 இலட்சம் பவுண்டுகள் என்றும், 1920—21-ல் நெய்யப்பட்ட ஆடைகளின் எடை சுமார் 614 இலட்சம் பவுண்டுகள் என்றும் தெரியவருகிறது. இதற்கிடைப்பட்ட ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டிலும் கைத்தறி நெசவு விடாமல் அதிகப்பட்டுக் கொண்டு வந்திருந்ததாகவே தெரிகிறது. 1918—19-லும் 1919—20-லும் ஒரு சிறிது குறைந்து காட்டுகிறது. இதற்குச் சரிகட்டியது போல் 1913—14-ம் ஆண்டில் நெய்யப்பட்ட துணிகளின் எடை 660 இலட்சம் பவுண்டுகள் என்று தெரிகிறது. கைத்தறி நெசவுத் தொழில் விடாமற்றேய்ந்து கொண்டே போய் அடியோடு அழிவுபடும் என்று நினைத்ததற்குப் பதிலாக அது உயிரோடு இருந்து வந்ததுமட்டுமின்றி ஒரு சிறிது வலிவாகவும் காட்டிற்று என்பதைக் கேட்டால் ஆச்சரியமாகத் தானிருக்கும். இவ்வாறு உயிர்த்திருந்து வலிவடைந்தது அதைப்பற்றி ஒருவரும் கவனிக்காமல் ஒதுக்கியிருந்த காலத்திலும் அதற்கென்றமைக்கப்பட்ட அதிகாரியானவர் "எது? அது இனி யெங்கே தலையெடுப்பது? ஒழிந்த மாதிரி தான்" என்று தீர்ப்பளித்திருந்த காலத்திலுமேயாகும். அப்படியிருக்க, அது மட்டும் சரிவரக் கவனிக்கப்பட்டிருந்தால் எவ்வளவு வளர்ச்சி யுற்றிருக்கும் எனபதைக் கூறவும் வேண்டுமோ? 1910-ஆண்டிற்கும் 1920-ஆண்டிற்குமிடையே கூட்டுறவியக்கம் மிக நன்றாகப் பரவிக் கால்கொண்டு வந்தது. ஆனால் அப்பொழுதுதான் கைத்தறி நெசவுக்காரர்களைத் தலையிலடித்ததுபோல் அதிகாரியானவர் அவர்கள் தொழில் முன்னேறப் போவதில்லையென்று வாக்கிட்டுச் சென்றார். அப்படியிருந்தும், இயற்கையாய்த் தன் கண்ணுள்ள உயிர்ச்சத்து காரணமாக ஒரு சிறிது முன்னேற்றமுமடைந்திருக்கிறதாக மேலே பார்த்தோம். ஆகவே இனியும் கைத்தறி நெசவுக்காரர்களுக்குத் தக்க ஆதரவு கொடுக்காமல் தனியேவிட்டு வைப்பது நாட்டிற்கே தீமையை விளைப்பதாகும் என்று துணிந்து கூறலாம்.

கைத்தறி நெசவு அழிவுறாது வலுத்துக் காட்டுவதற்குரிய காரணங்களை ஆராய்வோம். கைத்தறியில் நெய்யப்பட்ட துணிகள் இயந்திரங்களால் நெய்யப்பட்ட துணிகளை விட நீண்ட காலம் உழைக்கின்றன என்பதுவே பொது அபிப்பிராய மாகும். இயந்திரங்களால் நெய்யப்படுந் துணிகளைவிடக் கைத்தறியில் மிகவும் நேர்த்தியானதும், நயமானதுமான துணிகள் நெய்யப்படுவது கண்கூடு. அவ்வாற நெய்யப்பட்டுவரும் சிறந்த துணிகள் இயல்பாகவே இயந்திர நெசவுத் துணிகளைவிட விலையேறினவைகளா யிருப்பதால், அவற்றைச் செல்வந்தர்களே பெரிதும் வாங்கியுடுக்கின்றனர். மற்றும் சிறந்த வேலைப்பாடுகளோடு கூடிய பலவித நிறந்தோய்த்த ஆடைகள் கைத்தறியால் மகளிருடைக்கென நெய்யப்பட்டு வருகின்றன. அவற்றை இயந்திரத் தறிகளில் செய்யமுடியாது. ஆனால் இத்தகை உயர்ந்த கைத்தறி ஆடைகள் அதிகம் செலவானதில்லை யாதலாலும், அவற்றின் வேலைப்பாடு தனிப்பட்ட வகையிலிருப்பதாலும் இயு

திரத் தறிகளில் அவைகளை ஒன்று பலவாக நெய்தலால் நஷ்டமே வரும். இதுவுமன்றிக் குறும்பாவோட்டிக் கைத்தறியில் நெய்யும் சிற்றுடைகளை இயந்திர தறியில் நெய்வது முடியாது. ஆகவே, கைத்தறி நெசவு அழிந்தொழியாது சிறுகச் சிறுக வலுவுற்று வருவதில் ஒன்றும் ஆச்சரியமில்லை

ஆயினும் இக்கைத்தறி நெசவுக்காரர்களுக்கு வேண்டிய கொள்முதல் விற்றுமுதலில் உதவி செய்யுமாறு ஒரு இயக்கம் உடனிருந்து உழைத்து வந்தால் அவர்களது நிலை இன்னும் அதிகமாக முன்னேற்றமடையும் என்று கூறவும் வேண்டுமோ ?

இனி, பெரும்பாலான நெசவுக்காரர்கள் கூலிக்கு நெய்பவர்களென்பது ஈண்டு நோக்கத்தக்கது. ஆகவே நெசவு முதலாளியும், ஜவுளி வியாபாரியும் சேர்ந்து கொண்டால் நெசவுத் தொழிற்காரர்களை இச்சைப்படி நடத்தி வரலாம். உதாரணமாக, கூலிக்கு நெய்யும் ஒரு தொழிற்காரனிடம் குறிப்பிட்ட எடையுள்ள நூலைக்கொடுத்து இவ்வளவு துணிகளைக் கொடுக்கவேண்டுமென்று குறிப்பிட்டு அதற்கேற்பட்ட கூலியையுங் கொடுத்து விடுகிறார்கள் ; அவ்வளவுதான் ; அவன் துணியை நெய்து கொடுத்து விடுகிறான். துணிவிற்பனை காலத்துக்கேற்றவாறு ஏறி யிறங்கிக்கொண்டே போகும். விலை யேற்றமாக விற்று அதிகமான இலாபங்கிடைத்தால் அதனால் ஜவுளி வியாபாரியோ தரகனோ ஊதியமடைகிறானே யொழியத் துணியை நெய்தவனுக்குக் கிடைப்பதொன்றுமில்லை. இதனால் துணி நெய்வோனுக்கு ஊக்கக் குறைவேற்படுவது இயல்பேயன்றோ ? தான் நெய்யும் துணிகளை மிகவும் நயமாகவோ திறமாகவோ நெய்து தனது திறமையைக் காட்ட வேண்டுமென்ற எண்ணமே அவனுக்குத் தோன்ற வழியில்லை. தான் பெற்ற கூலிக்குத துணியை நெய்து கொடுத்துவிட்டால் போதுமென்ற கவலையோடு நின்று விடுகிறான். மேலும் தான் மிகவும் உழைத்துத் துணிகளை நயமாக நெய்து கொடுத்தால் அதனால் வரும் இலாபத்தை ஜவுளிக்கடைக்காரனும் தரகனுமாக அடித்துக்கொண்டு போவார்களேயொழியத் தனக்கொன்றும் கிடைக்கப்போவதில்லை யென்பதையும் அறிவான். ஆகவே ஏதோ தன் கடனைக்கழிக்குமாறு முரட்டியாகநெய்து கொடுத்து விட்டால் போதுமென்ற எண்ணமே அவன் மனதிலிருக்கும். மேலும், தன்னிடம் கொடுக்கப்பட்ட நூலில் ஒரு சிறு பகுதியையெடுத்துக்கொண்டு எஞ்சியவற்றைக் கொண்டே ஒப்பந்தத்திற் குறித்த அளவுக்கு ஆடைகளை நெய்து கொடுத்துவிட வேண்டுமென்ற எண்ணம் தோன்றுவதும் அதிசயமல்ல. இதனால் தான் கைத்தறியில் நெய்யப்பட்ட துணிகள் வரவர உடை நயத்தில் குறைந்து காணப்பட்டு வருகின்றன. ஆகவே இந்த சீர்கேட்டையுடனே யொழிக்க முயலாவிட்டால், கைத்தறியின் முன்னேற்றத்திற்கு மற்றோர் இடையூறு உண்டாவது திண்ணம். எனவே இங்குதான் கூட்டுறவியக்கம் முன் வந்து கைத்தறி நெசவுக்காரர்களைக் கைதூக்கி விடவேண்டும். 1916—18-ல் ஆராய்ச்சி செய்த இந்தியா கைத்தொழில் கமிஷன் செய்த சிபார்சென்னவென்றால் நாட்டுக்கைத்தறி நெசவுக்காரர்களுக்குக் கூட்றவுச் சங்கங்களின் மூலமாய்ப் பொருளுதவிசெய்து அவர்களை மார்வாடிகளின் கையிலிருந்து தப்புவிக்க வேண்டுமென்பதும், அவர்கள தொழில் நடத்துவதற்கு வேண்டிய முறையில் கூட்டுறவு வகையால் நூல் முதலியவற்றை வாங்கிக் கொடுத்தும், நெய்த துணிகளை நல்ல விலைக்கு விற்றுக் கொடுத்தும் உதவ வேண்டும் என்பதுமே.

இந்த அறிக்கை வெளிவந்து பத்து ஆண்டுகள் ஆயின பின்பும், கூட்டுறவியக்கம் ஆரம்பித்து இருபத்தைந்து ஆண்டுகளாயின பின்பும், கணக்குப்பார்த்தால் நெசவுக்காரர்களைக் கடன்காரர் கைகளிற் சிக்கவைக்காமற் காப்பாற்றுவதற்காக 66 ஐக்கிய நாணயச் சங்கங்களும், 52 கூட்டுறவு வியாபாரச் சங்கங்களுமே தான் நெசவுக்காரரது உதவிக்கென ஏற்பட்டிருக்கக் காண்கிறோம். இத்தகைய ஒரு இரங்கத்தக்க நிலைமைக்குக் காரணம் என்னவென்று பார்த்தால், அது கூட்டுறவிலாகா அதிகாரிகளால் இத்துறையில் காட்டப்படும் கவனக்குறைவாகவிருக்கவேண்டும், அல்லது இத்துறையில் வேலை செய்யும் சரியான முறையை அவர்கள் அறியாமலிருக்க வேண்டும என்றே தோன்றுகிறது.

ஐக்கிய நாணயச் சங்கங்களுக்குப் பொருளுதவிசெய்ய மத்திய பாங்கிகளும், மாகாண பாங்கியும் இருக்கின்றன. ஆனால் மாகாண முழுவதிலும் அங்குமிங்குமாக நிறுவப்பட்டிருக்கும் 52 நெசவு வர்த்தக சங்கஙகளுக்கு அவ்வித மத்திய பாங்கியோ வேறு விதமான எந்த பொது நிலையமோ இல்லாமையினால் அவைகள் ஒவ்வொன்றும் தனித்தனியே உழைத்துத் துயருறவேண்டியவாகவிருக்கின்றன. சிலஆண்டுகளுக்கு முன் மத்திய பாங்கிகள் அமைக்கப்பட்டிருக்கிற முறையில் மத்திய நெசவுச் சங்கங்கள் நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் அதனால் பயன் ஒன்றும் பெரிதாக விளையவில்லை. ஒரே ஒரு மத்திய சங்கந்தான் ஒரு ஜில்லாவில் நிறுவப்பட்டது. அந்த ஒரு சங்கமும் அதிகமாக ஒன்றும் வேலை செய்ததாகத் தெரியவில்லை. ஆகவே மத்திய சங்கங்கள் நிறுவ வேண்டுமென்று எவ்வளவோ அவாவிருந்தும் அதைச் சரியான முறையில் அமைப்பதற்குத் திறமையில்லாது போய்விட்டது. முதல் ரெஜிஸ்ட்ரார் வாக்குக்கொடுத்து இருபதாண்டுகளாயின பின்னும், அதை மீறி முயற்சி யெடுக்க அவருக்குப் பின்வந்த அதிகாரிகள் அஞ்சுகிறார்கள் போலும் !

மத்திய நெசவுச் சங்கம் ஒன்று ஆரம்பிப்பதற்கு இயற்கையாய் வேண்டிய சாதனங்களெல்லாம் அமைந்தே யிருக்கின்றன. ஆனால் தற்சமயத்தில் அத்தகைய மத்திய சங்கம் மாகாண முழுவதிற்குமே ஒன்று தான் இருக்க வேண்டும். ஜில்லா தோறும் ஒரு மத்திய சங்கம் ஏற்படுத்த வேண்டிய காலம் இன்னும் வரவில்லை. மேலும் எல்லா நெசவுச் சங்கங்களையும் ஒரே கூட்டுறவு அதிகாரியின் மேற் பார்வையின் கீழமைக்க வேண்டும். இயக்க வாரம்பகாலத்தில் ஐக்கிய நாணயச் சங்கங்களுக்கிருந்தவாறு இந்த அதிகாரிக்கு நெசவுச் சங்க மேற்பார்வையே வேலையாக அமையவேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் நெசவுச்சங்கங்கள் அதிகமாக நிறுவப்பட்டால் அங்கே ஒரு மத்தியச் சங்கம் தானுக உண்டாகும் ; அந்த மத்தியச் சங்கமும் நெசவுச் சங்கஙகளும் ஒரு உள்ளூர் அதிகாரியின்கீழ் இயற்கையாகவே சென்றமையும். இவ்வாறு பல இடங்களில் ஏற்படுமானல் மாகாண மத்திய நெசவுச் சங்கம் ஒன்று தானுக உண்டாகும். இதைவிட்டு மத்திய சங்கத்தை ஒரு அதிகாரியின் மேற்பார்வையிலும் நெசவுச் சஙகங்களை ஆங்காங்குள்ள அதிகாரிகளின் மேற்பார்வையிலும் விட்டு வைத்தால், முதல் ரெஜிஸ்ட்ரார் கூறியதே போன்று நெசவுத்தொழிலுக்குக் கதிமோட்சங் கிடையாது என்று இறுதியில் சொல்ல வேண்டுவதாகவே முடியும். அப்பொழுது முதல் ரெஜிஸ்ட்ராரும் பெரிய தீர்க்கதரிசியாகவே கருதப் படுவார். இதர மாகாணங்களில் ஆங்காங்குள்ள சங்கங்களுக்கு ஆங்காங்கு அதிகாரிகள அமைக்கப்பட்டிருப்பதோடு கூட மாகாணம் முழுவதிற்குமாயமைந்த மத்தியச் சங்கங்களுக்கென்று தனி அதிகாரிகளும நியமிக்கப் பட்டிருக்கின்றனர். இந்த முறையை இம்மாகாணத்திலும் உடனே பின்பற்றுவது இன்றியமையாததாகும்.

ஆகவே நெசவுச் சங்கங்களைக் குறித்து நம் மாகாணத்தார் பொறுப்பு அதிகமாகவிருக்கிறது. அதை ஏற்றுக்கொள்ளும் வசதியும் அதிகமாகவிருக்கிறது. 1941-ம் ஆண்டில் நம்மாகாணத்திலிருந்த கைத்தறிகளின தொகை சுமார் ஒன்றரை இலட்சத்திற்கதிகமாக விருந்தன ; 1500-க்குக் குறைந்த கைத்தறிகள் எந்த ஜில்லாவிலுங் கிடையாது ; ஆறு ஜில்லாக்களில் ஒவ்வொன்றிலும் 10,000-க்கு அதிகமாகவே இருந்தன. ஆகவே அரசாங்கத்தார் இத்துறையில் முன் வந்து உதவிசெய்து கூட்டுறவியக்கத்தைக் கைதூக்கி விடுவதற்கு ஏற்ற சமயம் இதுவே. மேலும் இந்நாட்டில் நெய்யப்படுங் கைத்தறித் துணிகளில் மூன்றிலொரு பகுதிக்கு மேலாக இம்மாகாணத்திலேயே நெய்யப்படுகிறது என்பதையுங் கவனித்தால் அரசாங்கத்தார் தலையில் எத்தகைய பொறுப்பு இருக்கிறதென்பது விளங்கும். இஃதன்றி சரியான துறையில் முயற்சியெடுக்காமையால் இயக்கம் குன்றுவதாயின் நாமே நம் நாட்டு முன்னேற்றத்திற்குத் தடையாக நின்றதாகக் கருதபபடுவது திண்ணம்.

நாம் முற்கூறியது போன்று சென்ற இருபத்தைந்து ஆண்டுகளில் நாணயச் சஙகஙகள் பெருகி வளர்ந்தன. செல்வந்தர்களும் ஏழைகளுமல்லாத இடைத்தரமக்களுக்குப் பயன்படுமாறு முதல் வளர்ச்சிநெறி யமைச்சர் நில அடமான பாங்கிகள் ஏற்படுததச் சட்டம் பிறப்பித்துக் கூட்டுறவு ஐக்கிய நாணயச் சங்கத்திற்குக் கடைக்கால் நிறுத்தினர். அவ்வாறு தான் சட்டம் பிறப்பிக்கப் போவதாக அமைச்சர் முதலிற்கூறியபோது அரசாங்க அதிகாரிகள் தாங்கள் சிறிது காலமாக ஒரு திட்டத்தைக் கையாண்டு வருவதாகவும் அது விரைவில் முற்றுப்பெறும் என்றுங் கூறினர்கள். ஆனால் அமைச்சர் தனக்கிருந்த ஊக்கத்தில் இதற்குக் காது கொடுப்பதாகவில்லை. உடனே தனதுடைய சட்டத்தைப்பிறப்பித்து வேலை செய்யத் துவக்கினர். இந்த துணிகரமான செய்கையால் இப்பொழுது நில அடமான பாங்கிகள் கூட்டுறவியக்கத்திற்கு அணிகலமாக அமைந்திருக்கின்றன. அரசாங்க அதிகாரிகள் முயற்சி

செய்து வந்ததாகக் கூறப்பட்ட திட்டமோ இன்னும் காகிதத்திற்குள் மறைந்து கிடப்பதாகவேதான் தோன்றுகிறது. இப்பொழுது அவர்கள் முதன் மந்திரியால் ஆதரிக்கப்பட்ட நில அடமான பாங்கிகளிலிருந்து ஒரு மத்திய நில அடமான பாங்கி நிறுவுந் துறையிலிறங்கியிருக்கிறார்கள். முதலமைச்சருக்குப் பின் வந்த 2 அமைச்சர்களும் அரசாங்க பதவி வகித்திருந்தவர்களாக விருந்தனர். இப்பொழுது வந்திருக்கும் அமைச்சரோ முதலமைச்சரைப் போன்று உத்தியோகப்பதவியற்ற பெரிய மனிதராகையால் அவர் நெசவுக்காரர் சங்கங்களையும், கூட்டுறவு பண்டசாலைகளையும் ஏற்ற வழியில் கைதூக்கிவிட்டு நாட்டிற்கு நன்மைபுரிந்து கூட்டுறவியக்கத்திற்கு அரண் கோலுவார் என நம்புகிறோம். இத்தகையதோர் நன் முயற்சியில் நமது தற்கால வளர்ச்சி நெறி யமைச்சர் உடனே ஈடுபட்டு முதலமைச்சரைப் போன்று என்றும் அழியா நற்பெயர் பெற வேண்டுமென இறைவனை வழுத்துகிறோம். "நன்மையுந் தீமையு நாடி நலம் புரிந்த தன்மையானாளப்படும்."

# ஆராய்ச்சிப் பகுதி

## ஈட்டி யெழுபது.

(தொடர்ச்சி)

### ஆராய்ச்சி முறை.

இயல்பாக மனவுணர்வுடைய மக்கள் கல்வி மாண்புடையவராதல் வேண்டும். கல்வி உடைமை, பொருளுடைமை என்னும் இரண்டுஞ் செல்வமாயினும் கல்வி இம்மை, மறுமை, வீடுபேறுகள் மூன்றற்குஞ் சாதனமாதலின் நற்பொருளென்னப்படும். கற்றல் கேட்டல் உடையாரே பெரியார். நல்லாசிரியர் பக்கத்து நன்மாணாக்கர் கற்கும் நான்முறை அறிந்து ஓதுதற்குரிய பல உண்மை நூல்களை ஐயந்திரிபற ஓதித் தெளிந்த அறிவினர் பலர் மாட்டும் உண்மைக் கேள்விகளை முயன்று கேட்டுக் கல்வியறிவின் பயனைத் தெளிந்து உண்மை நிலையைக் கூடுதல் வேண்டும்.

கற்றலினுங் கேட்டலே சிறந்தது. கற்றற்குரிய நூல்கள் நமது நாட்டின்கண் பல உளவேனும், அவற்றை உள்ளவாறு உணர்தற்கு உரை நூல்கள் இன்றியமையாதன. அவ்வுரை நூல்களும் பல உரையாசிரியர்களால் தெற்றென வரையப்பட்டிருப்பினும், நமது உரை நூல்களுக்கு உரையின்மேல் உரை பல எழுதப்பட்டிருப்பினும், அந்நூல்களினும், அவ்வுரைகளினும் ஓர்ந்துணரத் தக்க பல விஷயங்கள் யாம் ஓதும் நல்லாசிரியர் வாயிலானே எமது செவிப்புலன் வழியாகக் கேட்டு அறிதல் தகுதியாம். இளம்பூரணர் நச்சினார்க்கினியர் அடியார்க்கு நல்லார் பரிமேலழகர் உள்ளிட்ட உரைவல்லுநர்களும், அவர் மாத்திரமோ, நக்கீரர் முசிரி நீலகண்டர் முதலிய உரையாளர்களும் வகுத்த உரைகளுக்கு உள்ள கடாவிடைகளும், உரைகளிற் கண்ட பாரம்பரியங்களும் கர்ண பரம்பரையாலன்றிப் பிறிதோராற்றால் பெறப்படா. பாரம்பரியங்களைக்கூறும் நூல்கள் அத்துணையும் நமக்கு ஒரு காலத்தில் ஓரிடத்தில் ஒரு மொழியில் கிடைப்பது அரிது. நமது முன்னோர் விரிந்த இப்பாரத பூமியில் பல பாகத்து வசித்துப் பல மொழிகளினுந் தேர்ச்சியடைந்து பல நூல்களைப் பல துறைகளினும் வல்லுநராய் வரைந்திருத்தலின், அவற்றை இந்நின்ற காலத்தே இரண்டொரு நூல்களைக் கொண்டு நமது மனவன்மையினாலேயே நமது கருத்திற்கு ஏற்ப ஆராயப்புகுவது முற்றிலும் முடியாத செயலாம்.

ஆராய்ச்சி ஆராய்ச்சியென்பது ஒரு பொருளைப் பற்றியேனும் பல பொருளைப்பற்றியேனும் தகுதியோடு யாதொரு குறைவுமின்றி எண்ணி அறியுஞ் செயலாம்; இலக்கிய இலக்கணங்களைப் பற்றியேனும், அவற்றுள் உழவு நெசவு நாடு காவல் முதலிய தொழில்களைப் பற்றியேனும் உண்மைக்கு மாறுதலில்லாமல் இன்பச் சுவைபெற நன்கு உணருஞ் செயலாம். அவ்வாறு ஆராயுங்கால் பொய் உரைகளைக் களைந்து, மெய் உரைகளைக் காணும் நோக்கமே ஆராய்ச்சியாளர்களுக்கு முக்கிய இலக்காதல் வேண்டும். சாமான்ய தருமங்களினின்றும் விசேஷ தருமங்களையும், விசேஷ தருமங்களினின்றும் சாமா



ன்ய தருமங்களையும், பொது நிகழ்ச்சியால் சிறப்பு நிகழ்ச்சியையும், சிறப்பு நிகழ்ச்சியால் பொது நிகழ்ச்சியையும், காரணத்தால் காரியத்தையும், காரியத்தால் காரணத்தையும் கருதி அறிந்து, ஒரு குலத்தினர், ஒரு தொழிலினர், ஒரு மதத்தினர், ஓரினத்தினர், ஓர் புலவர் இவர்களது மதி வன்மையையும் நற்குண நற்செயல்களையும், பழக்க வழக்கங்களையும், இவற்றிற்கு மாறான தன்மைகள் உளவேல் அவற்றை முன்னெண்ணத்தாலும் அபிமானத்தாலும் சித்தங்கலங்காது உள்ளவாறு கண்டு, சுவையுள காரியங்களைப் புகழ்ந்தும், சுவையற்ற காரியங்களை மறுத்தும் எடுத்துக்கூறுதல் நூலாராய்வார்க்கு இன்றியமையாத இயல்பு. இதனால் ஆராய்ச்சி முறைக்கும் நமது முன்னோர் சில விதிகளை அளவை நூல்களில் கூறியுள்ளார்கள். உண்மையான சம்பவங்களையும் நேரிற் கண்ட காட்சிகளையும்பற்றி வெறும் வார்த்தைகளினால் விவாத முறையில் மறுப்பது ஆராய்ச்சிக்குத் தக்கதல்ல. சாமான்ய ஜனங்கள் கூறிவரும் கதைகளினும், பாரம்பரியங்களினும் சில உண்மைகள் சித்திப்பனவாய் இருக்க, அவற்றை முற்றிலும் பொய்யெனவும், கட்டெனவும், இடைச்செருகலெனவும் தாம் கொண்ட கருத்தைச் சாதித்தற் பொருட்டு மறுத்து விடுதல் உசிதமன்று. அவ்வாறு இருப்பவும் உண்மையாக நடந்த சிற்சில சரித்திரங்களைக் கூறும் உண்மை நூல்களிலும் இக்காலத்தவர் சிலர் தமது சாதுரியத்தால் இவை அசம்பாவிதம் என்றும், இவை மேற்றிசையாளரது விஞ்ஞானகலைகளுக்குப் பொருத்தமானவை யல்லவென்றும், இவை கூறின இவற்றைச் செய்தார் குறைபடுவரென்றும் ஆதலின் இவை இவை நிகழ்ந்திராவென்றும், இவற்றை இன்னர் கூறியிராரென்றும், அவற்றிற்குக் காரணம் இவை இவை என்றும் வாதிப்பது பொருந்தாது. ஆராய்ச்சி யென்பது ஒருண்மைக் கலையென்றும், ஆராய்ச்சியாளன் ஒருண்மையுரைப்போனென்றும், ஆராய்ச்சியாற் பெறுவது ஒருண்மை நிகழ்ச்சியென்றும் ஒவ்வொருவரும் கருதிப் புத்தகமாகவேனும், சஞ்சிகையாகவேனும், தனிப்பத்திரங்களாகவேனும், சொற்பொழிவுகளாகவேனும் பகிரங்கப்படுத்துதல் வேண்டும். ஒரு புதுக்கிளர்ச்சியை யுண்டுபண்ணும் நோக்கத்தோடு சில பூர்வ சம்பவங்களையும், பழந்தமிழாசிரியர்களையும், ஜாதி ஆசாரங்களையும், உண்மைக்கு மாறானதெனல் இயலாத தொன்றாகும்.

ஆதிகாலம் தொடங்கி நமது தேசத்தவர் இவ்வுலகத்தைக் கடவுள் படைத்தாரெனவும், நமது கர்மம் துணைக் காரணமாக நம்மைப் பலமதத்தாராகவும், பல குலத்தராகவும், அவ்வக்குலத்திற்கேற்ற பல நலத்தராகவும், பல நிலத்தினராகவும், பல தொழிலினராகவும், பல தகுதியினராகவும், பல குழுவினராகவும், பல தெய்வங்கள் மூலமாகவும், பல இருடிகள் மூலமாகவும் படைத்தாரெனவும் கூறும் சிறந்த கொள்கையைக் கொண்டவராய், அக்கொள்கைகளிலேயே பல நூறாண்டுகளாகப் பயின்று, பல நூல்களை எழுதிப் பல சம்பிரதாயங்களை உடையவராய் வந்தனர். பல பூர்வ சரித்திரங்களுக்கும், தாங்கள் பேசிவரும் பல பாஷைகளுக்கும், அவற்றின் சப்தார்த்தங்களுக்கும் அப்பரம் பொருளையும், அப்பொருளால் மெய்யுணர்வு பெற்ற ஞானிகளையும், அதிமானுஷ்ய சக்தியைப் பெற்ற புண்ணிய புருஷர்களையும் பரம காரணர்களாக எண்ணியிருக்கின்றனர்.

இதர தேசத்தவர்களும் இப்படிப்பட்ட கொள்கைகளையே உடையவர்களாய் இன்னும் இருக்கக் காண்கின்றோம். அதிமேதாவிகளாக எண்ணப்படுகின்ற பிரித்தானியர், ஜர்மானியர், பிரஞ்சுக்காரர், அமெரிக்கர் முதலாயினோர் கூடத் தமது வேத சாஸ்திரங்களுக்கும், சம்பிரதாயங்களுக்கும், அனுஷ்டானங்களுக்கும், தேசாசார மதாசாரங்களுக்கும் தாங்கள் நூதனமாகக் கண்டுபிடித் தெழுதிய பௌதிய நூல், வான நூல், தேச சரித்திரம், மானுட நூல், மானுட விகற்ப நூல், மொழி நூல், தத்துவ நூல், சமய நூல் நீதி நூல், சுகரணவாதம், பைசாச வாதம், அங்காதிவாதம், உள நூல், மனுஹோற்பத்தி நூல், முதலியவை இன்னும் இளம் பிராயத்திலிருப்பதாலும் இன்னும் வளர்தற்குரிய நிலையிலிருப்பதாலும், மாறுபாடாவனவல்ல எனத் திண்ணமாகக் கருதி அச்சமயக் கொள்கைகளை அவ்விஞ்ஞான சாஸ்திரங்கள் மூலமாகவே நிருபித்து வருவதைப் பார்க்கின்றோம். ஐரோப்பாவிலுள்ள விஞ்ஞான சாஸ்திரிகளிற் பலர் கேவலம் லோகாயதராயிராமல் யதார்த்த பக்திமான்களாகவே இருந்து வருகிறார்கள். இங்ஙனமிருக்க நமது தேசத்தவர் சிலர் அந்நூலுள் ஏகதேசந்தைக் கற்று அச்சார்பினாலே நமது நூல்களில் சிலவற்றையும், அவற்றின் ஆசிரியரையும் ஆசங்கித்து உரைக்கின்றனர். அவ்

வாசங்கையில் 'ஈட்டி யெழுபது'ம் அதன் ஆசிரியராகிய ஒட்டக்கூத்தரும் வராமற் போகவில்லை. 'ஈட்டி யெழுபது' ஒரு கற்பித நூலென்பதும், அதன் ஆசிரியர் ஒட்டகூத்தரல்லவென்பதும் அவர்கள் சொல்லும் கூற்று. இனி ஒட்டக்கூத்தரது சரித்திரத்தின் உண்மையை வைத்து அந்நூல் உண்மையையும் விளக்கிக் காட்டுவோம்.

(தொடரும்.)

அ. பூ. இராஜு முதலியார்,
காலஞ்சென்ற நாட்டாண்மை பூரண முதலியார்,
சுவீகார புத்திரர் சீகாழி.

## குலதிலகர் பகுதி

### உபதேசகாண்டமருளிச்செய்த
### † குகனேரியப்ப நாவலர்
### சரித்திரச் சுருக்கம்.

தொண்டைமண்டலத்தில் காஞ்சீபுரத்திலே, சற்றேறக்குறைய ஆயிரத்தொரு நூற்றிருபது வருடங்கட்கு முன்னே, செங்குந்த மரபிலே, சிவானந்த முதலியாரென்பவ ரொருவர் இருந்தார். அவர் புத்திரப்பேறின்மையால் வருந்தி, தமது மனைவியாகிய கற்பிற் சிறந்த அமுதாம்பிகையோடு அரிய விரதங்களை அனுட்டித்துக் கொண்டு தம்பதியில் அமர்ந்தருளிய ஏகாம்பரநாதரை வழிபட்டுவர, அக்கடவுள் ஒருநாள் சொப்பனத்தில் தோன்றி அனுக்கிரகித்தபடியே ஓராலயமமைத்து குகப்பெருமானை பிரதிட்டை செய்து, குகனேரியென ஓர் தீர்த்தமுண்டாக்கி, அத்தீர்த்தங்கொண்டு தினமுங் கிரமமாக முருகக் கடவுளுக்கு நித்திய பூசையாதிகளை நடாத்தி வந்தனர்.

அக்காலத்திலே அக்கடவுளுடைய திருவருளால் ஒரு சற்புத்திரர் அவதரிக்க, அப்புத்திரர்க்கு அத்தீர்த்தத்தின் பெயரையே உரிய பெயராகத் தரித்து, ஐந்தாம் வயதிலே வித்தியாரம்பஞ் செய்வித்தலும் அவர் சகல கலைகளிலுந் தேர்ச்சியுற்றவராய் தமது நகரத்திலுள்ள குமரகோட்டத்து அருச்சகரும், சுப்பிரமணியக் கடவுள் வரப்பிரசாதியும், அதி தெய்வீகமுற்று விளங்கியிருந்த தமது குல குருவும் ஆகிய கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள் என்பவரிடத்தே சமயதீக்ஷை பெற்றுக்கொண்டு, தமிழிலே தேவார திருவாசக முதலிய அருட்பாக்களையும், சம்ஸ்கிருதத்திலே இதிகாச புராண முதலியவற்றையும் அவற்றிற்குரிய கருவி நூல்களோடு கற்று வல்லராயினர். பின்பு விசேஷதீக்ஷை பெற்றுக்கொண்டு சைவர்களுக்கு இன்றியமையாச் சிறப்பினவாகிய சமய நூல்களைக் கற்றுணர்ந்து, அந்நூலுணர்ச்சியால் சிவபெருமானொருவரே பரம்பொருள் என்னும் துணிவு தோன்ற உடனே சிவபூசையெழுந்தருளச் செய்துகொண்டு, அச்சிவபூசையினிடத்தும் அருள் அன்பு அடக்கம் முதலிய நற்குணங்களினுஞ் சிறந்தவராய்த் தமது பிதாவின் ஆன்மார்த்தமாகிய முருகக்கடவுளுக்கு நித்திய நைவேத்தியங்களும் மஹோற்சவமுஞ் சிறப்பாக நடத்தி வருங்கால் ஒரு மஹோற்சவ காலத்தில் முருகக்கடவுள் எழுந்தருளும்போது மழை பெய்யத் தொடங்க, அதுகண்ட குகனேரியப்ப நாவலர்,

> "கார்க்கு மழைக்குங் கவலேங் கஞ்சிறையாற்
> சூர்க்குடைந்த நின்னைச் சுகத்திருத்தி-யூர்க்குள்வே
> ந்தன் விழாவைக் கருதாது பெய்வித்தல்
> அந்தமோ வாகண்டலா"

என்னும் வெண்பாவை யருளிச் செய்து இந்திரன் ஆக்ஞையால் மழையொழிய, மஹோற்சவத்தைச் சிறப்பாக நடாத்திக் களிகூர்ந்தனர்.

சிலநாட் சென்றபின் பதினெண் புராணங்களுள் ஒன்றாகிய காந்த புராணத்தின் உட்பிரிவாகிய சனற்குமார சங்கிதை, சூத சங்கிதை, பிரம சங்கிதை, விட்டுணு சங்கிதை, சங்கர சங்கிதை, சூர சங்கிதை என்னும் ஆறு சங்கிதைகளுள், சங்கர சங்கிதையினுடைய பன்னிரண்டு காண்டங்களுள் ஒன்றாகிய சிவரகசிய கண்டத்தின் பிரிவெனப்படும் ஏழு காண்டங்களிலே, முந்திய சம்பவகாண்டம், அசுரகாண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம் தேவ காண்டம், தக்ஷ காண்டம், என்னும் ஆறு காண்டங்களையும் தமிழிலே பாடும்படிச் சுப்பிரமணியக் கடவுளே "திகடசக்கரச் செம்முகமைந்துளான்" என்று அடியெடுத்துக் கொடுத்தபடியே, கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள் கந்தபுராணம் என்னும் பெயரினால் பாடி முடித்து, எஞ்சிய உபதேசகாண்டத்தைத் தமது சீடராகிய குகனேரியப்ப நாவலருக்குக்கட்டளையிட, அதனைச் சிரமேற்கொண்ட நாவலர் பெருமான் முருகக்கடவுளது சந்நிதியையடைந்து பணிந்து 'எம்பெருமானே! தேவரீர் எனதாசிரியருக்கு அடியெடுத்தளித்ததுபோல் அடியேனுக்கும் அநுக்கிரகித்தால் அவராஞ்ஞைப்படி பாடி முடிப்பேன்' என்று விண்ணப்பஞ் செய்துகொண்டனர். அத்தருணத்தே, அக்கடவுளருளால் "குழவி வெண்பிறை" என்று ஒரு அசரீரி யெழ, அதனையே முதலாகக் கொண்டு உபதேச காண்டத்தைச் சொற்சுவை பொருட்சுவை நிரம்ப சகசஅ செய்யுட்களால் பாடி முடித்து, அந்நகரத்துள்ள குமரகோட்டத்திலே சுப்பிரமணியக்கடவுள் சந்நிதியிலே வேதாகம பண்டிதர்களும் புராண விற்பன்னர்களும் பிறருங் கேட்டுக் களிகூரும்படி தமதாசிரியர் முன்னிலையில் * அரங்கேற்றினார். அவ்வமயத்தில் கச்சியப்ப சுவாமிகள் பேருவகையுற்று

> "அன்றுழி நின்றதித்த வாரமுதை யொப்பவேர்
> பொன்றுமைக் கேதுவாம் புந்தியினைக்—தொன்ற
> உகுநேரிற் றருவென லொக்குமலால் வேறென்
> குகனேரி நாவல னூற்கு"

என்று ஆசீர்வதித்தருளி அமர்ந்திருந்தனர்.

இப்படியிருக்குநாள்களி லோர்நாள் தரிசனத்தின் பொருட்டுத் தணிகாசலத்தை யடைந்தவழி, அங்கே சிலர் அம்பிறை யென்ற பதம் மூவிடங்களில் அடுக்கி வரவும், தணிகாசலபதி பெயரும் வள்ளி நாயகர் சிறப்பும் அமையவும், பாங்கி தலைவற்குணர்த்தல் என்னுந் துறையாக முடியவும், பின்முடுகு வெண்பாவாக ஒரு துதி செய்யவேண்டுமென்று வேண்ட, உடனே கேட்டோர் வியக்கும்படி

> "அம்பிறைக்கு மைந்தமல ரம்பிறைக்கு நொந்தமிக
> அம்பிறைக்குங் கண்ணுட் கருள்செய்வாய்--நம்புதணி
> கைகிரிக்கு ளூற்றசித்ர கச்சடைத்த னக்குறத்தி
> யைக்களித்த ணைத்த வத்தனே"

எனப்பாடி முடித்ததுமன்றி, இங்ஙனமே அவ்வச் சமயங்களில் பற்பல அற்புத பாக்களை அருளிச் செய்து, சிவானுபவச் செல்வராய் வீற்றிருந்து சிவபெருமான் றிருவடி நீழலிற் கலந்தனர்.

சிதம்பரம் ஸ்ரீ மௌனசுவாமிகள் மடத்தினர்.

† குகனேரி யென்பது கோனேரி யென மருவி வழங்குகிறது.

* இவ்வாசிரியர் யாத்திரையாகச் திருச்செந்தூரை யடைந்து வசிக்குங்கால், அன்பர் பலர் வேண்டுகோளின்படி அங்கு மொருமுறை அறங்கேற்றினரென்பதும் சரித்திரம்.

## பொது விஷயங்கள்

### கொலை மறுத்தல்.

ஆனையடியுள் அடங்காத அடி இல்லையாதல் போலக் "கொல்லாமை" யென்ற அறத்தின் கீழ் அடங்காத அறம் இல்லை யென்பது துணிபு. ஏன்? புலாலுண்ணலே மற்ற பாப காரியங்களுக்கும் காரணமாயிருக்கின்றது. எவ்விதமெனறுலோ,—மாமிச பக்ஷணம் தாமோகுண பதார்த்தம். அதை அருந்துவதால் தமோகுண விருத்தியுண்டாகும். உண்டாகவே, பாப காரியங்களைத் துணிவுடன் செய்ய மனம் நாடுகின்றது. ஆயின், இன்னும் தமோகுணத்தைத்தரக் கூடிய பதார்த்தங்கள் உளவே யெனின், யாவற்றினும் அதிகமான தமோகுணத்தைத் தரக்கூடியது இது ஒன்றே. ஆதலாற்றானே எல்லாப் பெரியோரும் கொல்லாமையை வற்புறுத்திக் கூறிப் போந்தனர். இதனை விரிவாகத் திருத்துறையூர் சாந்தலிங்க சுவாமிகள் செய்யுள் ரூபமாகக் "கொலை மறுத்தல்" என்றதோர் பிரபந்தத்தை வெளியிட்டுள்ளார். அதற்குத் திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் விரிந்தவுரையொன் றெழுதியுள்ளார். இருப்பினும், கல்வியில் எளியோர் அதன் பொருளை யறிதல் அரிதாகுமாதலின், அதனை எளிய வசன நடையில் யாவர்க்கும் பயன்படுமாறு வரைவான் துணிந்தேன். எண்ணிய வண்ணம் செவ்வேற்குமரன் திருவருள் புரிவானாக.

சைவர், உலோகாயதர், ஏகசமதவாதிகள், வாமிகள், பௌத்தர் முதலிய சமயவாதிகளும், இக்காலத்து விரிவாகத் தோன்றியிருக்கும் கற்பனை சமயவாதிகளும், இலௌகீகரும் ஆகிய பல்லோர் நிறைந்த ஒரு சபையினிடத்து, நக்ஷத்திர கணங்களினிடையே யொளிரும் பூரண சந்திரனைப்போன்று, பலவிதகலைகளால் நிரம்பப்பெற்று அறிவின் பிரகாசத்தோடு ஒரு சைவாசிரியர் வீற்றிருந்தனர். அவ்வமயம்,

ஆனபின்மனைவிமக்கள்அர்த்தவேடனைகண்மூன்றில்
கானவர்வலைவிற்பட்டுக்கைதப்பிஓடுமான்போல்
போனவன்வெறுங்கையோடேபோகாதவண்ணஞ் சென்று
ஞானசற்குருவைக்கண்டேன்றுகவணங்கினனே
(கைவல்லியம்)

என்றபடி மனைவி, மக்கள், பொருள் முதலாகிய பிரபஞ்ச மாயையினின்றும் விடுபடாமல், "அந்தோ! மாயை யென்னும் வலையில் அகப்பட்டுக்கொண்டோமே. நாம் நமது பிறப்பின் பயனை அடைவது எவ்விதமென மருண்டு, பின் திடச்சித்தனாகி, வேடுவர்களின் வலையிலே சிக்குண்டு மருண்டு அவ்வலையைக் கிழித்துக்கொண்டு ஓடுகின்ற மானைப்போல ஒரு நல்லாசிரியனை நாடிச் செல்லலே தகுதி யெனத் துணிந்து, கையில் பத்திர புஷ்பாதிகளைக் கொண்டு ஒரு இல்லறத்தான் பக்குவ மனமுடையவனாய ஆசிரியனைத் தேடி வந்தவன், அங்கே கூடியிருந்த சபையையும், அச்சபையின் நடுவண் வீற்றிருந்த சைவாசிரியரையும் கண்டு, "கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது" என்னும் பழமொழியை நினைத்துக் கொண்டு பயபக்தியுடன் அச்சைவாசிரியரை யணுகிப் பத்திர புஷ்பாதிகளால் அவர் திருவடியை யர்ச்சித்து, 'ஐயனே, மனத்தையனே, நான் மாயவாழ்வில் மருண்டேன்; ஐயம் பலவுங் கொண்டேன், தங்களையே குருவெனக் கொண்டேனாதலின் அடியேன் கொண்ட ஐயங்களை நீக்கி என்னைப் புனிதனாக்க வேண்டு'மென்று விண்ணப்பித்து மெய்சிலிர்ப்பக் கரங்கள்கூப்பிப் பன்முறை பணிந்து துதித்தான்.

அவ்விதம் துதித்து நின்றானை அச்சைவாசிரியர் பக்குவி யென்றுணர்ந்து, 'ஆமை மீன் பறவை போலத் தன்னகம் கருதி நோக்கித் தடவிச் சன்னதியிருத்தி', "பக்குவியே! நீ உன் மனத்துற்ற ஐயங்களை வினவலாம். ஈண்டு பலசமயப் பண்டிதர் நிறைந்துள்ளார். யாவருக்கு மொப்ப உன் ஐயங்களை நீக்குகின்றேன்; கேட்பாயாக" என்றார்.

பக்குவி:—ஞானதேசிகரே! இவ்வுலகின்கண் நானு பேதமாகிய சீவயோனிகளில் பல துன்புறுதலானும் பல இன்புறுதலானும் ஒன்றுக்கொன் றுயர்ந்தனவாயிருக்குமோ? அல்லது எல்லாம் பொதுவாய் இன்பதுன்பங்களையடைவதால் சமமானவையா யிருக்குமோ? இதனைத் திருவாய் மலர்ந்தருள வேண்டும்.

சைவாசிரியர்:—அறிவை ஒன்றுக்கொன் றதிகமாகவுடைய தாவர சங்கமங்களாகிய இருவகைத் தோற்றத்தினுள்ளும், தாவரத்தைவிட சங்கமமே அறிவுமிகுதியை யுடையதாதலின் உயர்ந்ததாகும். அச்சங்கமமாகிய சரத்தினுள்ளே மேலான அறிவையுடையவர்கள் மனிதர்களாதலால் அம்மனிதரே உயர்ந்தவர்கள். எப்படி யென்றால்,—புல் மாமுதலியவைகள் ஸ்பரிசத்தை யறியும் அறிவையும்; இப்பி, சங்கு முதலியன ஸ்பரிசவறிவோடு நாவால் இரசத்தை யறியும் அறிவையும் கறையான், எறும்பு முதலியவைகள் முற்கூறியவற்றோடு வாசனையையறியும் அறிவையும்; தும்பி, வண்டு முதலியவை அம்மூவறிவோடு உருவத்தை யறியும் அறிவையும்; விலங்கு, பறவை முதலியவைகள் அந்நான்கனோடு சத்தத்தையறியும் அறிவையும்; உடையனவாயிருக்கின்றன. மக்கள் தேவர், நரகர் முதலியவர்கள் அவ்வைந்தினோடு பகுத்தறிவை யுடையராதலின் அவர்கள உயர்ந்தவர்கள். அவருள்ளும், இன்பதுன்பங்களை யநுபவிக்காமலிருக்கு முத்திநிலையை யடைதற்குரியார் மனிதரேயாதலின் யாவரினுமுயர்ந்தோர் மனிதராவார். அம்மனிதரா நம்மா ரிடத்துப் பகுத்தறிவிருத்தலை யாங்ஙன மறிதுமெனிற் கூறுவாம். கார்த்தல், புளித்தல், துவர்த்தல், உவர்த்தல், கைத்தல், தித்தித்தல் முதலிய அறுசுவைப் பதார்த்தங்களையும் இவ்வியாமுத போஜனங்களையும் அறிந்து புசித்தலும், சிறந்த அம்சதூளிகா மஞ்சத்தில் இலவம் பஞ்சு நிரப்பிய மெல்லியபட்டு மெத்தையின்மேல படுத்துறங்குதலும், மதனநூலிற் கூறியாங்கு 64 லீலைகளுடன் ஸ்திரீ கிரீடை செய்தலும், துக்க முதலியவை வந்தகாலத்து அதற்கேற்ற உபாயஞ்செய்து அவைகளை நீக்குதலும்



பெரும் பயன் தாக்கூடிய ஆச்சரியமான இயந்திர முதலியவற்றை யியற்றுதலும்,
"[illegible]டையெச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு"

என்றபடி நாணுடைமையைக் கொண்டிருத்தலும், மிருகாதிகளுக்கின்றி இம் மனிதர்களிடத்துண்மையின் அவர்பாற் பகுத்தறிவுண்டென்பது போதரும். இவைகளான் மனிதரே மேம்பட்டாரென வறிக.

பக்குவி:—அங்ஙனமாயின், அம்மனிதருள்ளும் ஏற்றத் தாழ்வுண்டோ? ஆயின் உயர்ந்தோர் யார்? தாழ்ந்தோர் யார்?

சைவா:—முன் கூறியபடி சர்வ ஜீவராசிகளினும் மேலான நிலைமையிலிருந்து விசேஷ அறிவைப் பெற்று இருந்தும், பலவுயிர்களைக் கொன்று அவற்றின் மாமிசத்தைப் புசித்து மலம் நிறைந்த வுடலை வளர்க்கின்ற மனிதர்களே தாழ்ந்தவர்கள். மேலோர் யாரெனில் — "நமது சரீரமோ நிலையற்றது, நீர்க்குமிழியை ஒத்தது; இப்போதே அழியக்கூடியது. இத்தகைய உடலை நாம் பிறவுயிர்களைக் கொன்று அவற்றின் மாமிசத்தை உண்டு வளர்ப்பது மகாபாதகம், பாவம். இக்காரியத்தைச் செய்வதால் நாம் நெடுநாள் வருந்த வேண்டிவரும். ஏன் என்றால் ஆன்மா நித்தியமாதலால் அக் கொலையானது ஆன்மாவை அநேக காலந் தொடர்ந்து மீளாத துக்கத்தை விளைவிக்கும். ஒருவன் நமக்கு மிகுந்த துன்பத்தை யுண்டாக்கினாலும் அதற்காக அவனுக்குத் துன்பஞ் செய்யாமல் அவனைக் காப்பதன்றோ நமது கடமை?" என்ற உறுதியைக் கொண்ட கொல்லா விரதத்தை மேற்கொண்டவர்கள்தான் உயர்ந்தவர்கள்; அவர்களே எம்பிரானுக் குகந்தவர்கள்.

(தொடரும்)

ஐ. க. பெருமாள்சாமி முதலியார்,
காரியதரிசி,
செங்குந்த வாலிபர் சங்கம், பவானி.

## சுகாதாரப் பகுதி

### முறைஜுரம் அல்லது மலைக்காய்ச்சல்
### (Malaria.)

முறைஜுரம் மலேரியல் பாரஸைட்ஸ் (Malarial Parasites) என்னும் கிருமிகளினால் உண்டாகிறது. இவை தோலிருக்கச் சுளைகளை விழுங்குவபோல், உடலிருக்க அதன் சாராம்சங்களை விழுங்கி, மனிதர்களை ஹிம்சிப்பதில் அதிகதிறமை பூண்டவை என்பதில் ஐயமில்லை.

எங்ஙனமெனின், நோயற்ற வாழ்வாகிய குறைவற்ற செல்வத்தையும் இவை கொடுப்பதில்லை. மனிதர்களுக்கு மரணத்தையும் சீக்கிரத்தில் கொடுப்பதில்லை. மற்றென்னவென்றால், தேகத்தைச் சகிக்கமுடியாத கஷ்டத்துக்குள்ளாக்குவதும், நடமாடி வேலை செய்ய இயலாமல் செய்துவிடுவதும், மனிதரை நெடுநாளைக்குப் பிரயோஜன மற்றவ ராக்கி விடுவதுமேயாம்.

ஆகவே சுருங்கச் சொல்லி விளங்கவைத்த ஔவை வாக்கைப் போற்றி அநுசரித்து இந்நோய்க்கிடங் கொடாமல், இந்நோயின் குறிகளையும், இதன் பயன்களையும், இது வரும் காரணங்களையும், இதைத் தடுக்கும் உபாயங்களையும் கவனிப்பது அத்தியாவசியமன்றோ?

இவைகளை ஒன்றன்பின் ஒன்றாகக் கவனிப்போமாக.

இந்நோய் முதலில் அதிக குளிர் நடுக்கலைக் கொடுத்து, பிறகு ஜுரத்தை யுண்டுபண்ணி, இவை நீங்குஞ் சமயம் அதிக வியர்வையை உண்டாக்கும் தன்மையுள்ளது. இச்செயல்கள் நீங்க, மனிதருக்குக் களைப்பும், ஆயாசமும் மிகும்; சரியாக ஆகாரம் ஏற்க இயலாது.

இவ்விதம் சிலருக்கு ஒருநாள் விட்டு ஒரு நாளும், சிலருக்கு இரண்டு நாட்கள் விட்டு ஒரு முறையும், ஜுரம் வந்து வருத்துவதால், இதற்கு முறை ஜுரம் என்று காரணப் பெயரிட்டனர்.

இப்படிப் பன்முறை வருத்துவதைத் தகுந்தபடிக்கு, விரைவில் சிகிச்சை செய்யாது விடில் இதன்பயனோ வெகு கொடுமையாம்.

ஒருவன் இங்ஙனம் பன்முறை பீடிக்கப்பட்டுருவந்தினால், நாளடைவில், அவனுடலிலுள்ள இரத்தங்கெட்டு, உடல் வெளுத்து, ஆகாரமின்றி, அதிக பலஹீனமடைந்து, சிலகாலங்களுக்குள் காலனைக் காண்கின்றான்.

மற்றொருவர் இவ்விதம் பல்கால் வருந்துங் காலத்தில், அவருடலிலுள்ள மண்ணீரல் பருத்து, ஜுரக்கட்டியுண்டாய் (Enlargement of the Spleen), உடல் வருந்துகையில், அதனுள் உள்ள ஆன்மா இப்பிணியுடலில் இனி இருக்கவொண்ணாது என்று வெளியாகி விடுகின்றது.

ஆகவே இவ்வியாதியாலும் மரண பயமுண்டென்பது உள்ளங்கை நெல்லிக்கனியே யாகும்.

துரைத்தனத்தாரால் குறிக்கப்பட்ட மரணத் தொகை (Death rate) யை நோக்கில், இப்பிணியால் மாண்டவர் தொகைதான் அதிகமாக இருக்கின்றது.

ஆனால் இது தானத்திற் பெரிதாகிய நிதானத்தைக் கையாண்டு தன் காரியத்திற் கண்ணாய், மனிதர்களை ஏமாற்றி, உயிர் துறக்கச் செய்வதால், இதற்கு ஜனங்கள் பயப்படுகிறதில்லை. இதுதான் பிழை.

இக்கிருமிகள் எங்ஙனம் வஞ்சிக்கின்றனவென்றால், மனிதரிடத்தில் அதிக ஜீவகாருண்யமுடையவைபோல் அபிநயிக்கின்றன. வைசூரி, வாந்திபேதி கிருமிகளைப்போல், வெகு சுருசுருப்பாக மனிதர்களுடன் போட்டாப்போட்டி செய்து, மனிதர்களுடைய திறமைகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் முந்தி வெகு ஜாக்கிரதையாக முயன்று மனிதர்களை முடிவுசெய்யா. மற்றும் யாது செய்கின்றனவென்றால், "எவ்விதமாக வோ உங்கள் உடம்பிற் குடியேறிவிட்டோம். இனி பகையாளிக் குடியை உறவாடிக் கெடுத்து சிங்கியைப்போல் குளிர்ந்து கொல்ல எத்தனிக்கிறோம்; நீங்கள் ஜாக்கிரதையாக முயன்று, தக்க ஏற்பாடுகளைச் செய்து எங்களை உங்கள் ஊரைவிட்டோ அல்லது உடலைவிட்டோ துரத்திவிட்டால் போய்விடுகிறோம்" என்கிற விநயவார்த்தைகளை வசனித்துக்கொண்டே இருந்து, உடலிலுள்ள ஆவியைப் போக்கி, ஜெயமடைகின்றன.

இந்நயவார்த்தைகளினால் ஜனங்கள் சிகிச்சை செய்வதில் தாமதிக்கிறார்கள். 'நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம். இன்றைக்குக் கையில் காசில்லை. வைத்தியன் அதிகமாக செலவு வைக்கிறான்' என்கிற பற்பல ஆலோசனையிலேயே காலங்கழிக்க, தேகத்தின் வலிமை குன்றி, நோயின் வலிமை முதிர்கின்றது.

ஆகையால் இச்சகுனி மாமன்மார்களின் நயவஞ்சக செய்கைகளுக்கிணங்கினால், தென்திசைத் தலைவனிடத்தில் முறையிட்டுக் கொள்ளத்தான் வேண்டும்.

அவ்விதமே ஆகட்டுமே என்றால் இக்கொற்ற மரணம் கொடுமையினும் கொடுமையன்றோ? ஏனெனில், சிலர் கொள்கையின்படி "திட்டென்று வீழ்ந்து பொட்டென்று போய்விடுவது பூர்வ புண்ணியம்".

"நோயுற்றிடாமல் நொந்து மனம்வாடாமற்
பாயிற்கிடவாமல் பாவியேன்—காயத்தை
யோர்நொடிக்குள் நீக்கியெனை யுன்போருளையா
சீரடிக்கீழ் வைப்பாய் தெரிந்து." [கின்

என்ற வாக்குகளுக்கு மாறாக. நீடித்த காலம் நோயால் வருந்திக்கிடப்பதால் தாங்களும் கஷ்டப்பட்டு வருந்தியும், பிறர்க்குக் கஷ்டத்தைக் கொடுத்து வருத்தியும், இல்லத்தில் வரவு குறைவால் உள்ளதையும் செலவிட்டு, பெண்டுபிள்ளைகளை அநாதரவாகவிடுத்து உடலை விடுத்துத் தானும் விண்ணேகுதல் பிரலாபிக்கத் தக்கதேயன்றோ?

ஆகவே, இக்கொற்ற பகையாளிகள் ஊரில் நுழைந்த பிறகு, அவர்களுடன் போர்செய்து துரத்த முயலாது, இப்பகையாளிகள் ஊரில் நுழையாதபடி, முன் ஜாக்கிரதையாக, 'இவர்கள் யாவர்! இவர்களின் தன்மையென்ன வரும் வழிகள் எவை? இவைகளைத் தடுக்கும் உபாயங்கள் எவை,' என்று பற்பல விதங்களாக விசாரித்துத் தக்க ஏற்பாடுகளைச் செய்வது தேகாபிமானமுள்ளவர்களின் கடமையாகும்.

இப்பகையாளிகள், முன் சொல்லியபடி மலேரியல் பாரெஸைட்ஸ் (Malarial Parasites) என்னும் கட்புலனுக்ககப்படாது அணுதரிசனி (Microscope) யினாலேயே பார்க்கக் கூடிய மிகச் சிறு கிருமிகளே ஆகும்.

இவை மனிதருடலில் புகுந்து அவர்களின் இரத்தத்திலுள்ள ரெட் கார்பஸ்ல்ஸ் (red corpuscles) என்னும் அணுக்களைப் புசித்து, விருத்தியாகித் தங்களிடத்திலுள்ள விஷத்தை



மனிதருடலில் கக்குகின்றன. இவ்விஷம் ஜீவாதாரமாகவுள்ள இரத்தத்தைக் கெடுத்து உடலை வெளுக்கச்செய்து மனிதர்களை வீணர்களாக்கித் தங்கள் காரியத்தை நிறைவேற்றிக் கொள்ளுகின்றன.

இவ்விஷக் கிருமிகள் மானிடருடலில் எங்ஙனம் புகுகின்றன என்பதைச் சற்றுக் கவனிக்க வேண்டி இருக்கின்றது.

இவை நேராகவே வைசூரி வாந்திபேதிக் கிருமிகளைப்போல வாயு, அப்பு மூலமாக மனிதருடம்பிற் புகுகிறதில்லை. இவைகளுக்கு முறை ஜுரமுள்ள மனிதர்களும் கொசுக்களும் ஆரோக்கிய ஸ்திதியிலுள்ள மனிதர்களும் வேண்டும்.

ஓரிடத்தில் முறை ஜுரத்தால் பீடிக்கப்படுகிறவர் இருந்தால் அவருடம்பின் இரத்தத்தில் மலேரியல் பாரெஸைஸ்டஸ் (Malarial parasites) இருக்கின்றன. கொசுக்கள் அந்த இரத்தத்தை உறிஞ்சுகையில் இரத்தத்துடன் விஷக்கிருமிகள் கொசுக்களின் இரைப்பைக்குள் பிரவேசிக்கின்றன. இரைப்பையில் பாரெஸைஸ்ட்ஸ் (Parasites; பக்குவமடைந்து ஜைகோட் (Gygote) என்னும் வஸ்து உண்டாகக் கொசுவின் இரைப்பைச் சுவரில் ஒட்டிக்கொண்டு வளர்கின்றது. அங்குள்ள சீதோஷ்ண ஸ்திதிக்குத் தக்கவாறு 12 தினங்கட்குள் ஜைகோட் பெரிதாகி வெடித்து அநேக அணுவளவாகிய ஸ்பொரொஜைட்ஸ் (sporogaites) வெளியாகின்றன. இவை கொசுக்களின் உமிழ் நீர் கோளங்களு (salivary glands) க்குள் செல்கின்றன. இக்கோளங்களுக்கும் கொசுக்களின் கடிக்கும் அவயவங்களுக்கும் பரஸ்பரஞ் சம்பந்த மிருப்பதால், கொசுக்கள் நல்ல தேகஸ்திதியிலிருக்கும் மனிதரைக் கடிக்கும்போது, ஓடுகிற நீரில் மீன்கள் எதிரேறிச் செல்வதைப் போல், கொசுக்களின் அவையவங்களிலிருக்கும் இவ்விஷக் கிருமிகள் மனிதரிடமிருந்து வரும் இரத்தத்தின் எதிரேறி மனிதருடம்பிற் புகுந்து அங்கு மனிதருடம்பிற்கேற்ப விருத்தியாகித் தங்களுக்குண்டான தொழில்களைச் செய்ய ஆரம்பிக்கின்றன.

வித்துக்கேற்ற மரம் முளைப்பதுபோல் இக்கிருமிகள் தங்கள் விஷத்தைக்கொடுத்து இம்முறைக்காய்ச்சலை உண்டாக்குகின்றன.

இவ்விஷ வித்துக்குள் சில 24-மணி நேரத்திற் கொருமுறையும், சில 48-மணி நேரத்திற் கொருகாலும். இன்னும் சில 72-மணி நேரத்திற் கொருதடவையும் இரத்தத்தில் விருத்தியாகின்றமையால், இவைக்குத் தக்கவாறு ஜுரம் தினந்தோறும் அல்லது ஒருநாள் விட்டும் அல்லது இரண்டு நாட்கள் விட்டு ஒரு முறையும் வருகின்றது.

இங்ஙனம் மனிதர்கள் வருந்தி நாளடைவில் அடையும் நிலையை மேற்காட்டியுள்ளோம்.

இந்நோய் வந்துவிட்டால் என்ன செய்வதென்றால் :—

முதலில் குளிர்வருவதால் அது வந்தவுடனே தேகத்தைக் கம்பளி துப்பட்டி முதலானவைகளினால் மூடித் தைலங்களைக்கொண்டு கை கால்களில் தேய்க்கலாம். முனைல் தவிடுகளை வறுத்து ஒத்தடங்கொடுக்கலாம். வேண்டுமானால் சுடுகையாக காஞ்சி குடிக்கக் கொடுக்கலாம் எவ்வகையாகவோ உடலில் சூடு பிறக்கச்செய்தால் குளிர் சீக்கிரம் விடும்.

குளிர் நீங்கிச் காச்சல் வருவதால் அதைச் சீக்கிரம் தணிக்கவேண்டும். உள்ளுக்குக் குவைனு (Quinine) வையாவது நிலவேம்பு கஷாயத்தையாவது கொடுக்கலாம். இதற்குத் தக்க வைத்தியர்களைக் கொண்டுதான் சிகிச்சை செய்ய வேண்டி இருக்கிறது.

பிறகு வியர்வை விடுங்கால் துணியால் வியர்வையைத் துடைத்துக் கொண்டிருந்து, குளிர் காற்றுப் படாமல் காத்துக்கொள்ளல் வேண்டும்.

நோய் வந்துவிட்ட பிறகு இதற்குத் தகுந்த வைத்தியர்கள்தான் தக்க உபகாரிகள்.

வெள்ளம் வருமுன் அணைபோடுவதுதான் மதியூகம்.

(தொடரும்.)

மா. பரமகுருநாத முதலியார்,
சானிடெரி இன்ஸ்பெக்டர், திருமயிலாப்பூர்.

# மாதர் பகுதி

## சீர்சால் மகளிர்.

சென்ற ஆனித்திங்கள் செங்குந்த மித்திரனில் "வாழ்க்கைத்துணை நலம்" எனத் தலையங்கமிட்டுப் பெண்மக்களியலும் அவர் தமக்கு வேண்டியபேறும் இவையென என் அறிவிற்கு எட்டியவரை கூறினேன். மற்றும் அவர்களின் ஒழுக்கம் இத்தன்மைத்தாக இருக்கல் நலம்; இவ்வொழுக்கமுள்ள மகளிர் சீர்சால் மகளிராவர் என எழுதவேண்டும் என்னும் ஆர்வம் என் மனத்து எழுந்தது. ஆகலின் இக்கட்டுரை யெழுதத் தொடங்குகிறேன்.

ஆடவரெனினும் மகளிரெனினும் பிறர் பழியாதனவும் நன்னெறியாயனவும் ஆகிய வாழ்க்கை வழியைக் கைக்கொண்டிருப்பின் அன்னவர் சீர்சால் மக்களென யாவராலும் புகழப்பட்டு இம்மை மறுமைப் பேறுகளை யடைந்தவராகக் கருதப்படுவர். ஆகவே, அத்தகைய வொழுக்கம் யாதென ஆராயவேண்டுவதுங் கைக்கொள்ள வேண்டுவதும் அறிவுடையார் செயலென்க. ஆகவே. மகளிரும் நன்னெறிக்கண் நிற்பரேல் யாவராலும் புகழப்படுவர் என்க.

ஒரு பொருளை இஃதித்தன்மைப்பட்டது; இஃதிவ்விதம் இருக்கவேண்டும்; இத்தன்மையான பொருள் நற்பொருள் என அறியவேண்டுமாயின், அப்பொருளின் இயல்பையும், அப்பொருளின் பயனையும் ஆராய்ந்த பின்னரே அறிய வியலும். ஒரு மாணிக்கத்தை இது நல்லதா கெட்டதா என அறிய விரும்புவோன் அப்பொருளின் உற்பத்தி, சிறப்பு, இலக்கணம் பயன் ஆகிய பிறவற்றையும் ஆராய்ந்தால், இம்மாணிக்கம் இத்தன்மைத்து; இஃது இவ்விதம் பயன்படவேண்டும் என அறிய வியலும். ஆதலின் நாமும் மகளிருட் சீர்சால் மகளிராவார் இவர் எனக் கூறுமுன், அவர்கள் உலகிற் செய்துகொண்டிருப்பவை யாவை என ஆராய வேண்டுவது இன்றியமையாதது.

மகளிர் உலக நிகழ்ச்சிக்குச் செய்யுந்துணைகள் மிக இன்றியமையாதன. இவர்கள் தமது நாடு மிக்க மேன்மையுள்ளதாகக் கருதப்படும் எல்லா காரணங்களுக்கும் முதல்வர்களாக இருக்கிறார்கள். மக்களைப்பெற்று நோய் வராது காத்து நல்லொழுக்கத்தி னிறுத்திப் பேறுடையவர் ஆக்குகிறார்கள். நாம் நமது அன்னையர்கள் நம்மிடங்காட்டிவரும் அன்பையும், நம்மைச் சிறு குழவிப் பருவத்திருந்து உணவளித்து, நோய் நீக்கி, வலியளித்து, வளர்த்த தன்மையையும் உன்னும்போது நம்முடைய உள்ளம் நம்மைப் பேருவகையில் ஆழ்த்தி, அன்னவர்பால் என்றும் மாறாத நன்றியறிதலுக்குப் பெருங்கடமையுள்ளவர்களாக்குகிறது என்பதை யாவர் மறுக்கவியன்றவர்?

நம்மைத் தமது வயிற்றிற் சுமந்து, பெற்று, வளர்த்து, அறிவுடையவர்களாக்கி விடும்வரை அவர்கள் படுந் துன்பங்கள் இத்தன்மையவென நம்மால் இயம்ப முடியுமா! நாம் கருவிலிருக்கும்போதும், பால் கொடுத்து வளர்க்கைப்படும் போதும், நமக்கு நன்மையைத் தரும் ஆகாரத்தையே அவர்கள் உண்ணவேண்டிவருகிறது. நமக்குச் சிறிது நோயுண்டாயினும் அந்தோ! அவர்கள் படுந்துயர் இவ்வளவென்றுரைக்க வியலாது. தன் குழந்தை சிறிது நேரங் காணாவிடினும் பெருநிதி யிழந்தவள் போற் பெற்றவள் படுந்துயர் அவளே அறிவள். உலகில் ஒருவர்க்கு மிக்க அன்புடையார் அன்னையாரை யன்றி மற்றெவரும் இலர் எனப் பெரியாருங் கூறினர். பட்டினத்தடிகளும் எப்பற்றையும் நீக்கினும் அன்னையாரை மட்டும் நீக்க அறியாய் அன்னை யிறக்குமளவும் ஆங்கே உழன்றுகொண்டிருந்தார். அவரால் அன்னை யிறந்தமைக்கு ஆற்றாது பாடப்பட்ட பாடல்கள் மனவுருக்கத்தை யுண்டாக்குவன. ஆடவரும் பெண்டிரும் பலமுள்ளவர்களாகவோ பலமில்லாதவர்களாகவோ தமது வாழ்நாளிற் காணப்படுவது பெற்றோரின் முயற்சியளவேயன்றி வேறல்ல. கருப்பகாலத்தில் ஒரு குழவிக்குண்டான நோய் எவ்வித மருந்தினாலும் நீக்க வியலாதென்பது மருத்து நூலார் துணிபு. மக்கள் குணக்கேடாயிருப்பின் பெற்றோரையே யிகழ்கிறார்கள்.

இதுகாறுங் கூறியவை மகளிர் தம் குழவிகட்குச் செய்யும் நன்மையாம். இனி மகளிர் தமது கணவரிடம் நடந்து கொள்ளும் முறை



யைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். "தாய்க்குப்பின் தாரம்" என்பது பழமொழி. இப்பழமொழி தாயின் ஆதரவு நீங்கியபின் தன் மனைவியின் ஆதரவே ஒரு ஆடவனுக்கு உலகில் நன்மை பயப்பது ஆம் எனில, ஒருபெண் தனது கணவனைத் தாயைப்போலக் காக்க உரிமையுள்ளவள் ஆவள். தாய் எங்ஙனந் தன் குழவிக்கு உணவளிப்பதிலும் அன்பு செலுத்துவதிலும உரியவளோ அங்ஙனமே மனைவியும் உரியவள். அங்ஙனமே மனைவிக்குங் கொண்டானில் மிக்கொரு கேளிரில்லையாதலாற் கணவனுந் தன் மனைவியிடத்து அன்பு செலுத்தவும் பாதுகாப்பதினும் உரியவன் ஆவன் என்க. காதலரிருவருந் தம்முள் மனமொத்து நடத்துவதே இலவாழ்க்கையாம். "இல்வாழ்வா னென்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றில் நின்ற துணை" யாவனாதலின் மனைவியும் அத்தகைய துணைக்கு உரியவளாகிறாள். நமது நாட்டு முறைப்படி ஆடவர்கள் பொருளீட்டிக் கொணர்வதினும் பெண்டிர் அப்பொருளி னுதவிலையக் கொண்டு தம்மையுந் தங்கணவரையும் குழந்தைகளையும் உனவளித்தும் பிறசெய்துங் காப்பதினும் உரியவர்களாகின்றனர்.

முற்காலத்துப் பெண்கள் மிக்க புகழுடையவர்களாக இருந்தார்களெனக் கேட்கின்றோம். "தெய்வந்தொழா அள் கொழுநற்றொழு தெழுவாள் பெய்யெனப்பெய்யுமழை" என்று புகழப்பட்டவர் நமது நாட்டு முற்காலத்துப் பெண்டிரே. கணவன குணமறிந்து நடக்கும் பெண்ணே முற்காலத்துச் சிறந்தவளாயினள். காரைக்காலம்மையார், கண்ணகி, நளாயினி, வாசுகி போன்ற மணிகளின் பெயர்கள் இன்றளவுஞ் சிறந்து மிகப் புகழுடன் விளங்குகின்றன. கண்ணகியைப் பத்தினித்தெய்வம எனக்கொண்டாடி வந்தனர்; வருகின்றனர்.

கணவனும் மனைவியும் ஒருவர்க்கொருவர் தமக்குள் கொள்ளும் அன்புக்குக் காதல் எனப் பெயர் கூறுகிறோம. பெற்றோர்கள் தங்குழவியினிடத்துக் கொள்ளும் அன்பும், கணவனும மனைவியுந் தமக்குள் கொள்ளும் அன்பும் இயற்கை வலியாற் பற்றப்பட்டு அமையப்பெற்றன. மாசற்ற காதலனுங் காதலியும் ஒரு கொடிப்போதும் பிரிவறியார். அவர்களின் ஒற்றுமை பூவும் மணமும் போன்றும் மணியு மொளியும் போன்றும் பிரியாது அமையப்பெற்றது. இவர்களுடைய அன்பு இத்தன்மைத்தாகவே இருப்பின் உலகவாழ்வில் வேறெவையும் இணை பெறமாட்டா. இவர்களிடம் பிறக்குங் குழந்தைகள் உலகிற்கும் பெருந்துணை செய்யும் இயற்கையவா யிருக்கும்.

பெண்டிருடையவும் ஆடவருடையவுமான தீய ஒழுக்கங்களால் உடல மெலிந்து நோய் சூழ்ந்துள்ள காலத்துப் பிறக்குங் குழவிகள் நோயுடையவையாயும் நல்லறிவில யிழந்தவையாயுங் காணப்படும். ஆனது பற்றியே ஒரு ஆடவன் ஒரு பெண்ணையே மணந்து இருக்க வேண்டும் என்றும், ஒரு பெண் ஒரு ஆடவனையே மணந்திருக்க வேண்டும் என்றும நியதி யேற்பட்டுள்ளது. அன்றியும், மனத்தையும் புலன் சென்ற வழியெல்லாஞ் செல்லவிடாமல் அடக்குந் தன்மை பெண்டிர்க்குக் "கற்பு" என்னும் ஒழுக்கத்தால் உண்டாகின்றதாதலால் அக்கற்பைப் பெண்கள் கைக்கொள்ளவேண்டும் என விதித்திருக்கின்றனர். மனத்தை யொருவழிப்படுத்தும முறையால் உண்டாகும் ஆற்றலின்னதென இக்காலத்தில் யாவரும அறிவர். யோகிகள் செய்யத்தக்க தன்மையைக் கற்புடைய பெண்கள் செய்யவல்லவா. கற்பு என்பது "கணவனையே துணையாகக் கொடலவேண்டும; பிற ஆடவரை மனத்தினும நினைக்கலாகாது" என ஆன்றோரால அறிவுறுத்தப்படுவது. மற்றையவற்றைக் கற்பு என்னும அவ்வியல்பு ளடங்குவதையும், அவற்றினும் இவை சிறப்புடைமையும அறிக. இவ்வாறு கூறினமை கொண்டு ஆடவன பல பெண்களை மணக்கலாம விபசாரம செய்யலாம என்று பொருளல்ல. ஆடவரும ஒரு பெண்ணையே மணக்கவேண்டும; பிற பெண்களைக் கனவினும் நினைத்தல பெருந்தவறு; பரத்தையரைப் பார்த்தலும ஒண்ணாது. இங்ஙில தவறுவல இவனுந் தனது வலியை யிழந்து தீய செயல்களுக்குடன்பட்டு இம்மை மறுமைப் பயன்களை யடியோடிழக்கின்றன் என்க. இக்காலத்து ஆடவர்கள் பெண்டிரை அடிமைகளெனக் கொண்டு அவரை மட்டும ஒழுங்காக இருக்கவேண்டும் எனக்கூறித் தாம பல பெண்களை மணக்கவும் பரத்தையர் நேசம வைத்துக் கொள்ளவும் உரிமையுடையவராகவெனக் கூறுதலும் செய்தலும பெருந்தவறென்க. ஆடவரை மட்டும விபசாரம் செய்யவும், பல பெண்களை ஒருங்கே மணக்கவும் விதிக்கும நூல சதிக்குடைய நூலேயாம. (சதி-வஞ்சனை).

உலகப்போக்கில் ஆடவர் வடிவ அமைப்பும் பெண்டிர் தம் வடிவ அமைப்பும் ஒருவரை

றது. அந்தோ! பரிதாபம்! தனக்கென்று வீடு கட்டி வெளியிலேயும் போக வேண்டுமோ? கடனன்றோ?

இதுபோல் லாகிரி வஸ்து உபயோகித்தல் சூதாடுதல் முதலானவைகளிலும் பணத்தைச் செலவு செய்து,

'அகடா ரால்ல லுழப்பர் சூதென்னு
முகடியான் மூடப்பட்டார்'—என்னும்

பெரியார் வாக்கையும் கவனியாது கெட்டுப்போய், இம்மையில் வறுமையையும் மறுமையில் நரகத்தையும் அனுபவிக்கிறார்கள். இவர்களைப் பொது நன்மைக்காகவோ தருமத்திற்காகவோ சிறிது உதவச் சொன்னால் சாக்குப்போக்குச் சொல்லி விடுகிறார்கள். இதுவுமல்லாமல், குறைந்த சந்தாவில் நமக்குப்பல நன்மைகளைத் தரக்கூடிய "செங்குந்தமித்திரனை"யாவது வாங்கி வாசிக்கக்கூடாதா வென்றால், அதற்கும் மறந்துக் கூறிவிடுகிறார்கள். பாவம்! "நான் கெட்டுத்தான் போவேன், இன்னும் பர்தயம் என்ன?" என்பது போலிருக்கிறது.

கிரு:—ஐயா! மிக்க வந்தனம் இன்று எனக்கு அரிய உபதேசம் செய்தாய். நாழிகை ஆகிறது; போய் வருகிறேன். ஊருக்குச் சென்ற உடன் செங்குந்த மித்திரனுக்கு நானொரு சந்தாதாரனாகச் சேர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

கோ:—நீ சந்தாதாரனாகச் சேர்ந்து கொள்வதைப் பற்றி நிரம்பவும் சந்தோஷமடைகிறேன். அதோடு இன்னும் உன் நண்பர்களையும் சந்தாதாரர்களாகச் சேர்த்து வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். நல்லது போய்வருக! வந்தனம்.

ஆ. ம. ஆறுமுகமுதலியார்,
அம்பாசமுத்திரம்.

## நாவல் பகுதி

### முன்னாளும் இந்நாளும்

### முத்துவீரப்பன்

அல்லது

### கீழமேடு—சேங்குந்தபுரம்

"பத்து, இருபது, முப்பது, நாற்பது........." என்று பினாங்கில் நான்கடுக்கு மெத்தையுடைய ஒரு கட்டடத்தின் ஓரறையில் இரவு சுமார் ஒன்பது மணிக்கு ஒருவன் தனியே உட்கார்ந்துகொண்டு தன்னிடமிருந்த நோட்டுக்களை எண்ணிக் கொண்டிருந்தான். அவனுக்கு ஏறக்குறைய 24 வயதிருக்கலாம்; மாநிற முடையவன்; மிதக் கட்டமைந்தவன். நற்குணங்களுக் கறிகுறியாகவிருந்த அவனது முகத்தில் ததும்பிய சந்தோஷம் அவன் பலநாட்களாகப் பிரிந்திருந்த மனிதனையோ மற்றெதையோ சமீபத்தில் காணவிருப்பதுபோல விளங்கிற்று. தம்மூர் விட்டு வேற்றூருக்குக் கல்வி பயிலுதற்கும் தமது தாய்தந்தையரையும் மற்ற பந்துக்களையும் விட்டுச் சென்று விடுமுறைகாலத்தில் பிரிந்தவரோடு மறுபடி கூடிக் குலாவத் தங்களில்லத்திற் கேகும்பொழுது மாணவர்களடையும் மகிழ்ச்சியை எவரே அறியார்? அக்காலத்தவரடையும் சந்தோஷத்திற்கு அளவிலா திரவியமும் ஈடாமோ? நமது வாலிபனது சந்தோஷமும் அதோடு சற்று ஒத்ததாகவே இருந்தது. தனதிடமிருந்த நோட்டுக்களையெல்லாம் எண்ணி, பத்தாயிரம் என்று முடித்து, அவைகளைத் தன் பெட்டியில் வைத்துவிட்டுத் தனது படுக்கையில் படுத்துக் கண் விழித்த வண்ணமே யோசிக்கலானான். அவன் மறுநாள் செய்ய இருக்கும் காரியத்தை நினைக்க நினைக்க அவன் மனதினில் மகிழ்ச்சி பொங்கி எழுந்தது. இவ்வண்ணம் இருக்கையில் அங்கிருந்த கடிகையாரம் டிங் டிங்கென்று 11 அடித்தது. மணி அதிகமாகிவிட்டதென்று தூங்குவதற்காகக் கண்களை மூடினான். முதலில் தூக்கம் வரவில்லை. ஆயினும் நாழிகையாகவாக உறங்கிவிட்டான்.

இரவு நீங்கிப் பகல் தலை காட்டிற்று. சூரியனும் தனது கதிர்களை அழகுடனும் கம்பீரத்துடனும் அமைந்திருந்த பெரிய வீடுகளின் மீது வீசினான். தெருக்களில் ஜனங்கள் தங்கள் தங்கள் அலுவல்களைக் கவனிக்குமாறு பரபரப்புடன் சென்றுகொண்டிருந்தனர். சுமார் 6-மணிக்கு நமது வாலிபனும் துயிலொழிந்தெழுந்தான். பிறகு காலைக் கடன்களை முடித்துக்கொண்டு சிற்றுண்டி அருந்தினான். பிறகு சில வேலைகளைக் கவனித்தான். சுமார் பன்னிரண்டு மணிக்குப் பகற்போஜனமருந்திவிட்டுத் தன் பெட்டியோடு வேறொரு மூட்டையோடும் தனது சிநேகர்களிடம் சில வார்த்தைகள் பேசிவிட்டுத் தான் தங்கியிருந்த [illegible] ஓட்டலினுடைய படிகளை விட்டிறங்கி முத்துவீரப்பன் எனும் நமது வாலிபன் புறப்பட்டான்.



129802

முத்துவீரப்பன் அரிசிவயலுக்குச் சில மைல்கள் தூரத்திலிருந்த கீழமேடு என்னும் ஒரு கிராமத்தில் பிறந்தவன். அவனது தாய் தந்தையர் அவனை ஆறாவது வகுப்புவரை படிக்கவைத்தனர். பின்பு தமது குலத்தொழிலில் படிய வைத்தனர்.

கீழமேட்டில் வசித்திருந்தவர்களனைவரும் செங்குந்த குடிகள்; மிகத் தாழ்ந்தனவும் சிறியனவுமான வீடுகளில் வசித்தனர்; அவற்றையும் சுத்தமின்றி வைத்துக் கொண்டிருந்தனர். வீடுகளின் தெருப்பக்கத்தில் கும்பல் கும்பலாக குப்பையிருக்கும். ஒவ்வொரு வீட்டின் முன் பக்கத்திலும் மனிதற்குதவாத காற்றை யளிக்கும் முருங்கை மரம் ஒன்றாயினும் நிற்கும். அக்கிராமத்தோரனைவரும் ஒரேவிதமான முரட்டு வெள்ளைத் துணிகளையே வழக்கம் வழக்கமென்று பல தலைமுறைகளாக நெய்து வந்தனர். இதனால் அவர்களது வியாபாரம் கொஞ்சங் கொஞ்சமாக க்ஷீணதசையை அடைந்துகொண்டே வந்தது. காலத்திற்கேற்றபடியல்லவோ கோலம் பூணவேண்டும்? இந்தியாவிலுள்ள குடிகள் அதிகமாக உபயோகப்படுத்தவும் விரும்புவதுமான புதுமாதிரிகளான துணிகளை நெய்து அனுப்புவதாலல்லவோ ஆங்கிலேயரது வியாபாரம் மிகப் பலமாக வளர்ந்திருக்கிறது? அதனாலல்லவோ அவர்கள் பெரும்பான்மையும் செல்வவந்தர்களாயிருக்கின்றனர்? இந்தியர்களுள் பலருக்கு இந்த உணர்ச்சியே கிடையாது. இதனாலேயே இவர்களது கைத்தொழிலும் வியாபாரமும் தேய்பிறைச் சந்திரனாகின்றன. வழக்கம் வழக்கமென்றால் வழக்கம் சோறு போடுமோ? வேறேதாவது உதவி செய்யுமா? வழக்கமென்னும் மூடநம்பிக்கை நமது நாட்டில் இழைத்து வரும் இன்னலுக்கு அளவே கிடையாது. நிற்க, கீழமேட்டிலிருந்த செங்குந்தர்கள் மேற் கூறியபடி செய்து வந்ததால் வறிஞர்களாயிருந்தனரென்பது சொல்லாமலே அமையும்.

அவர்களது வறுமையை ஊட்டி வளர்ப்பதற்கேற்ற பல தீய ஒழுக்கங்களும் அவர்களிடம் நிலைபெற்றிருந்தன. அவற்றிற்குத் தலைமையாய் நின்றது பெரியோரால் இகழப்படுவதும் பல குடிகளை அடியோடழிப்பதுமாகிய குடிதான். அவர்களது கிராமத்திலிருந்த ஒரு கள்ளுக் கடைக்காரன் திரண்ட லாபமடைந்தானெனச் சொல்ல வேண்டியதில்லை. சுற்றுப் பக்கங்களிலெல்லாம் குடுவைகள் நிறைந்திருக்கும். அந்தக் கடையினருகில் நடக்கும் வேடிக்கைகளைச் சரியாக எடுத்துக்கூற நமது நாக்குப் பின்னடையும். மாலைப்போதிலங்கு 'முனியாண்டி, முத்தா' என்னும் சத்தமும், 'ஒரு மொந்தை போடு, இரண்டு போடு' என்னும் அதிகாரக்குரலும், 'உதைப்பேன், குத்துவேன்' என்னும் ஆரவாரமுமே நிறைந்திருப்பதன்றி, பெரியோர் காதில் நாராசமெனப்பாயும் அநாசார வார்த்தைகளும் ஒலித்துக்கொண்டிருக்கும். ஆஹா! வாய் வழியாக வயிற்றினிற் பாய்ந்தவுடனே அந்தப் புளித்த கள் செய்யும் ஆர்ப்பாட்டாந்தானென்னே! மனிதர்களை மிருகச் செயல்களுக்குள்ளாக்குகிறது; நண்பனை விரோதியாக்குகிறது; விருப்பை வெறுப்பாக்குகிறது; சாதுவையும் பயித்தியக்காரனாகவும் முரடனாகவும் ஆக்குகிறது; கொலை செய்யவும் தூண்டுகிறது. மொந்தை மொந்தையாக ஊற்றிக்கொண்டு வழியெல்லாம் தள்ளாடிக்கொண்டும் பிதற்றிக்கொண்டும் வீட்டை யடைந்தாலோ, அவர்கள் செய்யும் சாகசச் செயலுக்குப் பைசாசங்களும் அஞ்சும். வீடுகளில் பெண்கள் அழுகுரல், கேட்டோர் கசிந்து கண்ணீர் விடும்படிச் செய்யும். இன்னும் கீழமேட்டுக் கள்ளுக்கடையில் வெறுப்புடனே வேண்டாமென்று கதறுகின்ற குழந்தைகளை முரட்டுத்தனமாக உதைத்து அவைகளுக்கு மதுவை ஊற்றுகின்ற கோரக்காட்சி அதிகம். பின்னும், இதற்குத் தோழனான மிருகவதைக்குக் குறைவில்லை. காலையிலும் மாலையிலும் ஆடுகள் 'அம்மா' வென அழுவதையும், கோழிகள் கோரமாகக் கூவுவதையும், பன்றிகள் பரிதாபமாகப் பதறுவதையும் எங்கும் காணலாம். சில மரங்களில் ஆடுகளின் உடல்கள் தோலின்றி, இரத்தம் ஒழுகிய வண்ணம் தொங்கிக் கொண்டிருக்கும். அந்தோ! இக்கோர காட்சிகளை எவரே கண்டஞ்சாதிருப்பார்? ஆயினும் இச்சாகசச் செயல்களின் தீமை அக்கிராமத்துக் குடிகளுக்குக் கனவிலும் தோற்றுவதில்லை.

இவையேயன்றி, கக்ஷிபேதங்களும் கீழ்நோக்கமான செய்கைகளும் அங்கு வேரூன்றி இருந்தன. கக்ஷிபேதமென்னும் பூதம் தங்களது நலத்தையும் தங்கள் கிராம நலத்தையும் அடியோடு விழுங்கிவிடுமென்றுணராத அவர்கள் ஒவ்வொரு தெருவுக்கு இரண்டு கக்ஷிகளாக இருந்தனர். அந்தோ! அப்பாழும் பூதம் பல ஊர்களிலும் இழைக்கும் இன்னல்களை என்னென்றெடுத்துரைப்பது. அதனால் பல சமூகங்களும் பல தேசங்களுமே இருந்தவிடம் தெரியாது அழிந்துவிடுமே. அதனை வேரோடறுக்கும் புண்ணியவான்கள் அறிஞர்களது நன்றியையும் அன்பையும் பெறுவதன்றிக் கடவுளினது கருணைக்குமே பாத்திரராவார்கள். அதனை ஊட்டி வளர்க்கும் அறிவிலிகளோ, தாங்களும் அதற்கடிமையாகி, அழிந்து, பலரது வசைமொழிக் காளாவார்களென்பது திண்ணம். கீழமேட்டுச் செங்குந்தர்களுக்குக் கக்ஷிபேதத்தால் விளைந்த தீமை பெருமிதமானதே. சிறியதான அக்கிராமத்

தில் பாவு தோய்வதற்கு எவ்வளவு இடங்களிருக்கும்? மிகச் சிலவே இருக்குமன்றோ? இதற்காக ஒவ்வொரு தெருவாருக்கும் சண்டைகள் நடக்கும். ஒரு தெருவில் வசிப்போர் மற்ற தெருவில் பாவு தோய்த்தலோ தெசவுக்குவேண்டிய வேறெந்த தொழிலோ செய்யக்கூடாது. இப்படியிருந்தால் தன் தெருவில் வசதியான இடமில்லாதவன் கதியென்னவது? இதனால் அவர்களுக்குள் பெருஞ்சண்டைகள் விளையும். பின்னும் கோவில் உற்சவம் முதலியவற்றிற்கு அநாவசியமாகப் போட்டிபோட்டுக்கொண்டு அபரிமிதமாகச் செலவழிக்கும் தொகை போதாதென்று, 'என் தெருவுக்குச் சாமி வரவில்லை; என் தெருவுக்கு வினியோகம் கொஞ்சமாகக் கொடுத்தார்கள்' என வீண்சண்டை பிடித்து, குடி வெறியினால் சண்டை போட்டுக்கொண்டு நியாயஸ்தலத்திற்குச் சென்று பல்லாயிரக்கணக்கான ரூபாய்களைக் கொட்டுவதும் அங்கு சகஜமே. இன்னும் அங்கு வசிக்கும் பெரிய மனிதரெனச் சொல்லப்பட்ட சபாலப் புலிகளான சில போலிப் பெரியோர்களோ, தமக்கு ஓராயிரம் ரூபாய்களிருப்பின் தம்மினும் பணக்காரரில்லை யென இருமாப்புற்று, தாம் தாழ்ந்தவரென மதிப்பிடு மனைவரும் தமக்குக் குற்றேவல் புரிவதுமன்றி, தமது வார்த்தையையே தெய்வவாக்காகப் பாவித்துத் தமக் கடங்கி நடக்க வேண்டுமெனவென்னும் அறிவிலிகள்; கல்வி ஞானத்தைக் கனவிலும் அடையாதவர்கள். பின்னும் கிராமப் பெருதனக்காரரெனப் பட்டம் தாங்கிய பெரியோர்களோ, கிராம நலத்தை அசட்டை செய்து 'நமது கச்சைப்பை நிரம்பாதா, நமது காலில் வந்து பலர் விழமாட்டார்களா' என எண்ணமிட்டுக்கொண்டு, கக்ஷிபேதங்களும் சண்டை சச்சரவுகளுமாகிய நெருப்பை அதிகப்படுத்தும் விசிறிகளா யிருந்தனர்.

முத்துவீரப்பன் இயற்கையாகவே நற்குணம் படைத்தவனாயிருந்ததோடு சிறிது வாசித்தும் இருந்ததால், அவனுக்கு இத்தகைய செயல்கள் வெறுப்பை யுண்டாக்கின. வயது ஏற ஏற அவனது எண்ணங்களும் வளர ஆரம்பித்தன. தன் தந்தை தாயார்க்கும் கிராமத்தோர்க்கும் அத்தகைய ஈனமான வாழ்க்கையையும் அநாசாரமான வழக்கங்களையும் விடும்படி அவன் போதித்ததெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காயிற்று. பின்னும் அக்கிராமத்தோரது பொறாமைக்குணம் முதலியவற்றையும் அவன் வெறுத்தான். இதனால் மனமுடைந்து வெறுப்பு அதிகமுற்ற வீரப்பன் தனது 16-வது வயதில் ஒருநாள் தனக்கிருந்த அபீஷ்டம் முடிவுறும்படி எப்படியோ பினாங்குக்குப் புறப்பட்டுப் போய்விட்டான்.

தந்தையும் தாயும் தமது மகனைக் காணாது சில நாட்கள் தேடிப் பின் ஒருவாறு தேறியிருந்தனர். நமது வீரப்பன் புதிய பட்டணமாகிய பினாங்குக்குச் சென்று முதலில் சிறிது கஷ்டப்பட்டானாயினும் சில நாட்களில் சௌகரியமாக நிலைத்துவிட்டான். அங்கு அவன் பயின்றிருந்த சிறிது கல்வி அவனுக்குப் பெரிதும் பயன்பட்டது. அவனது நற்குணங்களால் அவனை அங்கு பலரும் விரும்பினர். தனது ஊக்கத்தாலும் திறமையாலும் தான் சம்பாதித்ததில் சிறிது சேர்த்தும் வைத்தான். இவ்வாறு சுமார் 8 வருடங்கள் கழிந்தன. அதற்குள் 10,000 ரூபாய்கள் சேர்த்துவிட்டான். அப்பொழுது தன் கிராமத்துக்குச் சென்று தன் தாய் தந்தையரையும் சுற்றத்தாரையும் காணவேணுமென்னும் அவா அவனுக்குண்டாயது சகஜமே யன்றோ? ஆகையால் அவன் தனது ரூபாய்களை எடுத்துக்கொண்டு முதலில் கூறியவண்ணம் புறப்பட்டான். அவன் கொண்டுபோகும் ரூபாய்களைக் கண்டு அவன் தாய் தந்தையர் எவ்வளவு மகிழ்வரென அவன் எண்ணும் போதெல்லாம் அவனது சந்தோஷக்கின் அலைபொங்கிற்று. இந்த எண்ணமே அவனது முகத்தில் சந்தோஷத்தைப் பதித்தது. கப்பலுக்குப் பிரயாணச் சீட்டு முன்னமே வாங்கி வைத்திருந்ததால் அவன் கப்பலுக்கு நேரே சென்று தட்டில் ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டான்.

சிறிது நேரத்திற்செல்லாம் கப்பலும் மெதுவாக அசைந்தது. முத்துவீரப்பன் போது போக்கிற்காக ஒரு நவீனத்தைப் படித்துக்கொண்டிருந்தான். இப்படி இருக்கையில் சுமார் 35 வயதுள்ள ஒருவர் அவனிடம் வந்தார். அவர் அவனை முன்பே அறிந்திருந்தாற்போல அவனிடம் பேச ஆரம்பித்தார். முத்துவீரப்பன் தன் கையிலிருந்த புத்தகத்தைப் பக்கத்தில் வைத்துவிட்டு அவரிடமிருந்து ஒரு அகலமான புத்தகத்தை வாங்கினான். அது ஒரு மாதாந்தர பத்திரிகைபோலிருந்தது. அதன்மேல் 'செங்குந்த' என்னும் பதத்தை நோக்கினான். அதற்குள் தன்னுடே பேசியவர் ஏதோ அவசரமான வேலையாக அந்தப் புத்தகத்தை விரைவில் அவனிடமிருந்து வாங்கிக்கொண்டு பரபரப்பாகச் சென்றுவிட்டார். அந்தப் புத்தகத்தைப் பார்த்தது முதல் பலவிதமான எண்ணங்கள் முத்துவீரப்பனது மனதில் ஒன்றன் பின்னொன்றாக எழ ஆரம்பித்தன. அதிலும், 'செங்குந்த' என்னும் பதமே அவன் மனத்தில் பசுமரத்தாணியெனப் பதிவுற்றது. "அது ஒரு பத்திரிகையா? அதன்மேல் ஏன் 'செங்குந்த .....' என்று அச்சடித்திருந்தது? அது நமது குலத்தைப்பற்றிக் கூறும் நூலா?" என்னும் கேள்விகளும் இவைபோன்ற பிற



வும் அவன் மனத்திலுதித்தன. அவை யொன்றிற்கும் அவனுக்கு விடை தெரியவில்லை. மறுபடி அவனது கைக்கு அப்புத்தகம் எட்டினால் அதை அவன் முழுதும் படித்துணராமல் விடான்.

சில நாட்களில் கப்பலும் அது அடையவேண்டிய துறைமுகத்தை யடைந்தது. முத்துவீரப்பன் சிலரைத் தன்னூருக்கு வழி கேட்டான். எவரும் சரியான பதிலளிக்கவில்லை. சுற்றிப் பார்த்துப் பொழுதாகிவிட்டதால் அருகிலிருந்த ஒரு கிராமத்தில் அன்றிரவைக் கழிக்கத் தங்கினான். அந்தக் கிராமத்தின் வீதியெல்லாம் வெகு ஒழுங்காகவும் சுத்தமாகவும் இருந்ததுமன்றி அங்கிருந்த வீடுகளனைத்தும் உயரமாகவும், வசதி நிறைந்தனவாகவும், ஒழுங்காகவும் கட்டப்பட்டிருந்தன. அதில் வசித்தவர்களும் நாகரீகமாக உடைதரித்துச் சுசிகரமாயிருந்தனர். அங்கு எல்லா வீடுகளிலும் தறிகளிருக்கக் கண்டு அதுவும் செங்குந்தர் வாழும் கிராமமென நமது வீரப்பன் உணர்ந்தான். தறிகளில் பார்ப்போர் கண்களைப் பறிப்பனபோன்ற பலவிதமான பட்டுத் துணிகள் செய்யப்பட்டிருந்தன. அங்கிருந்த ஒரு போஜனசாலையிலேயே வீரப்பன் தங்கினான். அவன் பினாங்கில் விட்டுவந்தது மிலிடரி ஓட்டல் எனக்கண்டோம். அதனால் அவன் மாமிசம் புசிப்பவனெனப் புலப்படும். அவன் இப்பொழுது தங்கியுள்ள கிராமத்தில் அவனுக்கு அந்தப் போஜனம் கிட்டவில்லை. அவன் அறியாமையாலேயே மாமிச மருந்தும் வழக்கத்தை விடாதிருந்தான். வீரப்பன் தான் தங்கிய போஜனசாலையில் நேர்மையாகச் சமைக்கப்பட்டிருந்த மரக்கறி பதார்த்தங்களோடு இராப் போஜனமருந்தினான். அங்கிருந்த அக்கிராமவாசி ஒருவரிடமிருந்து அக்கிராமத்தின் பெயர் செங்குந்தபுரம் என்றும் அதன் வாசிகளனைவரும் மரக்கறி புசிப்போரே என்றும் உணர்ந்தான். கப்பலிலிருந்து வந்து தனது கிராமத்தைத் தேடித்திரிந்த அலைப்பினால் அவன் அன்றிரவு சீக்கிரமே துயில்கொண்டான்.

காலையிலெழுந்து கடன்களையும் சிற்றுண்டியையும் முடித்துக்கொண்டு தன் கிராமத்திற்கு வழி விசாரிக்கவும் அக்கிராமத்தைச் சுற்றிப் பார்க்கவும் புறப்பட்டான். ஒரு தெருவழியாகச் செல்லுகையில் ஒரு வீட்டில் பல வாலிபர்கள் கூடி வெகு உல்லாசமாக வார்த்தையாடிக் கொண்டிருப்பதைக் கண்டான். அவர்களிடமிருந்து ஏதாவது சமாசாரம் தெரியுமென வெண்ணி, அவன் அங்கு சென்றான். அவர்கள் அவனை வினயமாக உபசரித்ததுமன்றி அவர்களுள் சிலர் அவனை எப்பொழுதோ எங்கோ பார்த்திருப்பதுபோல யோசித்து ஒருவரை யொருவர் பார்த்தனர். சிறிது நேரத்தில் ஒருவன் 'நீ முத்துவீரப்பனல்லவா' என்றான், வீரப்பன் 'ஆம்' என்னவும் அனைவரும் சந்தோஷத்துடன் அவனை வீட்டினுள் அழைத்துச் சென்றனர். வீரப்பன் தங்கியது அவனது கிராமமே. அதனை யவன் உணர்ந்தானில்லை. ஈனமான வாழ்க்கைக் கிருப்பிடமாயிருந்த அந்தக் கிராமம் மேற்கூறிய வண்ணம் சீர்திருத்தமடைந்து மெய்யான நாகரீகத்துக்கோர் எடுத்துக்காட்டாக விளங்கியதோடு பெயரும் வேறாகவிருந்ததால் அதனை அவன் உணர்வது அசாத்தியமே. நாகரீகமென்றால் இக்காலத்தில் காபி டீ முதலிய பானம் செய்வதும், பீடி சிகரெட்டு பிடிப்பதும், சென்ற விடத்தில் ஆடம்பரம் செய்வதும், டம்பம் பேசுவது மென்றெண்ணி அத்தகைய போலி நாகரீகத்துக் கடிமையாயுள்ளவர்கள் அந்தக் கிராமத்தைக் கண்டிருப்பின் அது நாகரீக முற்றதெனக் கூறார்.

வீட்டுக்குள் சென்று உக்கிராணத்தில் முத்துவீரப்பன் அடுக்கடுக்காக விருந்த சில புத்தகங்களைக் கண்டான். அவைகளின்மீது 'செங்குந்தமித்திரன்' எனப் பெரிய எழுத்துக்களால் அச்சடிக்கப்பட்டிருந்தது. அந்தத் தொடரே அவனது பார்வையை இழுத்தது; அவனைத் திகைக்கச்செய்தது. பின்பவன் அவைகளிலொன்றை யெடுத்து மனமார வாசித்தான். சிறிது நேரத்திற்குள் அவனது நண்பர்கள் (அங்கிருந்த வாலிபர்கள்) அவனுக்கு எல்லாவற்றையும் தெளிவுபடுத்தினர். அவர்கள் அவனுக்கு சென்னையில் 'தென்னிந்திய செங்குந்த மகாஜனசங்க' மொன்றேற் பட்டுள்ளதென்றும் அது அவன் கையிலிருந்த பத்திரிகையைப் பிரசுரிக்கிறதென்று கூறிப் பின்னும் சிலவற்றைக் கூறுவதற்குள் அவன் ஆச்சரியமும் சந்தோஷமும் கொண்டவனாகிப் பின்னும் அவனுக்குப் பிறவற்றையும் தெளிவுறக் கூறுமாறு அவர்களை வேண்டினான். அதனால் அவர்களுள்ளொருவன் பின்வருமாறு கூறினான்.

"முத்து வீரப்பா, சுமார் 7 வருடங்களுக்கு முன் நமது குலத்தவர் முன்னேற்றத்தையே முக்கிய நோக்காகக் கொண்டுள்ள மேற்கூறிய சங்கத்திலிருந்து ஒரு பத்திரிகை நாமமுரில் ஒருவருக்கு வந்தது. சில நாட்களில் சென்னையிலிருந்து அச்சங்கப் பிரசாரகர்களிருவர் வந்தனர். அவர்கள் இங்கு சனைக்கற் சீர்திருத்தங்கள் செய்தார்கள். அவர்கள் கூட்டிய இரண்டு கூட்டங்களில் நிகழ்த்தப்பட்ட அவர்களது சொற்பொழிவுகள் நம் கிராமவாசிகள் பலரது மனதில் வேரூன்றின. அப்பொழுதே இங்கு ஒரு வாலிப சங்கத்தையும் நிறுவினர். அதன்பின் நம் கிராமத்தாரில் ஏறக்குறைய அனைவருமே நமது குலவிளக்கு பே

ன்ற இப்பத்திரிகையை வாங்கத் தொடங்கினர். அதனைப் படித்ததாலேயே பெருஞ் சீர்திருத்தமுண்டாயது. இந்த வீட்டிலிருப்பதுதான் வாலிபசங்கம். நாங்களெல்லாம் அதற்கு அங்கத்தினர்கள். நாங்களும் மிகவும் உற்சாகத்தோடு உழைக்க ஆரம்பித்தோம். முதலில் வாரமொருமுறை பல கூட்டங்கள் கூட்டினோம். முரட்டுத் துணிகளை யொழிக்க பலவிதமான பட்டுத் துணிகளும் மற்ற நாகரீகமானவைகளும் நம் கிராமத்தார் நெய்யும்படி செய்தோம். பிறகு குடி முதலிய தீய ஒழுக்கங்களை யொழிக்க முயற்சி யெடுத்துக்கொண்டோம். இப்போது கள்ளுக்கடையே இங்கில்லை. மாமிச போஜனத்தையும் குடியையும் அடியே நடொழித்துவிட்டோம். வீடுகளை யெல்லாம் ஒழுங்காகக் கட்டச்செய்தோம் ஒவ்வொரு குடும்பத்தாரிடமும் மாதம் 4 அணா வீதம் வசூல்செய்து வீதிகளை ஒழுங்காக வைத்திருப்பதற்கும் கிராமத்தின் மற்ற நலனுக்கும் செலவிடுகிறோம். இப்பொழுது கிராமத்தின் எல்லா விஷயங்களையும் நாங்களே கவனிக்கிறோம். கஷ்டப்பேதங்களெல்லாம் வேரொடு ஒழிந்தன. கடவுள் அருளால் சீர்திருத்தங்களை யெல்லாம் செய்ததுமன்றி தலைச் சங்கத்துக்கெழுதி அதன் இஷ்டப்பிரகாரம் நம் கிராமத்திற்கும் 'செங்குந்தபுரம்' எனப் பெயரிட்டோம் இப்போது இங்கே பெண் பாடசாலையுமிருக்கிறது; பல பெண்கள் வாசிக்கிறார்கள். இத்தனைக்கும் காரணமான தலைச் சங்கத்துக்கு நமது கிராமவாசிகள் கடமைப்பட்டிருக்கும் நன்றியை நீயே அளவிட்டுக்கொள். வழக்கப்படி கூட்டம் கூடுவதற்கே நாங்கள் இன்றிங்கு கூழுமியிருக்கிறோம்."

இவ்வாறு வாலிபசங்கத்தின் காரியதரிசியாகிய கணேசன் நன்றி ததும்பும் குரலோடு அனைத்தையும் விஸ்தாரமாகக் கூறக்கேட்ட முத்துவீரப்பனது மனம் ஆனந்தக் கடலில் குளித்தது. பின்பு அவன் தனது சமாசாரங்களைக் கூற, அனைவரும் ஒருகூட்டங் கூட்டினர். அதில் முத்துவீரப்பனும் பேசித் தலைச் சங்கத்துக்குத் தனது நன்றியைக் கூறி அமர்ந்தான். கூட்டத்தின் முடிவில் அனைவரும் 'தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்துக்கு ஜே! செங்குந்த மித்திரனுக்கு ஜே!' என்னும் ஆரவாரத்துடன் முத்துவீரப்பனை அழைத்துச் சென்று அவனது தாய் தந்தையரிடம் விடுத்தனர். அவர்களும் காணாது போன தமதருமை மைந்தன் மீண்டும் வந்ததற்காகப் பெருமகிழ்ச்சி எய்தினர்.

பின்னர், முத்துவீரப்பன் தான் கொண்டுவந்த ரூபாயைக்கொண்டு பலமான ஜவுளி வியாபாரத்தை ஆரம்பித்தான். நாணயமாக வியாபாரத்தை நடத்தியதால் திரண்ட செல்வம் சம்பாதித்தான். சில நாட்களில் தனக்குத் தக்க நற்குணவதி ஒருத்தியை மணந்து தன் தாய் தந்தையருடன் வாழ்ந்து வந்தான். மாமிசபோஜனத்தை யொழித்தான். தனதூர் வாலிப சங்கத்தின் உபதலைவனுகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். தலைச் சங்கம் தனது கிராமத்திற்குச் செய்த உபகாரத்தை மறவாது அவன் ஏழை மாணவர்க்குச் சம்பளம் அளிப்பதற்காக முதலில் 100 ரூபாய்கள் நன்கொடை அளித்ததும் தன் கடையில் உண்டியல் ஏற்படுத்தியதுமன்றித் தானும் தன் லாபத்தில் ரூபா ஒன்றுக்குக் காலணு (0-0-3) வீதம் சேர்த்து மகமை ஏற்பாடு செய்து மாதா மாதம் 50 ரூபாய்களுக்குக் குறையாது தலைச் சங்கத்துக்கனுப்பிவந்தான். அத்தகைய வாலிபன் செங்குந்த மித்திரனுக்குச் சந்தாதாரனுனெனக் கூறவேண்டியதில்லை. இதுவுமன்றித் தன் கிராமத்திற்காகப் பெரும்பாடு பட்டுழைத்து வந்தான். அதனுல் அவனது பேரும்புகழும் எங்கும் பரவின. பலர் அவனை மதித்துப் புகழ்ந்து வாழ்த்தினர்.

ஜே. தங்கவேல்,
இராஜதானிக் கல்லூரி, சென்னை.

# செங்குந்தர் கிளர்ச்சி

## சேலம் ஜில்லாவில் கிளர்ச்சி

### மோகனூர் உண்மைச் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்.

29-8-28-ல் இவ்வூர் ஸ்ரீ சாந்தமலைச் சுப்பிரமணியர் ஆலயத்தில் காலை 9 மணிக்கு நடந்த திரு. செல்லாண்டி முதலியார் குமாரன் கல்யாணத்திற்கு விஜயஞ் செய்திருந்த திருவாளர்கள் உன்னியூர் மிராஸ்தார் ஆநந்தமுதலியார், ஜோ. கா. முருக முதலியார், கு. பெ. முத்துசாமி முதலியார், ஆகிய இம் மூவர் முயற்சியால் பல ஊர்களிலிருந்து வந்திருந்த செங்குந்தப்பிரமுகர்கள் முன்னிலையில் உன்னியூர் திரு. கு. பெ. கந்தசாமி முதலியார் நமது தலைச் சங்கத்தாரால் 28-5-28-ல் இவ்வூரில் ஸ்தாபிக்கப் பெற்ற கிளைச் சங்கம், சில அபிப்பிராய பேதத்தால்



நடைபெறுதிருந்தலை முன்னிட்டு ஷை கல்யாணம் நடைந்தேறியவுடன் 'செங்குந்த குல மாட்சி' என்பதைப் பற்றி ஓர் அரிய பிரசங்கம் செய்தார். இதனுல் எல்லோருக்கும் ஊக்கமுண்டாக, அன்றுமாலை 3 மணிக்குச் சங்கத்தை நடத்தவேண்டுமென்று தீர்மானிக்கப் பெற்றது.

அவ்வாறே மாலை 3-மணிக்கு ஸ்ரீ காமாக்ஷியம்மன் ஆலயத்தில் தலைவர் திரு. R. சபாபதி முதலியார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ்ச் சங்கக் கூட்டம் கூடிற்று. திரு வெ. முருக முதலியார் அவர்கள் கடவுள் வாழ்த்து கூறிய பிறகு உன்னியூர் திரு கு. பெ. கந்தசாமி முதலியார் அவர்கள் 'சங்கமும் அதன் நன்மையும்' என்பதுபற்றி அரிய சொற்பொழிவு நிகழ்த்தினுர். பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

1. நமது முன்னேற்றங் கருதி அரும்பாடுபட்டு ஜாதியத்தொண்டாற்றி வரும் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தலைவர் அவர்களுக்கும் அதன் பிரசாரகர்களுக்கும் இக் கூட்டம் நன்றி பாராட்டுகிறது.

(யூனியன் போர்டு பிரசிடெண்டு திரு. P. P. முத்துசாமி முதலியார் பிரேரேபித்தார்)

2. இச்சங்கத்தின் அபிவிருத்தியைக் கருதி அரிய சேவை புரிந்து வருகிற திரு. கு. பெ. கந்தசாமி முதலியார் அவர்களுக்கும் உன்னியூர் செங்குந்தர்களுக்கும் இக்கூட்டம் நன்றி பாராட்டுகிறது.

(காரியதரிசி திரு. கு. ல. சடையப்ப முதலியார் பிரேரேபித்தார்)

3. கீழ்க்கண்ட கனவான்களால் கீழ்க்கண்டவாறு ஒப்புக் கொள்ளப்பட்ட தொகையை வசூல்செய்துத் தலைச்சங்கத்திற்குக் கட்டணமாகச் செலுத்தும்படி காரியதரிசிக்கு உத்தரவளிக்கப்பெற்றது.

| | | | |
|---|---|---|---|
| சங்கத்தலைவர் திரு R. சபாபதி முதலியார் | 5 | 0 | 0 |
| யூனியன்போர்டு பிரசிடெண்டு திரு. முத்துசாமி முதலியார் | 2 | 8 | 0 |
| திரு. சி. மாணிக்க முதலியார் | 2 | 8 | 0 |
| ,, மு. குழந்தைசாமி முதலியார் | 1 | 8 | 0 |
| நாட்டாண்மை திரு ச. கு. பழனியாண்டி முதலியார் | 2 | 8 | 0 |
| திரு. வெ. க. பெரமாண்டை முதலியார் | 1 | 8 | 0 |
| சங்கம் பொதுவில் | 0 | 8 | 0 |
| மொத்தத் தொகை | 16 | 0 | 0 |

தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரம் கூறப்பெற்றுக் கூட்டம் இனிது கலைவுற்றது.

கு. ல. சடையப்ப முதலியார், காரியதரிசி

## உன்னியூர் செங்குந்தர் சங்கம்.

நாளது விபவஞூ ஆடிமீ 31உ (15—8—28) மாலை 4 மணிக்கு உன்னியூர் செங்குந்தர் சங்ககூட்டம், திரு. R. மாணிக்க முதலியாரவர்களது கோடைகாலக் கொட்டகையில் கூடியது. இக்கூட்டத்திற்குச் சங்க மெம்பர்களும் இதர செங்குந்தர்களுமாகப் பெருந்திரளாகக் குழுமியிருந்தனர். திரு. R. மாணிக்க முதலியார் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். கடவுள் துதி பாடியபின் முன் கூட்ட நடவடிக்கைகள் காரியதரிசியால் வாசித்துக் காட்டப் பெற்றன. அவ்வமயம் 'அறிவின் வளர்ச்சி' என்னும் பொருள் பற்றி உபதலைவர் R. ரத்தினசாமி முதலியாராலும், 'சங்கமும் வாலிபரின் கடமையும்' என்னும் விஷயமாய் உபகாரியதரிசி P. K. வீரப்ப முதலியாராலும், 'நமது முன்னேற்றம்' என்னும் பொருள்பற்றி காரியதரிசி P. மாரியப்ப முதலியாராலும், 'புலால் மறுத்தல்' என்னும் விஷயமாய் பாண்டமங்கலம் S. சுப்பிரமணிய முதலியாராலும் 'பத்திரிகையின் அவசியம்' என்பதுபற்றி வர்ணம் R. ஆறுமுக முதலியாராலும் உபந்யாசிக்கப் பெற்றது. பின்னர் தலைவரின் முடிவுரைக்குப் பின் சங்க மெம்பர்களிடமிருந்து சந்தா வசூலித்ததும், காரியதரிசியார் வந்தனோபசாரங்கூற, இரவு 9 மணிக்குக் கூட்டம் இனிது கலைவுற்றது.

பீ. மாரியப்ப முதலியார்,
காரியதரிசி, செங்குந்தர் சங்கம், உன்னியூர்.

## திருநெல்வேலி ஜில்லாவில் கிளர்ச்சி.

### வீரவநல்லூர் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்

9-8-28-ல் இச்சங்கத்தின் 12-வது ஆண்டு 2-வது சாதாரணக் கூட்டம் ஸ்ரீமான் ஆ. மு. ஆறுமுக முதலியாரவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. அவ்வமயம் 'துதிபாடிச் சென்ற கூட்ட ரிப்போர்ட் வாசித்துத் தலைவர் முன்னுரைக்குப் பின் ம. ஆறுமுகமென்ற மாணவர் 'தன்னுயிர் போல் மன்னுயிரைக் காத்தல்' என்பதுபற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினுர். பின்னர் அம்பா சமுத்திரம் ஸ்ரீமான் அகஸ்திய முதலியாரவர்கள் உபந்யாசகர் பேசியதைத் தழுவி உதாரணங்களைக் காட்டி விஸ்தாரமாகப் பேசி முடித்தார்கள். தலைவர் பின்னுரை முடிக்க ஸ்ரீமான் ஆதிநாராயண பிள்ளையவர்களால் வந்தனோபசாரம் சொல்லி வாழ்த்துபாடி சபை கலைந்தது.

10-8-28 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு ஷை முதலியார் வாலிபர் சங்கம் 15-வது கூட்டம் ஆ. மு தலையா தலைமையின்கீழ்க் கூடிற்று. துதிபாடிச்

சென்ற கூட்ட ரிப்போர்ட்டை வாசித்து க. ராமசாமி யென்பவர் 'தொண்டர் பெருமை' யென்பதுபற்றிப் பேசினர். கா. சுப்பையா என்பவர் ஷை விஷயத்தைத் தழுவிப் பேசி முடித்தார். தலைவர் பின்னுரை முடிந்து வாழ்த்துப் பாடிச் சபை கலையப் பெற்றது.

இச்சங்கத்தின் இவ்வருஷத்திய 3-வது சாதாரணக்கூட்டம் 5-9-28 புதன்கிழமை மாலை 6-மணிக்கு ஸ்ரீமான் ஈ. ப. ஆறுமுக முதலியாரவர்கள் தலைமையின் கீழ்க்கூடிற்று. கடவுள் துதிபாடி, சென்ற கூட்ட ரிப்போர்ட் வாசித்து, தலைவர் முன்னுரை முடிந்து, ஸ்ரீமான் கா. சுப்பையா முதலியார் ஒற்றுமை யென்பதுபற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார். பின்னர் அம்பாசமுத்திரம் ஸ்ரீமான் அகஸ்திய முதலியாரவர்கள் நிகழ்ந்த சொற்பொழிவை ஒட்டிப் பேசிப்பின் 32 தருமங்களிலும் கல்வி தருமமே சிறந்ததென்று பற்பல உதாரணங்களால் விளக்கி 2-மணி நேரம் நீண்ட பிரசங்கம் செய்தார்கள். பின் தலைவர் பின்னுரையில் ஒற்றுமையே உலக வாழ்க்கைக்கு உயர்ந்ததென்றும் இவ்வொன்று தாமே சாலமேம்பட்டதென்றும் 32 தருமங்களில் மற்றைய தருமங்களிலும் அழிவுறுந்தன்மைய கல்வித் தர்மமே யென்றும் கல்வித் தருமங்களை நிலைநாட்டிய முற்கால சில அரசர்களையும் பிரபுக்களையும் ஒப்பிட்டுக் காட்டிப் பேசிமுடித்தார்கள். பின் வந்தனோபசாரத்துடன் வாழ்த்துப்பாடிச் சபை கலையப்பெற்றது.

ஆ. மு. ஆறுமுக முதலியார்,
உபதலைவர்

## செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்
### அம்பாசமுத்திரம்.

1103-ம் ௵ விபவ ௵ ஆனி ௴ 30௳ (13-7-28) வெள்ளிக்கிழமை இரவு 7-மணிக்கு அம்பாசமுத்திரம் செங்குந்தர் அபிவிருத்தி சங்க முதலாவது கூட்டம் ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் சன்னதியில் மணிமண்டபத்தின்கண் கூடிற்று. இக்கூட்டத்திற்குச் சங்க மெம்பர்களும் ஆண்ய செங்குந்தர்களுமாகச் சுமார் 400 ஜனங்கள்வரை குழுமி இருந்தனர். அவ்வமயம் அவ்வூர் செங்குந்த தேவார கோஷ்டி மாணவர்கள் இன்னிசைக் கருவிகளுடன் தேவாரம் ஓதினார்கள். சங்கத் தலைவர் திரு. பா. வேலாயுத முதலியாரவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்கள். பின்னர் முன் கூட்ட நடவடிக்கைகளும் சந்தா வசூல் வரவு செலவு கணக்கும் காரியதரிசியால் வாசித்துக் காட்டப்பட்டன. கோஷ்டி மாணவன் வேலாயுதம் கை, "கேளரும் கல்லெடுக்களும்" என்ற மித்திரனில் 'உள்ள வியாசத்தை' வாசித்துக் காட்டினான். சங்கக்காரியதரிசியும் பொருள் காப்பாளருமான திரு. ஆ. ம. ஆறுமுக முதலியார் தொழில் என்ற விஷயத்தைப்பற்றி நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்தினர். பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

(1) நம் சமுதாயத்தாருக்குத் தனிமையாய் கூட்டு ஜவுளி வியாபார கம்பெனி வைத்து நடக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டியது.

(2) நம் கலியாண முதலிய விசேட செலவுகளைக் கூடுமானவரையில் சுருக்கமாகவே செலவு செய்யும்படி ஏற்பாடு செய்யவேண்டியது.

(3) ஷை சங்கத்திற்குச் சந்தாத் தொகை வசூல் செய்வதோடு வியாபாரிகளிடம் மகமையும் வசூல் செய்ய ஏற்பாடு செய்யவேண்டியது.

இறுதியில் தலைவர் பின்னுரை நிகழ்த்தியதும், சங்கக் காரியதரிசி திரு. கு. சிவராமலிங்க முதலியாரவர்கள் அவைத்தலைவருக்கும் மற்றும் விஜயம் செய்திருந்த பெரியோர்களுக்கும் வந்தனோபசாரம் கூறிய பின் கோஷ்டி மாணவர்களால் கடவுள் வாழ்த்துப் பாடிய கூட்டம் இனிது நிறைவேறியது.

ரா. ம. ராமலிங்க முதலியார்,
காரியதரிசி

---

## தென்னார்க்காடு ஜில்லாவில் கிளர்ச்சி.
### ரிஷிவந்தியம் செங்குந்தர் கூட்டம்

1928 ௵ ஜூலை ௴ 10௳ செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு ரிஷிவந்தியம் செங்குந்த மரபினர் ஒரு பொதுக்கூட்டம் கூடினர்.

சென்னையில் நம்மரபினரின் சார்பாக நடந்து வரும் தென்னிந்திய மகாஜனசங்கத்தை யனுசரித்துக் கீழ்க்கண்ட தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டு எல்லோராலும் ஆமோதிக்கப் பட்டன.

இந்தக் கிராமத்தில் நம்மவர் முன்னேற்றமடைய ஒரு இளைஞர்சங்கத்தை ஸ்தாபித்து அதை மஹாசன சங்கத்தோடு சேர்க்க அடுத்த கூட்டத்தில் தீர்மானித்து முடிவு செய்வதென்றும், குறைந்தது மாதம் ஒரு முறையாவது கூட்டம் நடத்தப்படவேண்டும் என்றும், அவ்வாறு நடக்கும் முடிவுகளைப்பற்றி அவ்வப்போது மஹாசங்கத்திற்குச் செய்தி அனுப்பி வருதல் வேண்டுமெனவும், அவ்வாறு நடக்கும் கூட்டமானது பிரதி தமிழ் மாதமும் பௌர்ணமி யன்று நடைபெறவேண்டும் எனவும், தென்னிந்திய மஹாஜன சங்க சட்டதிட்டங்களைப் பின்பற்றிக் கூடிய



வரையில் நடத்தி வருதல் மேல் என்றும், அடுத்த கூட்டத்தன்று வரும் ஒவ்வொரு அங்கத்தினரும் 0—1—0 ஒரு அணா வீதம் பிரதிமாதமும் செலுத்தி வரவேண்டும் எனவும் தீர்மானித்து

### தேர்ந்தெடுத்த உத்தியோகஸ்தர்கள்.

| | |
|---|---|
| B. சுப்ரமண்ய முதலியார், ஹெட்மாஸ்டர் போர்டு இந்து ஸ்கூல் ரிஷிவந்தியம். | தலைவர் |
| J. சண்முக முதலியார்<br>A. குருசாமி முதலியார் | காரியதரிசிகள் |
| ஆ. மாணிக்க முதலியார்<br>சொ. பா. அப்பாவு முதலியார் காரியம் | பொக்கிஷதார். |

### நிர்வாக அங்கத்தினர்கள்.

மா. அங்கமுத்து முதலியார்.
A. சுப்பராய முதலியார்
மு. அண்ணாமலை முதலியார்
த. லக்ஷ்மண முதலியார்
வை. நாராயண முதலியார்
வி. பா. சடைய முதலியார்.

(2வது கூட்டம்)

1928 ௵ ஆகஸ்டு ௴ 1௳ புதவாரம் இரவு 7 மணிக்கு ரிஷிவந்தியம் செங்குந்தர்களின் கூட்டம் 2-வது முறையாக இன்று கூட்டப்பட்டது.

முந்திய கூட்டத்தின் அம்சங்களைத் தழுவி இன்று முதல் இச்சங்கத்திற்கு ரிஷிவந்தியம் செங்குந்தர்களின் இளைஞர்சங்கமென்று பெயர் புனைந்து சென்னை செங்குந்தர்களின் தென்னிந்திய மஹாஜன சங்கத்தோடு சேர்க்கப்பட்டது.

பிரதிவருஷ முடிவிலும் இச்சங்கத்திலிருந்து, மஹா சங்கத்திற்கு Rs. 5—0—0 (Rs. Five) செலுத்திவரத் தீர்மானிக்க ப்பட்டது. நம் மரபினர் முன்னேற்ற மடையும் சில அரிய விஷயங்களைத் தலைவர் பேசி முடிவு செய்தபின், இரவு 10 மணிக்குக் கூட்டம் கலைந்தது.

இங்ஙனம்,
B. சுப்ரமண்ய முதலியார்,
தலைவர்,
1—8—28.

---

## இராமநாதபுரம் ஜில்லாவில் கிளர்ச்சி.
### மண்டலமாணிக்கம் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்.

3-8-28௳ இரவு 9-மணிக்கு இவ்வூர் பாவடிக்கு எதிரேயுள்ள மடத்தில் செங்குந்த முதலியார் அபிவிருத்தி சங்கத்தின் பொதுக்கூட்டம் ஒன்று இவ்வூர் நெசவுக்காரர் கோவாப்ரேட்டிவ் சொஸைட்டியின் பிரஸிடெண்டு ஸ்ரீமான் அம்பலம் இ. முத்து முதலியாரவர்கள் தலைமையின்கீழ் கூடிற்று. திரு. இ. முனியப்ப முதலியாரவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்த, அருப்புக்கோட்டை ஸ்ரீமான் அ. கு. சி. குழந்தைவேலு முதலியாரவர்களையும், இராமநாதபுரம் ஜில்லா சுயமரியாதைப் பிரசாரகர் ஸ்ரீமான் கு. கருப்பய்யா பிள்ளையவர்களையும், க. மு. தி. வீராசாமி நாயிடுகாரவர்களையும் அறிமுகம் செய்து வைத்தார்கள். பின் தலைவர் முன்னுரையானதும் உயர் திருவாளர் தி. கருப்பய்யா பிள்ளையவர்கள் நீண்ட கரகோஷத்தினிடையே எழுந்து தற்கால செங்குந்தர் நிலைமையைப்பற்றி உதாரணக் கதைகளுடனும், புராதன வழக்கத்தை யொட்டியும் வெகு தெளிவாகச் சர்க்கரைப்பந்தலில் தேன்மாரி பொழிந்ததுபோல சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். க. மு. தி. வீராசாமி நாயுடுகாரவர்கள் கல்வியைப்பற்றிச் சொற்பெருக்கிட்டனர். அருப்புக்கோட்டை ஸ்ரீமான் அ. கு. சி. குழந்தைவேலு முதலியாரவர்கள் சங்க முன்னேற்றத்தைப்பற்றியும் சங்கத்துக்கு முக்கியமானது பத்திரிகை என்றும் தான் இச்சங்கத்துக்குக் குடிஅரசு பத்திரிகை வரவழைத்திருப்பதாகவும் சொல்லி முடித்தபின் கடைசியாக தலைவரவர்கள், முடிவுரையாக எழுந்து நமது கூட்டத்திற்கு இடையே ஸ்ரீமான்களான முதலியாரவர்கள், பிள்ளையவர்கள், நாயுடுகாரவர்கள் மும்மூர்த்திகள்போல் வந்தலங்கரித்தது நம் குல நல்வினைப் பயனே என்றும் இவைபோல் இனி அடிக்கடி இங்குவந்து விஜயம்செய்து நற்புத்தி புகட்டுமாறும் அன்னவர்களுக்கு நீண்ட ஆயுளும், திடகாத்திரமும், கீர்த்தியும் உண்டாகும்படி எல்லாம்வல்ல நம் முருகக்கடவுள் அருள்புரிவாராக என்றும் சொல்லி முடிந்தபின் சங்கக் காரியதரிசியவர்களால் வந்தனோபசாரம்செய்யப்பெற்று சந்தனம் தாம்பூலம் வழங்கப்பட்டு இரவு 11-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

13-8-28௳ இரவு 9-மணிக்கு இவ்வூர் பாவடிக்கு எதிரேயுள்ள மடத்தில் செங்குந்த முதலியார் அபிவிருத்தி சங்கத்தின் 7-வது கூட்டம் சங்கத் தலைவர் ஸ்ரீமான் கருணைவள்ளல் மு. ஆ. ஸ்ரீபாதம் பிள்ளை. முத

வியாரவர்கள் தலைமையின்கீழ்க் கூடிற்று. தலைவர் முன்னுரையானதும் சங்கக் காரியதரிசி அவர்கள் சென்ற கூட்டத்தின் நடவடிக்கைகளை வாசித்துக் காட்டினார்கள். உபதலைவர் ஸ்ரீமான் மு. பாதம்பிரியா முதலியாரவர்கள் ஆடி௴ செங்குந்த மித்திரனில் பிரசுரம் செய்திருக்கும் பத்திரிகாசிரியரின் முன்னுரையையும், மண்டலமாணிக்கம் செங்குந்தர் சங்கம் விஷயமாய் வெளியிட்டிருப்பதையும், கிளைச் சங்கங்கள் தலைச்சங்கத்துக்கு அனுப்பிய பிரவேசக் கட்டணங்களையும், குலாபிமானிகள் செய்துள்ள நன்கொடைகளையும், தெளிவாக வாசித்துக் காட்டினார்கள். உபகாரியதரிசி ஸ்ரீமான் அம்பலம் இ. மு. சித்திரவேலு முதலியாரவர்கள் தலைச்சங்கத்தி லிருந்து பிரவேசக்கட்டணம் அனுப்பும்படி வரலான லெட்டரை வாசித்தார்கள். பொருள்காப்பாளர் ஸ்ரீமான் வெ. மு. கிருஷ்ண முதலியாரவர்கள் சந்தா இருப்புத் தொகையையும், பாக்கித் தொகையையும், வசூலையும் பற்றிச் சொல்ல பாக்கி சந்தா நண்பர்கள் சிலர் கூட்டத்தின்முன் உடனே செலுத்தினார்கள்.

### நிறைவேறிய தீர்மானங்கள்.

1. நமது தலைச்சங்கத்துக்கு இக் கிளைச் சங்கத்தின் பிரவேசக் கட்டணம் ரூ. 10 மறுதபாலில் அனுப்பும்படி தீர்மானிக்கப்பட்டது.

2. பிரவேசக் கட்டணத்திற்காக நன்கொடையளித்த ஸ்ரீமான் மு. ஆ. பாதம்பிரியா முதலியார், ஸ்ரீமான் இ. மா. இளையபெருமாள் முதலியார் ஸ்ரீமான் சு. பா. பொன்னுசாமி முதலியார், ஸ்ரீமான் ப. சி. மு. மூக்க முதலியார் வெ. மு. கிருஷ்ண முதலியாரிவர்களுக்கு இச்சங்கம் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறது.

3 சங்கத்துக்கென்று தனிக் கட்டிடம் ஏற்படுத்தும் விஷயமாய் அடுத்தகூட்டத்தில் பேசத் தீர்மானிக்கப்பட்டது.

இ. முனியப்ப முதலியார்,
காரியதரிசி.

---

### திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் கிளர்ச்சி.
### கட்டிப்பாளையம் செங்குந்தர் சங்கம்

(13-9-28) விபவ௵ ஆவணி௴ 29-ந் தேதி அமாவாசையன்று கட்டிப்பாளையம் செங்குந்தர் சங்கக் கூட்டம் இரவு 7 மணிக்குக் கூடியது.

இக்கூட்டத்திற்குச் சங்கமெம்பர்களும் இதரசெங்குந்தர்களுமாகச் சுமார் 100 ஜனங்கள்வரை குழுமியிருந்தனர். திரு. மா. சிவகிரி முதலியார் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

கடவுள் ஸ்துதிபாடியபின் முன்கூட்ட நடவடிக்கைகள் காரியதரிசியால் வாசித்துக் காட்டப்பெற்றன.

'அஹிம்சாதருமம்,' 'ஜீவகாருண்யம்', 'புலாலுண்ணாமை' முதலிய விஷயங்களைப்பற்றித் திரு. வை. பழனியப்ப முதலியார், திரு. வை. கணபதி முதலியார் ஆகிய இவர்களால் உபந்நியசிக்கப்பெற்றது.

ஸ்கூல் மாணவர்கள் ஆ. சுந்தரம் சு. கருப்பண்ணன் இவர்களால் உபந்நியாசகர்களுக்கும் சபையார்களுக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்ட பின் இரவு 11 மணிக்குச் சபை இனிது நிறைவேறியது.

மு. கருப்பண்ணன் முதலியார்,
செங்குந்த மகாஜன சங்கத்தலைவர்,
கட்டிப்பாளையம்.

---

### தஞ்சை ஜில்லாவில் கிளர்ச்சி
### சிக்கல் பொருள் வைத்தசேரி.
### செங்குந்த மகாஜன சங்கம்.

காரியதரிசி.

உயர்திரு சோ. ச. கந்தஸாமிமுதலியார்
அவர்களுக்குப்.
பிரிவு உபசாரம்

சிக்கல், பொருள்வைத்தசேரி, செங்குந்த மகாஜன சங்கக் காரியதரிசியும், வாலிப சங்கத் தலைவரும், நாகை தொழிலாள சங்க மாஜி உபதலைவரும், பிரபல சுயமரியாதை வீரருமான உயர் திருவாளர் சொ. ச. கந்தஸாமி முதலியார் அவர்கள் குடும்பத்தோடு தனது சொந்தஊராகிய வலங்கைமானுக்கு விஜயஞ்செய்வதை முன்னிட்டு, 28-8-28 தேதி மாலை, செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பாக பிரிவு உபசாரப்பத்திரமும், தேயிலை பானமும் வெகு சிறப்பாய் நடத்தப் பெற்றன.

அதுகாலை இக்கொண்டாட்ட விழாவிற்கு விஜயம் செய்திருந்த, முக்கியஸ்தர்கள்: உயர்திருவாளர்களான K. K. நல்லமுத்து முதலியார் அவர்கள் (முனிசிபல் கௌன்சிலர்), A. N. A. தங்கவேலு முதலியார், ஆறுமுக முதலியார் (நாகை), குமாரஸாமி செட்டியார் (ஐந்தனப்பேட்டை), K. ராமையா நாயுடு (சித்தாக்காடு), V.S. துரை(யாழ்ப்பாணம்), சி. த. நா. ம. முருகைய முதலியார், கி. மு. பக்கிரியா பிள்ளை (லோக்கோ ஆபீஸ் கிளர்க்கு), சங்கர அய்யர், கமிசிவாய முதலியார் (சங்கத் தலைவர்) முதலியவர்களும், உள்ளூர் வெளியூர் பிரமுகர்களும், சுமார் 300 பேருக்கு அதிகமாக விஜயம் செய்திருந்தார்கள்.



நிகழ்ச்சிக் குறிப்பில் கண்டபடி ஒட்டக் கூத்தர் விழா சிறப்பாகக், கொண்டாடப்பெற்றது.

அன்று கூட்டத்திற்கு நாகை முனிசிபல் கௌன்சிலர் உயர்திரு. K. K. நல்லமுத்து முதலியார் தலைமை வகித்தார்கள். தலைவர் முன்னுரையில் திரு. முதலியாரவர்கள் பொதுவாக சுயமரியாதை இயக்கத்திற்கும், சிறப்பாக செங்குந்தர் முன்னேற்றத்திற்கும் இடைவிடாது உழைத்து வந்ததைப்பற்றிப் பாராட்டிப் பேசினார்கள்.

பிறகு முறையே ஐந்தனப்பேட்டை. திரு. குமாரஸாமி செட்டியார் அவர்களும், திரு. ஆறுமுக முதலியாரவர்களும K. ராமையா நாயுடுவவர்களும் திரு. காசப்ப முதலியாரவர்களும், பக்கிரியாபிள்ளை அவர்களும், திரு. முதலியாரவர்களின் தியாகத்தைப் பற்றி நன்கு பாராட்டினார்கள்.

தலைவரவர்கள் திரு. முதலியாரவர்களுக்கு உபசாரப் பத்திரம் படித்துக்கொடுத்தார்கள்.

பத்திரத்திற்குப் பதிலளிக்கு முறையில் திரு முதலியார் அவர்கள் தம்மைப்பற்றிப் பத்திரத்திலும் நண்பர்களாலும் சொல்லப்பட்டவற்றிற்குத் தாம் சிறிதும் உரியவரல்ல வென்றும், தாமியற்றி வரும்தொண்டு ஒவ்வொரு மனிதனும் செய்யவேண்டியதே யென்றும் தாம் செய்து வரும் தொண்டிற்கு நன்றியறிதல் செலுத்தவேண்டியது அவசியமாயின் அதற்குக் காரண பூதராயிருந்த காலஞ்சென்ற நாகை. திரு. V. P. பக்கிரிசாமி பிள்ளையவர்களுக்கே செலுத்த வேண்டுமென்றும் சொல்லி முடித்தார்கள்.

பிறகு வந்திருந்தவர்கள் எல்லோருக்கும் சமபந்தியாக சிற்றுண்டி தேயிலைப்பானம் வழங்கப்பெற்றன. பின்னர் சந்தன தாம்பூலம் வழங்கப்பெற்று இரவு 9-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

## ஒட்டக்கூத்தர் திருநாள்

காஞ்சிபுரம்

கலி 5030க்கு விபவ ஆண்டு ஆவணித் திங்கள் 13-ம்நாள் "காஞ்சிச் செங்குந்த வாலிபர் சங்கத்"தின் ஆதரவில் நடைபெற்று வரும் "செங்குந்தர் இரவு பாடசாலை"யில, திருவருட் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தப் புலவர்பெருமான் திருநாட் கொண்டாட்டம் காரணமாக அப்பாடசாலை மாணவர்கள் எங்கு பார்த்தாலும் மாவிலைத் தோரணங்களால் அலங்காரம் செய்திருந்தார்கள். மேற்படி திருநாட்கொண்டாட்ட அழைப்புப் பத்திரிகைகள் நகரெங்கும் வழங்கப் பெற்றன. சரியாக மாலை 5 மணி முதல் செங்குந்த பெரியோர்களும் ஸ்கூல் மாணவர்களும் மற்றும் பலரும் திரள் திரளாகக் கூட ஆரம்பித்தனர். சுமார் 800க்கு மேற்பட்ட அன்பர்கள் உள்ளும் வெளியிடத்திலுமாக விஜயஞ் செய்திருந்தனர். செங்குந்தர் இரவு பாடசாலை மாணவர்கள் இன்னிசைக் கருவிகளுடன் தேவாரபாராயணம் செய்தனர். திருவருட் கவிச்சக்கரவர்த்தியார் திருவுருவப் படத்துக்குப் பூமாலைசூட்டிக் கற்பூர ஆராதனை செய்த பிறகு, பெரியோர் பலர் வணங்கிக்கொண்டனர். சைவத்திருவாளர் S. K. சின்னக் குழந்தை முதலியாரவர்கள் இக்கொண்டாட்ட வைபவக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்கள். பிறகு தலைவர்களுக்கும், நமது இனகுரு சுவாமிகள் ஸ்ரீமத் காளத்தி தேசிகர், மாணிக்க தேசிகர், தெய்வசிகாமணி தேசிகர், ஐயன்குளம். பொன்னுசாமிமுதலியார் முதலிய பெரியோர்களுக்கும் பூமாலைசூட்டப்பெற்றது. தலைவரவர்கள் முன்னுரை வழங்கியதும், செங்குந்தர் இரவு பாடசாலை மாணவர்கள் நா. கந்தசாமி, முருகேசன் என்ற இருவரும் முறையே 'கல்வி,' 'செல்வம்' என்பன பற்றியும், குப்பன் 'காலம்' என்பது பற்றியும் வேங்கடேசன், பாலசுப்பிரமணியன் என்ற இருவரும் 'கடவுளும் புண்ணிய பாவமும்' என்பன பற்றி வினாவிடைகளாகவும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். செங்குந்தர் இரவு பாடசாலை உபாத்தியாயர் ப. இராமலிங்க முதலியார் "எல்லாம் தெய்வச்செயல்" என்பது பற்றிக் கேட்போருவக்குமாறு அரியதோர் உபந்நியாசம் செய்தார். பின்பு ஐயன்குளம். வித்துவான் சைவத் திருவாளர் அ. க. பொன்னுசாமி முதலியாரவர்கள் "ஒட்டக்கூத்தர் பெருமை" என்பது பற்றிச் சர்க்கரைப் பந்தலிற் தேன்மாரி பெய்தாற்போல, கேட்போர் வியக்குமாறு அரியதோர் உபந்நியாசம் புரிந்தார்கள். "விநோத ரசமஞ்சரியில் நடுவுநிலைமை பிறழ்ந்து எழுதியிருக்கும் கட்டுரைகள் முழுவதும் உண்மைக்கு மாறுபட்டன என்று ஒவ்வொன்றையும் தக்க மேற்கோள்களுடன் யாவரும் நன்கு உணர உள்ளங்கை நெல்லிக்கனி

போல எடுத்துக் காட்டினமை யாவராலும் பாராட்டத்தக்கது. பின் தலைவரவர்கள் முடிவுரையாக, காஞ்சிச் செங்குந்த வாலிப சங்கத்தார் ஒட்டக்கூத்தர் திருநாட் கொண்டாட்டம் கொண்டாடியது நம்மவர்க்கெல்லாம் இனி உண்டாகவிருக்கும் பெரியநன்மையின் பொருட்டே என்றும், செங்குந்தர் இரவு பாடசாலை தோன்றிய இச்சில மாதங்களில் மாணவர்கள் இனிமையாகவும் தைரியமாகவும் திருத்தமாகவும் சொற்பொழிவுகள் செய்யப் பழகிக்கொண்டமை எம்மனோர்க்கு அதிக மகிழ்ச்சியை உண்டாக்குகின்றதென்றும், வித்துவான் பொன்னுசாமி முதலியாரவர்கள் ஒட்டக்கூத்தர் பெருமையாகிய அமிர்தத்தை நமக்கெல்லாம் புதிய விருந்துணவாக அளித்தார்கள் என்றும், நமது குலத்தை நிலைநாட்டிய புலவர் பெருமானின் அற்புத வீரச்செயல்களை இன்றுதான் நன்கு தெரியலானோம் என்றும், இப்புலவர் பெருமானியற்றிய பிரபந்தங்களை நம்மவர்கள் படித்து வந்தால் இம்மை மறுமைப்பயன்களை எளிதில் அடையலாமென்றும் கேட்போர்க்கின்பம் பயக்கச் சொற்பொழிவு வழங்கப் பச்சையப்பன் ஐஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் திரு. வீ. திருஞானசம்பந்த முதலியாரவர்கள் வந்தனோபசாரம் கூறச் சர்க்கரை வழங்கப்பெற்று மங்களவாழ்த்துடன் இரவு 11 மணிக்குக் கொண்டாட்டக் கூட்டம் இனிதின் நிறைவேறியது.

சி. அருணசல முதலியார்,
காரியதரிசி,

## மணக்குடி செங்குந்த மகாஜன சங்கம்.

மேற்படி சங்கத்தின் ஆதரவில் விபவ ஆண்டு ஆவணித்திங்கள் 13-ம் நாள் செவ்வாய்க்கிழமையன்று செங்குந்தகுல கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் திருநாள் பெரிதும் விமரிசையாக நடத்திச் சுமார் ஆயிரம் ஜனங்களுக்குமேல் அன்னமிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அன்று மாலை 6-மணிக்கு மேற்படி சங்கத்தின் ஆதரவில் இவ்வூர் பிரபல ஜவுளி வியாபாரியும் தனவந்தருமான திரு. தி. ரு. வெ. ச. காளிமுத்து முதலியார் அவர்கள் தலைமையின்கீழ்ப் பெருங் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. சங்கத்தலைவர் திரு. தி. ரு. வ. யி. காளிமுத்து முதலியார் அவர்களால் ஒட்டக்கூத்தர் சரித்திரம் விரிவாகச் சொல்லப்பட்டதோடு திரு. தி. ரு. வே. ரா. கணபதிமுதலியார் அவர்கள் 'சமூக முன்னேற்றம்' என்பதைப் பற்றியும், திரு. தி. ரு. வே. க. நா. ராமச்சந்திர முதலியார் அவர்கள் சங்கம் என்பதைப்பற்றியும் திரு. சு. சீனிவாஸ முதலியார் அவர்கள் 'நமது கடமை' யென்பதைப்பற்றியும் விரிவுரைகள் நிகழ்த்திய பின் இரவு சுமார் 10-மணிக்கு வந்தன உபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது வென சங்கக்காரியதரிசி வே. ரா. கணபதி முதலியார் எழுதுகிறார்.

## மதுரைச் செங்குந்தர் சங்கம்.

நாளது 28-8-28-தேதி செவ்வாய்க்கிழமையன்று இரவு 7-மணிக்குச் செங்குந்தகுல கவிச்சக்கரவர்த்திகள் ஒட்டக்கூத்தர் தம திருநக்ஷத்திரப் பூர்த்தி ஒன்பதாமாண்டு விழா தலலாகுளம் செங்குந்த விநாயகராலயத்தில் செவ்வனே நடந்தேறியது. திருவாளர் பொன்னு முதலியாருள்பட்ட திருப்புகழ் கோஷ்டியின் இனிய பாராயணத்திற்குப்பின் விநாயகருக்கும் கூத்தர் பெருமானது திருவுருவப் படத்திற்கும் அலங்கார தூபதீப நைவேத்தியங்கள் யாவும் நடாத்தப்பட்டன. பின்னர் சங்க முன்னேற்றத்திற்குத் தளராது உழைப்பவரும், மதுரை RM. P. RM. P. அவர்களின் டிராவலிங் ஏஜண்டுமான உயர் திருவாளர் S. வீரப்ப முதலியாரவர்கள் தலைமையின்கீழ்க் கூட்டம் துவக்கப்பட்டது. நிகழ்ச்சிக்குறிப்பில் கண்டபடி முதலில் திரு. S. மாணிக்கமுதலியார் "ஒட்டக்கூத்தரும் ஈட்டி எழுபதும்" என்பதுபற்றி ஓர் அரிய உரை நிகழ்த்தினார்கள். பிறகு P. V. முத்துக்கருப்ப முதலியாரவர்கள் "செங்குந்தரும் கல்வியும்" என்பது பொருளாகக் கொண்டு உரை நிகழ்த்துகையில் நம்மவர் முற்காலத்தி லெய்தியிருந்த உன்னத நிலைக்குக் காரணம் கல்வியே யென்றும் ஆதலால் இதுசமயம் நம்மவர் முற்போக்கடைய ஏற்ற சாதனம் கல்வியே யென்றும் அச்சாதனத்தை அடைய செங்குந்த குல மக்கள் ஒவ்வொருவரும் பாடுபடல் வேண்டுமென்றும் கூறி முடித்தார். பின்பு மாணவர் M. அங்குசுவாமி "இந்திய ஜனசமூகங்களும் செங்குந்தர்களும்" என்பதை யொட்டி மிகவும் விரிவாகப் பேசினார். காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பட்டுக் கூட்டம் இரவு 10½-மணிக்கு இனிது முடிவுற்றது. பிறகு, வந்திருந்த அனைவோர்க்கும் சந்தனம், தாம்பூலம், புஷ்பம், பொங்கல் முதலியன வழங்கப்பட்டன.



## செங்குந்தர் அபிவிருத்தி சங்கம் அம்பாசமுத்திரம்.

(28-8-28) செவ்வாய்க்கிழமை இரவு 7-மணிக்குச் சங்கத்தின் ஆதரவில் 400 ஜனங்கள்வரை கூடினார்கள். அவ்வமயம் இவ்வூர் தீர்த்தபதி உயர்தர கலாசாலை தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீலஸ்ரீ அரிஹர பாரதியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். கடவுள் வணக்கத்திற்குப் பின் மாணவன் ஆவுடையப்பன் ஒட்டக்கூத்தரின் வரலாற்றையும் அவரது பெருமையையும்பற்றி நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்தினன். பின் மாணவன் வேலாயுதம் இரட்டையர் சரிதையையும் அவர்களின் ஒற்றுமையையும், கல்வித்திறமையையும் வியந்து கூறினன். தலைவர் பின்னுரையில் ஒட்டக்கூத்தர் இரட்டையர் பெருமைகளையும், கல்வித்திறமையையும் மிக விரிவாக சொற்பெருக்கிட்டார்கள். இறுதியில் காரியதரிசி திரு. சிவராம அருணசல முதலியார் அவர்கள் தலைவர் அவர்களுக்கும் சபையோர்களுக்கும் வந்தனோபசாரம் கூறித் தலைவர் அவர்களுக்குப் பூமாலை சூட்டித் தாம்பூலம் அளிக்கப்பெற்ற பின்னர் சபையோர்களுக்குச் சந்தனம், தாம்பூலம், வழங்கப்பெற்று கடவுள் வாழ்த்து பாடி விழா இனிது நிறைவேறியது.

ஆ. ம. ஆறுமுக முதலியார்,
காரியதரிசி.

## உன்னியூர் செங்குந்தர் சங்கம்

நாளது ஆவணி மீ 13௳ (28-8-28) செவ்வாய் கிழமை மாலை 2½மணிக்குக் கூத்தர்பெருமான் திருவுருவப்படம் முயன்றும் கிடைக்காமையால் பலரது விருப்பத்தின்படி முருகப்பெருமான் திருவுருவப்படத்தைப் புஷ்ப விமானத்தில் அலங்காரஞ்செய்து கிராமத்தைச்சுற்றி மேள வாத்தியத்துடனும் விருதுகளுடனும், "ஒட்டக்கூத்தருக்கு, ஜே! செங்குந்த தலைவர்களுக்கு ஜே!' என்ற ஆரவாரத்துடன் பவனி வந்து பாவடித்தேரப்பிலே எழுந்தருளி நின்ற அருள்மிகு விநாயகர் ஆலயத்தில் இவ்விழாவுக்கென்றே தயாரிக்கப்பெற்ற அழகிய கொட்டகையின் கண், அருள்மிகு விநாயகர், முருகப்பெருமான், காமாட்சி அம்மன், முத்துக்குமாரசுவாமி முதலிய தேவதைகளுக்கு மிகச்சிறப்பாக அபிஷேக ஆராதனை நடந்தும், கிராமத்திலுள்ள ஒவ்வொரு செங்குந்தரும் குடும்பமும் தேங்காய் பழம் முதலிய தீபாராதனைக்கு வேண்டிய சாமான்களுடன் திரளாகவந்து நாயகரது கோவிலுக்கு வந்து கடவுள் தரிசனம் செய்து சென்றது குறிப்பிடத்தக்கது. பின்னர் இச்சங்கத்தின் உபதலைவர் திரு. M. R. இரத்தினசாமி முதலியாரவர்களது அவைத்தலைமையின்கீழ் ஒரு மாபெரும் கூட்டம் கூடியது. அதுகாலை தமிழ்ப் புலவர் திரு. கு. பெ. கந்தசாமி முதலியாரால் கூத்தர் பெருமான் திவ்ய சரித்திரத்தைக் கேட்போர் வியக்குமாறு ஓர் அரிய பிரசங்கமும், திரு. P. மாரியப்ப முதலியாரால் 'குந்தர் குலமும் கூத்தர் பெருமையும்' என்பது பற்றி சில ஆராய்ச்சியுடன் ஓர் சொற்பொழிவும், திரு. P. K. வீரப்ப முதலியாரால 'கூத்தர் நலமும் குந்தர் மாண்பும்' என்பதுபற்றி ஒரு விரிவுரையும் பின்னர் திரு. A. K. S. சின்னசாமி முதலியாரால் கூத்தர் பெருமைகளில் பலவற்றைப் பற்றியும் சிறந்த உபந்யாசங்கள் நடைபெற்றன. பின் தலைவர் இனிமையாகவும் சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல் என்ற முறைப்படியும் நிகழ்த்திய முடிவுரைப் பிரசங்கத்திற்குப் பின், கூட்டத்திற்கு வந்திருந்த மஹாஜனங்களுக்குக் கடலைச் சுண்டல் கற்கண்டு, தேங்காய் பழம் வெற்றிலைபாக்குமுதலியவைகள் நல்கியபின் இரவு 9 மணிக்குக் 'கூத்தர் பெருமானுக்கு ஜே' என்ற சபதத்துடன் வந்தனோபசாரம் காரியதரிசியால் கூறப்பெற்று இனிது கலைவுற்றது.

பீ. மாரியப்பமுதலியார்,
காரியதரிசி,
செங்குந்தர் சங்கம், உன்னியூர்.

## திருமயிலாப்பூர் செங்குந்த வாலிபர் சங்கம்

15-9-28 சனிக்கிழமை மாலை 6 மணிக்குத் திருமயிலாப்பூர் தெற்கு மாடவீதி வன்னியர் சத்திரத்தில் மேற்படி சங்கத்தின் ஆதரவில் சென்னை கார்ப்பரேஷன் தலைவர் திவான் பஹதூர். ஜீ. நாராயணசாமி செட்டியார் அவர்கள் தலைமையின்கீழ் ஒட்டக்கூத்தர் திருநாள் கொண்டாட ஒரு பெருங்கூட்டம் கூடிற்று. அச்சமயம் திருவாளர்கள் P. ரங்கையநாயுடு, பி.ஏ., பி.எல்., நமது தலைசங்க உதவித் தலைவர் S. குழந்தைவேலு முதலியார், எஸ். எஸ். இராமச்சந்திர ஐயர், பி.ஏ., எல்.டி., இராஜகோபால ஐயங்கார், லோகநாத முதலியார், சிங்காரமுதலியார், ஆரணி சோமசுந்தர முதலியார், சானிடரி இன்ஸ்பெக்டர். மா. மு. பரமகுருநாத முதலியார், நமது தலைச்சங்கத்தின் அமைச்சரும் செங்குந்தமித்திரன் பத்திராசிரியருமாகிய ம. சண்முகசுந்தர முதலியார்

எம்.ஏ.,எல்.டி., மா. அ. கனகசபைமுதலியார், தி. அ. சண்முக முதலியார் முதலிய அநேக பிரமுகர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

தமிழ் லெக்ஸிகன் கமிடி ஆபீஸ் தலைமைத் தமிழ்பண்டிதரும் பண்டைத் தமிழ் நூல்களை முறையாகப் படித்து அவற்றில் பொதிந்து கிடக்கும் உண்மைச் சரித்திரங்களை ஆராய்ச்சி முறையில் கண்டுபிடித்துத் தமிழுலகத்திற்கு வழங்கி வருபவருமாகிய ஸ்ரீமான் மு. இராகவையங்கார் அவர்கள், 'கவிச்சக்கரவர்த்தி ஒட்டக் கூத்தரும் அவரது பெருமையும்' என்னும் விஷயத்தைப்பற்றி விஸ்தாரமாக ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அதன் சாராம்சமாவது:—'பொருப்பிலே பிறந்து' என்ற தமிழணங்கைப்பற்றிச் சொல்லப்பட்டிருப்பினும், தமிழ் மிகுதியும் வளர்ந்தது மத்தியகாலத்திலிருந்த சோழர் காலத்திலேயாம்; அதாவது, ஆதித்தன் காலமுதல் குலோத்துங்க சோழன் காலம் வரையில். அக்காலத்தில்தான் காரிகை, தண்டியலங்காரம், பாரதம், வீர சோழியம், பெரிய புராணம், இராமாயணம் முதலிய அநேக அரிய நூல்கள் ஏற்பட்டன. சோழ சமஸ்தானத்தில் ஜயங்கொண்டான், கூத்தர், கம்பர் ஆகிய மூன்று கவிச் சக்கரவர்த்திகள் விளங்கினர். ஜயங்கொண்டாரும் கம்பரும் பிற்காலத்தவர்களால் கவிச்சக்கரவர்த்தி என்னும் பட்டம் பெற்றனர். ஒட்டக்கூத்தரோ* அவ்வாறன்றி எல்லா அரசரிடத்தும் கப்பம்வாங்கிய புவிச்சக்கரவர்த்தியாகிய சோழனைப்போல எல்லாக் கவிகளிடத்தும் கப்பம் வாங்கும் கவிச்சக்கரவர்த்தியாக விளங்கினர். அவர் தமது காலத்திலேயே கவிச்சக்கரவர்த்தி யென்னும் பட்டம்தாங்கி விளங்கினர் என்பதற்கு அவரைக் குறித்துப் பிற புலவர்கள் பாடிய பல பாக்களும் கூத்தர் செய்துள்ள தக்கயாகப் பரணியுமே சான்றாகும். கூத்தர் சோழ சமஸ்தானத்திலிருந்த காலம் கி. பி. 1118லிருந்து 1170 வரையில்.

இவ்வரும் பெரும் புலவரது உண்மைச் சரித்திரத்தைத் தமிழுலகத்திலறிந்தவர் வெகுசிலரே இவரைப் பற்றிப் பின்னவரால் புனையப்பட்ட பொய்க்கதைகளே இப்போது பெரும்பாலும் பரவியிருக்கின்றன. இவரிடத்துப் பலரும் தூர் அபிப்பிராயம் கொள்ளநேர்ந்ததற்குக் கார

* ஒட்டம் என்பதற்கு வாதம், பந்தயம் என்பது பொருள். ஆகவே ஒட்டக்கூத்தர் என்பதற்கு வாதஞ்செய்துவென்றவர் என்று பொருள் கொள்ள வேணும்.

ணமாயிருந்தது விநோத ரசமஞ்சரி என்னும் நூலே. வேடிக்கையான கதைக்கொத்து என்னும் பொருள் தருவதாய விநோதரசமஞ்சரி யென்னும் பெயராலேயே அதில் சொல்லப்பட்டவை உண்மையானவை யல்லவென்று யாவரும் உணரலாம். இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் கூட இவரது உண்மைச் சரித்திரம் நிலவியிருந்ததென்று அக்காலத்தவர் செய்துள்ள பாக்களால் தெரிகிறது. இவர் இளமையில் புதுவைச்சங்கரன் என்பாரிடத்திருந்து நாலாயிரக்கோவை முதலிய பிரபந்தங்களைச் செய்து கவிராக்ஷசன் கௌடப் புலவன் என்னும் சிறப்பு நாமங்களையும் பெற்றார். பின்னர் விக்கிரம சோழனால் சமஸ்தானத்திற்கு வரவழைக்கப்பெற்று அதுமுதல் மூன்று தலைமுறை வரையில் மந்திரியாக விருந்தார். குலோத்துங்கன் முதலிய சோழர்கள் இவரிடம் கல்வி கற்றவர்கள். மூவருலா அரும்பைத் தொள்ளாயிரம், ஈட்டி எழுபது, தக்கயாகப்பரணி முதலிய பல அரிய பிரபந்தங்களன்றி இலக்கணங்களில் அடங்காதுள்ள உலக வழக்குக்களைத் திரட்டி 'எதிர் நூல்' என்னும் ஒரு நூலையும் செய்திருக்கின்றனர். தற்போது கம்பர் பெயரால்வழங்கும் சரஸ்வதி யந்தாதியும் இவர் செய்ததே. இவர் சரஸ்வதியைப் பூஜித்து வந்தவரென்பது சம்பத்தில் கூத்தனூரில் கண்டுபிடிக்கப்பட்ட அரிய சாசனத்தால் விளங்குகிறது. கூத்தனூரிலுள்ள சரஸ்வதி கோயில் ஒட்டக்கூத்தரது பேரனாகிய வரதக்கூத்தன் என்பவரால் கட்டப்பட்டது. இவரைப்போல அருங்கவிபாடும் திறமையும் செல்வாக்கும் தீரமும் பாஷாபிமானமும் குலாபிமானமும் கொடையும் ஒருங்கே பெற்றவர் ஒருவருமிலர். கல்வி, வீரம், இசை, கொடை ஆகிய வற்றைப் பெற்ற பெரும்தப் புலவர் இவர். பேர்பெற்ற உரையாசிரியராகிய பேராசிரியர் போன்ற மகா வித்வான்களே இவருக்குப் பட்டோலை பிடித்தவர். (பட்டோலை பிடித்து எழுதவல்லார்) இவர் சோழரிடத்துப் பெற்ற பொருளையெல்லாம் புலவர்களுக்கே வழங்கியதாகத் தெரிகிறது. கூத்தரைப் பழிக்காரர்கள். இரண்டு தடவைத் தூரத்திலிருந்தார் என்றுமாதிரியான இரண்டு கதைகள் வழங்கி வருகின்றன வாயினும் தக்கயாகப்பரணி செய்யுமுன் நடந்ததாகச் சொல்வது மாத்திரந்தான் பொருத்தமானது. நம் பெருமையை நாமே சொல்வது சரியன்று அது வேண்டியதாயின் தலை கொய்ததால் பாடுவேன்' என்றது நியாயமெனக் கொண்டிருப்பார் கல்லையனுப் புலவரைக் கொலைசெய்யத் துணிந்



தாரென்பது பொருந்தாது. கைக்கோளர்கள் சோழநாட்டுப் படைவீரர்கள். கைக்கோளர் என்னும் பதத்திற்கு (கை=அணி, படை) அணி அல்லது படையை யுடையவர்கள் என்பது தான் பொருள். உயிரைப் பொருட்படுத்தாது தம் தலையை யரிந்து தந்த தமிழ் நாட்டு வீரரது செய்கைகளைப் பழந்தமிழ் நூல்களில் பரக்கக் காணலாம். ஆகையால் 'ஈட்டியெழுபது' பிரபந்தத்திற்காகச் செங்குந்தர்கள் தலைகொடுத்தாரென்பதில் சந்தேகப்பட வேண்டியதேயில்லை.

கம்பரும் கூத்தரும் ஒரு காலத்தவர் அல்லர். கூத்தர் இருந்தாப்பிய காலத்தில் கம்பர் சிறு பிள்ளையாயிருந்தார். இராமாயண உத்தர காண்டம் கூத்தர் பாடியதல்ல. வாணியன் தாதன் என்னும் புலவரால் பாடப்பட்டது. கம்பர் காலத்திருந்த வாணியன் தாதன் என்னும் புலவர் பாடிய இராமாயண உத்தரகாண்டத்தைக் கூத்தர் பாடியதாகச் சொல்வதுஎவ்வகையானும் பொருந்தாது. இவ்விபரீதம் வாணியன்தாதன்என்பதை வாணிதாசன் எனச் சிலர் கொண்ட பாடபேதத்தால் வந்தது.

'மல்லிகையே வெண்சங்கா வண்டுத' என்னும் நளவெண்பாச் செய்யுளைக் குறித்துக் கூத்தருக்கும் புகழேந்திக்கும் நடந்ததாகச் சொல்லும் விவாதமும் முற்றிலும் பொய்யே; இப்பிரயோகத்தைத் திருவாசகம் திருவாய்மொழிகளில் பெரியோர்கள் ஆண்டிருத்தலின்.

இவ் வரும்பெரும்புலவரது நாளைக் கொண்டாட முன் வந்திருக்கும் செங்குந்த வாலிபர்களின் உணர்ச்சியைப் பற்றியும் கூத்தரது உண்மைச் சரித்திரத்தைப்பற்றியும் சொல்ல நான் சந்தோஷப்படுகிறேன். கூத்தர் எவ்விதம் கல்வி,வீரம், இசை கொடைகளில் சிறந்து விளங்கினாரோ அவ்விதமே அவர் மரபில் தோன்றிய செங்குந்த வாலிபர்களும் அக்குணங்களில் சிறந்து விளங்கவேண்டும்' என்று கூறிமுடித்தார்.

தலைவர் பின்னுரை கூறியதும் தலைவரவர்களும் உபந்நியாசகாரவர்களும் பூமாலை சூட்டப்பெற்றனர். திருவாளர்கள் S. குழந்தைவேலு முதலியார், ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ.,எல்.டி., மு. சரவண முதலியார் இம்மூவராலும் வந்தனோபசாரம் கூறப்பெற்று இரவு 8-30-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

## விகடக் களஞ்சியம்

ஒரு வைத்தியர் தன்னிடம் முதல் தடவை வருபவரை 10 ரூபாய்களும் இரண்டாம் தடவை வருபவரை 5 ரூபாய்களும் கேட்பதை யறிந்த ஒரு ரோகி அவரிடம் சென்று 'மறுபடியும் வந்துவிட்டோம்' என்றார்.

வை:—இதற்கு முன்பு உங்களைக் கண்டதாகக் கவனமில்லையே.

ரோ:—சென்றவாரம் வந்தேனே.

வை:—அப்படியா; உடம்பு எப்படி யிருக்கிறது?

ரோ:—ஒன்றும் சௌகரியமாகவே யில்லை.

வை:—சரி முன்பு கொடுத்த மருந்தையே இன்னொருவாரம் சாப்பிடுங்கள் இப்பொழுது 5 ரூபாய்கள் கொடுக்கவேண்டும்.

* * * *

உபாத்தியாயர்:—நீ எழுந்து நில்.

ஒரு பையன்:—நானா சார்?

உபா:—அல்ல, உன் பின்னாலிருப்பவன்.

மற்றொருவன்,—நானா சார்?

உபா:—ஆமாம் பத்து நிமிஷங்கள் நின்றுகொண்டிரு

பையன்:—ஏன் சார்?

உபா;—உன் தூக்கத்தைப் போக்க.

பை:—நான் தூங்கவில்லையே.

உபா:—அப்படியா, பின்னென்ன செய்துகொண்டிருந்தாய்?

பை:—கனவு கண்டுகொண்டிருந்தேன்.

உபா:—என்ன கனவு கண்டாய்?

பை:—நான் அதைச் சொல்லக்கூடாது.

உபா:—சட், சீக்கிரம் சொல்.

பை:—உங்கள் தலைகுட்டையை நான் தட்டிவிட்டாற்போலக் கனவுகண்டேன்.

* * * *

சென்னைவாசி:—நீ சமுத்திரத்தைப் பார்த்திருக்கிறாயா?

கிராமவாசி:—ஓ, பார்த்திருக்கிறேன்.

செ-வா:—எப்படி யிருக்கும்?

கி-வா:—எங்களூர் ஏரியைப்போலிரண்டு பங்கிருக்கும்; நிறையத் தண்ணீரிருக்கும்.

* * * *

உபாத்தியாயர்:—சுத்த முட்டாள்! ஒன்றுமே தெரியவில்லையே. போனவருஷம் எந்த மடையனிடம் படித்தாய்?

மாணவன்:—தங்களிடத்தில்தான்.

* * * *

தகப்பன்:—என்ன கோபாலா, நூற்றுக்குப் பத்து மார்க்கு வாங்கிவிட்டுச் சந்தோஷமாக விளையாடுகிறாயே?

மகன்:—அப்பா 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து'.

* * * *

129805

# 'செங்குந்த மித்திரன்' பஞ்சாங்கம்

விபவஹு புரட்டாசிமீ-அற்பிசிமீ (1928ஹு அக்டோபர்மீ-நவம்பர்மீ)

| அக்டோபர் | தமிழ் தேதி | வாரம் | திதி. | நக்ஷத்திரம் | யோகம். | நேத்திரம். | ஜீவன். | [illegible] | யோகினி. | விசேட நாட்கள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 16 | திங் | துவி, 16-10 | அ, 33-23 | ஸி, 60 | 2 | 1 | துவி திரி | வ-மே | சுரிகான் அசூர்ய சயன விரதம் |
| 2 | 17 | செவ் | திரி, 8-48 | ப*, 27-58 | ஸி, 60 | 2 | 1 | சது | வ-ஸி | கிருத்திகை |
| 3 | 18 | புத | சது, 1-40<br>பஞ், 54-54 | ஸி, 22-49 | ஸி, 60 | 2 | 1 | பஞ் | ஆகா | திருநாளைப்போவார் |
| 4 | 19 | வியா | ஷஷ், 48-33 | ரோ 18-15 | அ, 18-15 ஸி | 2 | 0 | சஷ் | ஜிழ | சந்திர சஷ்டி விரதம் |
| 5 | 20 | வெ | ஸப், 43-48 | மி, 14-25 | ம, 60 | 2 | ½ | சப் | வட | மஹாலக்ஷ்மி விரதம் |
| 6 | 21 | சனி | அஷ், 39-30 | தி, 11-33 | ஸி, 60 | 1 | ¼ | அஷ் | தெ-ஸி | துர்கை நவமி |
| 7 | 22 | ஞா | நவ, 39-10 | பு, 9-35 | ஸி, 60 | 1 | ¼ | நவ | தெ-மே | சௌரி விரதம் |
| 8 | 23 | திங் | தச, 33-45 | பூ, 8-35 | ஸி, 60 | 1 | ¼ | தச | தெற் | யாத்திரை பிரயாணம் |
| 9 | 24 | செவ் | ஏகா, 32-40 | ஆ, 8-35 | ஸி, 60 | 1 | ¼ | ஏகா | மேற் | ஏகாதசி |
| 10 | 25 | புத | துவா, 32-28 | ம, 9-35 | ஸி, 9-35 அ | 1 | ¼ | துவா | வ-மே | அருணந்தி சிவாசாரி |
| 11 | 26 | வியா | திர 33-18 | பு, 11-40 | ஸி 11-40 ம | 1 | ¼ | திர | வ-ஸி | பிரதோஷம் நல்லமழை |
| 12 | 27 | வெ | சது, 35-25 | உ, 14-45 | ஸி, 41-51 அ | 0 | ¼ | சது | ஆகா | உழவு செய்ய |
| 13 | 28 | சனி | அ●, 38-28 | அ, 18-55 | ம, 60 | 0 | 0 | அமா | பூமி | மாளய அமாவாசை |
| 14 | 29 | ஞா | பிர, 42-50 | ஸி, 24-15 | ஸி, 60 | 0 | *0 | பிர | ஜிழ | நவராத்திரி ஆரம்பம் |
| 15 | 30 | திங் | துவி, 48-15 | சு, 30-43 | அ, 30-43 ஸி | 0 | 0 | துவி | வட | சந்திர தரிசனம் |
| 16 | 31 | செவ் | திரி, 54-25 | வி, 37-58 | ம, 37-58 ஸி | 0 | ¼ | திரி | தெ-ஸி | துலாரவி 19-33 |
| 17 | 1 | புத | சது, 60 | அ, 45-49 | ஸி, 60 | 0 | ¼ | சது | தெ-மே | துலாஸ்நான ஆரம்பம் |
| 18 | 2 | வியா | சது, 1-13 | கே, 53-45 | பி, 53-45 ஸி | 1 | ¼ | பஞ் | தெ-மே | சௌரி விரதம் |
| 19 | 3 | வெ | பஞ், 7-53 | மூ, 60 | அ, 60 | 1 | ¼ | சஷ் | தெற் | சரஸ்வதி பூஜை (சிலர் |
| 20 | 4 | சனி | சஷ், 14-8 | மூ, 1-18 | ஸி, 60 | 1 | ¼ | சப் | மேற் | பிரயாணம் [கள்) |
| 21 | 5 | ஞா | ஸப், 19-18 | பூ, 7-53 | ஸி, 7-53 அ | 1 | ¼ | அஷ் | வ-மே | சுபமுகூர்த்தம் |
| 22 | 6 | திங் | அஷ், 22-45 | உ, 13-3 | ம, 13-3 அ | 1 | ¼ | நவ | வ-ஸி | பொய்கையாழ்வார் |
| 23 | 7 | செவ் | நவ, 24-30 | தி, 16-28 | ஸி, 60 | 2 | ¼ | தச | ஆகா | பூதத்தாழ்வார் |
| 24 | 8 | புத | தச, 24-3 | அ, 17-50 | பி, 17-50 ஸி | 2 | ¼ | ஏகா | பூமி | பேயாழ்வார் |
| 25 | 9 | வியா | ஏகா, 21-25 | ச, 17-10 | ம, 17-10 ஸி | 2 | 0 | துவா | ஜிழ | கோவத்வாதசி |
| 26 | 10 | வெ | துவா, 16-53 | பூ, 14-33 | ஸி, 60 | 2 | 1 | திர | வட | பிரதோஷம் |
| 27 | 11 | சனி | திர, 10-15 | உ, 10-18 | ஸி 10-18 ம | 2 | 1 | சது | தெ-ஸி | வாஸ்துபுருஷன் நித்தி |
| 28 | 12 | ஞா | சது, 3-28<br>○ 55-20 | சி, 4-49<br>ஆ, 58-30 | அ, 4-48 ஸி | 2 | 1 | பௌ | தெ-மே | திருமூலர். [ரைவிடுதல் |
| 29 | 13 | திங் | பிர, 46-38 | பு, 51-40 | ஸி, 51-40 ம | 2 | 1 | பிரத | மேற் | நின்றசீர் நெடுமாறர் |
| 30 | 14 | செவ் | துவி, 37-53 | ஸி*, 44-50 | ஸி, 44-50 அ | 2 | 1 | துவி | வ-மே | இடங்கழி, பூசலார் |
| 31 | 15 | புத | திரி, 29-28 | ரோ 38-25 | ஸி, 60 | 2 | 1 | திரி | வ-ஸி | சுபமுகூர்த்தம் |
| 1 | 16 | வியா | சது, 21-45 | மி, 32-43 | ம, 60 | 2 | 1 | சது | ஆகா | சதுர்த்தி விரதம் |
| 2 | 17 | வெ | பஞ், 15-3 | தி, 27-58 | ஸி, 60 | 2 | 0 | பஞ் | பூமி | சுபபிரயோஜனங்கள் |
| 3 | 18 | சனி | சஷ், 9-33 | பு, 24-33 | ஸி, 60 | 2 | ¼ | சஷ் | ஜிழ | சத்திராயனுர் [செய்ய |
| 4 | 19 | ஞா | சப், 5-25 | பூ, 22-35 | ஸி, 60 | 1 | ¼ | சப்<br>அஷ் | வட | சுபமுகூர்த்தம் |
| 5 | 20 | திங் | அஷ், 2-48 | ஆ, 22-8 | ஸி, 28-8 ம | 1 | ¼ | நவ | தெ-ஸி | வாகனம் வாங்க |
| 6 | 21 | செவ் | நவ, 1-40 | ம, 23-3 | ஸி, 60 | 1 | ¼ | தச | தெ-மே | சுபம்விலக்க |
| 7 | 22 | புத | தச, 2-5 | பூ, 25-28 | அ, 60 | 1 | ¼ | ஏகா | தெற் | சித்திர ஆரம்பம் செய்ய |
| 8 | 23 | வியா | ஏகா, 3-58 | உ, 29-13 | ம, 29-13 ஸி | 1 | ¼ | துவா | மேற் | மத்வ ஏகாதசி |
| 9 | 24 | வெ | துவா, 6-55 | அ, 34-8 | அ, 34-8 ஸி | 0 | ¼ | திர | வ-மே | சுபமுகூர்த்தம் |
| 10 | 25 | சனி | திர, 11-15 | ஸி, 40 | ம, 40 அ | 0 | ¼ | சது | வ-ஸி | இமய தர்ப்பணம் |
| 11 | 26 | ஞா | ச●, 16-25 | சு, 46-48 | ஸி, 46-48 ம | 0 | 0 | அமா | ஆகா | *தீபாவளி |
| 12 | 27 | திங் | அமா, 22-18 | வி, 54-5 | ம, 54-5 ஸி | 0 | 0 | ... | பூமி | அரசமர பிரதக்ஷணம் |
| 13 | 28 | செவ் | பிர, 28-45 | அ, 60 | ஸி, 60 | 0 | 0 | பிர | ஜிழ | பூசலார் |
| 14 | 29 | புத | துவி, 35-38 | அ, 1-50 | ஸி, 60 | 0 | 0 | துவி | வட | சுபம்செய்ய |
| 15 | 30 | வியா | திரி, 42-25 | கே, 9-50 | பி, 9-50 ஸி | 0 | ½ | திரு | தெ-ஸி | விருச்சிகரவி, 18-18 |


அசல்



ஷண்முகம் பட்டணம்பொடி

காரம் மணம் நிறம் குணம் வாடை உள்ளது.

அநேக மெடல்கள் நற்சாட்சி பத்திரங்கள் பெற்றது.

[illegible] நெடிய [illegible] ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்று, நிசரி லெட்டர்களால் புகழ்பெற்று, ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான பார்சல்களைச் சேல் ஏஜண்டுகள் இலாபத்துடன் ரெயிலில் பெற்று, ஜில்லா, தாலுக்கா, டவுன், கிராமம் முதலிய குக்கிராமங்களிலும் கொண்டாடி, அசல் சேப்ரோல் வாடை, அசல் பசும் நெய் மணம், குளிர்ந்த குணம், இன்புறும் காரம், புதுவர் நிறம் இவ்வைந்தும் ஒருங்கே அமையப்பெற்று, நமது ஏஜண்டுகளுக்கு நற்கியாதி தந்து வியாபாரிகளுக்கு நற்பெயரளித்து உபயோகப்படுத்திய அன்பர்களுக்கு மனோபீஷ்டம் தந்து இந்தியாவில் ஏரானமாக செலவாகி வருவது எது? எங்கள் அசல் ஷண்முகம் பட்டணம் பொடியே. இனிமேலாவது மொத்த பேர்களும் எங்கள் அசல் ஷண்முகம் பொடியை வாங்கி உபயோகப்படுத்தி இன்புறுங்கள்.

ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி லிமிடெட்,
போஸ்டு பாக்ஸ் 140, மதுரை.

முதல் தரமானது

பார்சல் தபால் சார்ஜு

| பலம் | கிரயம் | தபால் சார்ஜு | பாக்கிங் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | அ. பை. | ரூ. அ. பை. | ரூ. அ. பை. | ரூ. அ. பை. |
| 8 | 0 0 | 0 5 0 | 0 1 0 | 1 6 0 |
| 20 | 1 12 0 | 0 8 0 | 0 2 0 | 2 6 0 |
| 40 | 3 8 0 | 0 14 0 | 0 3 0 | 4 9 0 |

2-வது தரமானது வீசை 1-க்கு ரூ. 3. ஸ்பெஷல் சரக்கு வீசை 1-க்கு ரூ. 4.
பாக்கிங் சார்ஜும் தபால் கூலியும் பிரத்தியேகமானது.



விநோத கதாமஞ்சரி, வெளிவந்து விட்டது!

## மாப்பிள்ளை மருமகளாதல்

நூலாசிரியர்: பண்டித கதாரத்ன
சே. கிருஷ்ணசாமி சர்மா.

தமிழ்நாடு வெகு நாட்களாய் எதிர்பார்த்திருந்த அரிய புத்தகம் இதுவே. இது நாவல் அல்ல. புராணமல்ல. வேதாந்தமல்ல. காவ்யமல்ல. பிரபந்தமல்ல. இது ஒரு விநோத கதா களஞ்சியம். புத்தகத்தைப் படிக்கத் தொடங்கியது முதல் முடியும்வரையில் மனதின் உற்சாகம் மிதமற்றிருக்கும். அநேக தடவைகள் படித்தாலும் ஆவல் தீராது. ஆண் பெண் அனைவரும் மதிக்கத்தக்க விஷயங்கள் அநேகமிருக்கின்றன. தமிழ்மக்கள் இதுவரை இவ்வித புத்தகம் படித்திருக்க மாட்டார். சில காபிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன.

ரப்கா கிதம் ரூ. 1—0—0
கிளேஸ் காலிகோ ரூ. 1—8—0

டி. எஸ். சாஸ்திரி அண்டு கோ.
தபால்பெட்டி நெ. 110, சென்னை.



விளம்பரம்

## சுதந்திரன்

ஆசிரியர்:
சு. நா. சுந்தர முதலியார்

இது இரங்கூனில் வாரந்தோறும் வெளிவரும் ஒரு அரிய செந்தமிழ்ப் பத்திரிகை. தேசிய உணர்ச்சி நிரம்பியது. பர்மாவிலும் மலேய நாடுகளிலும் இந்தியாவிலும் உள்ள தமிழர்களுக்கு ஒரு சிறந்த ஞானதீபிகை யெனவும் சுதந்தரக்கொடி யெனவும் விளங்குவது. விளம்பரங்களுக்கு ஏற்ற தகுதியுடையது.

சந்தா விகிதம்

| உள்நாட்டில். | வெளிநாட்டில். |
|---|---|
| 1 வருஷத்துக்கு 5 0 0 | 1 வருஷத்துக்கு 6 0 0 |
| 6 மீ த்துக்கு 2 8 0 | 6 மீ த்துக்கு 3 0 0 |

மானேஜர்:
"சுதந்திரன்" ஆபீஸ்,
39/37-வது வீதி, ரயில்வே பிளாக், இரங்கூன்.

# "செங்குந்த மித்திரன்"

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர்: ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.

இது உண்மைச் செங்குந்தர்கள் முன்னேற்றமடையும் வண்ணம் வெளிவரும் ஒரு மாதப் பத்திரிகை. இதில், செங்குந்தர்களின் பண்டைப் புகழைப் பற்றிய ஆராய்ச்சிக் குறிப்புக்களும், குலதிலகர் சரித்திரங்களும், விரதாதி பண்டிகைகளின் ஐதிகங்களும், பொதுவில் அறிவையும் நல்லுணர்வையும் புகட்டும் சிறந்த கட்டுரைகளும், வியாபார விவசாய வைத்தியக் குறிப்புக்களும், தொழில் முறைகளும், உலகவர்த்தமானங்களும், ஆங்காங்கே செங்குந்தரிடையே நிகழும் முன்னேற்றக் கிளர்ச்சிகளின் விருத்தாந்தங்களும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பிரசாரம் முதலிய தொண்டுகளின் விவரங்களும், வேடிக்கைத் துணுக்குக்களும், விநோதக் கதைகளும் சம்பாஷணைகளும், செங்குந்தர் பஞ்சாங்கம் முதலியவைகளும் வெளிவருகின்றன. அன்பர்களின் ஆதரவு அதிகமாகக் கிடைக்குமாயின், பத்திரிகையைத் துவக்கும் ஆண்டில் முன்னிலும் அழகாகவும், இன்பகரமாகவும், பலசுவையுந் ததும்புமாறு சித்திரங்களோடு கூடிய சிறிய விஷயங்களைக் கொண்டதாகவும், பொதுவில் நம்மவர் அறிவும் ஒழுக்கமும் ஓங்கி உன்னத வாழ்க்கைக்குரிய சாதனங்களை அடையும் நெறியிலும் வெகு சிறப்பாகத் தோற்றுவிக்க உத்தேசிக்கிறோம். ஆகவே, நமது குலப்பத்திரிகைக்கு அன்பர்கள் ஆதரவு அதிகமும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஒவ்வொரு செங்குந்த குடும்பமும் 'செங்குந்த மித்திர'னை வரவழைக்கவேண்டுமென்னும் கொள்கை நம்மவருள் பரவுமானால் நமது 'மித்திர'னுக்கு வலுவேற்பட்டு அதன் வாயிலாக நமது குலமுன்னேற்றம் சீக்கிரம் சித்தியடையுமென்பதில் யாதொரு ஐயமுமில்லை. இக்கொள்கையையே நமது குலப்பிரமுகர்கள் தமது வாக்குச் செல்லுமிடங்களிலெல்லாம் நாட்டி வருவார்களென நம்புகின்றோம்.

| | | |
|---|---|---|
| தபாற்கூலி உள்பட வருஷச் சந்தா | ரூ. அ.பை. | |
| இந்தியா, இலங்கை, பர்மா முதலிய இடங்கட்கு | 1—8— | தனிச்சஞ்சிகை ஒன்றுக்கு |
| பினங்கு, சிங்கப்பூர், ஆப்பிரிகா ,, | 2—0— | ரூ. 0—2—6. |

### "செங்குந்தர் பிரபந்தத் திரட்டு"

என்னும் அரிய பெரிய நூல் வெளிவந்து விட்டது. இதனுள் கவிச்சக்ரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் செய்தருளிய 'ஈட்டி எழுபது' 'எழுப்பெழுபது' இவ்விரண்டும், புகழேந்திப்புலவர் செய்தருளிய 'திருக்கை வழக்கமும்' மற்றைய பெரும்புலவர் பலர் செய்தருளிய 12 பிரபந்தங்களும் அடங்கும்.

'ஈட்டி யெழுபது' கச்சிப் பிரதாபனார் செய்தருளிய பேருரையுடன் கூடியது. இவ்வுரை செங்குந்தரது வழக்கம், ஒழுக்கம், அறிவு, ஆற்றல், கொடை முதலானவற்றை மிகச் செவ்வையாக எளிய நடையில் விளக்குவது.

இந்நூற்கு, தமிழாசிரியர் திருவாளர் கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் எழுதிய முன்னுரையும், தமிழாசிரியர் ஸ்ரீ மு. இராகவையங்கார் அவர்கள் எழுதிய ஆராய்ச்சியுரையும், கல்வெட்டாராய்ச்சியினர் ஸ்ரீமத் சுப்பிரமணிய தேசிகனார் எழுதிய அரிய கல்வெட்டுரையும், மற்றும் பல நல்லிசைப் புலவர்களின் மதிப்புரைகளும், ஸ்ரீலஸ்ரீ காஞ்சி நாகலிங்க முனிவர் அவர்களால் பல ஆராய்ச்சிக் குறிப்புக்களைக் கொண்டு எழுதிய பதிப்புரையும் கொண்டது.

இப்புத்தகத்தைச் செங்குந்த குலமக்கள் ஒவ்வொருவரும் வாங்கி விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாதலால் இதனைக் கண்ணுறும் சகோதரர்கள் இப்பிரபந்தத் திரட்டை ஆதரிக்க வேணுமாய்க் கோருகிறோம்.

உயர்ந்த பதிப்பு காலிகோபயிண்டில் பொன் கிலிட் செய்தது விலை ரூ. 3-0-0 } தபாற் கூலி அ. 8
'செங்குந்த மித்திரன்' சந்தா நேயர்களுக்கு மட்டும் ,, ,, 2-8-0 } பிரத்தியேகம்.

**தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் சட்டதிட்டங்கள் விலை அணா 2.**

புத்தகம் கிடைக்குமிடம்:—

மானேஜர், 'செங்குந்த மித்திரன்' ஆபீஸ்,
நெ. 31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை.

This Journal is published by T. N. Sabapathi Mudaliar for the South Indian Senguntha Mahajana Sangam, Madras, at 31 Armenian Street, Madras, and is printed by T. C. Nataraja Mudaliar at the Cambridge Press, 2/19-A, Armenian Street, Madras.